# விடுதலைப்புலிகள்

குரல்: 125 ஆடி – ஆவணி – 2005 அன்பளிப்பு: 12/=



03 இன்னொரு ஏய்ப்பர் வருகிறார்...
05 சிங்கள அரசிடமிருந்து...
06 தமிழீழ மண்ணில் சூழல்...
08 வவுனியாத் தீர்மானம்...
15 துணை இராணுவப் படைகள்...


# அவசரகாலச் சட்டம் பிரகடனம் தமிழர் தாயகத்தில் பதற்றம்

**தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் சிங்களப் படையினர்க்கு அரசு வழங்கியுள்ள ஒரு கொடூர ஏற்பாடே அவசரகாலச் சட்டமாகும். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி கடந்த இரண்டு தசாப்த காலமாக சிங்களப் படைகள் தமிழர் தாயகத்தில் ஒரு காட்டாட்சி நடாத்தி வருகின்றனர். ஆயிரக்கணக்கான தமிழர்களின் கொலைகளுக்கும், சித்திரவதைகளுக்கும், காணாமல் போதல்களுக்கும் இந்தக் கொடூர சட்டமே காரணமாக அமைந்துள்ளது. இன்றைய சமாதான சூழலில் சந்திரிக்கா மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதிற்கும் அமுல்படுத்தியுள்ளது. போர்நிறுத்த உடன்பாடும், அவசரகாலச் சட்டமும் சமநேரத்தில் இயங்கமுடியாது. சந்திரிக்கா அரசு பிரகடனப்படுத்தியுள்ள அவசரகாலச் சட்டம் போர்நிறுத்த உடன்பாட்டை பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.**

போர்நிறுத்த உடன்பாட்டின் முக்கிய நோக்கம் தமிழர் தாயகத்தில் நிலவும் போர்ச்சூழலை அகற்றி அங்கொரு சமாதானச் சூழலை உருவாக்குவதுதான்.

இத்தகைய இயல்பு நிலையில் தான் சமாதானப் பேச்சுக்கான உகந்த சூழல் பிறக்கும். சமாதானப் பேச்சுக்களும் குழப்பமின்றித் தொடரும். இது அரசும் - புலிகளும் பேசி உடன்பட்ட விடயமாகும்.

ஆனால், கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து சந்திரிக்கா அரசு அவசரகால நிலையைப் பிறப்பித்து மீண்டும் போர்ப் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

கதிர்காமர் கொல்லப்பட்டது கொழும்பு மாநகரில். அதுவும் அங்குள்ள அதி உயர்பாதுகாப்பு வலயத்திற்குள்.

கொலையாளிகளைப் பிடிப்பதே நோக்கமென்றால் நகரின் போக்குவரத்தை நிறுத்தி - அங்கே ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து - தேடுதல்களை நடாத்தி அதைச்செய்ய முயன்றிருக்கலாம். அவ்வாறு செய்வதுதான் நடைமுறை.

ஆனால், அதற்குப் பதிலாக நாடு முழுவதும் அவசரகால நிலையை அரசு பிறப்பித்தது கொலையாளிகளைக் கைது செய்யவல்ல. அதற்கும் அப்பால் ஏதோ ஒரு மறைமுக அரசியல் நோக்கத்தை நிறைவேற்றவே என்பது தெளிவாகின்றது.

அவசரகாலச் சட்டம் என்ற அம்பின் மூலம் போர்நிறுத்த உடன்பாட்டை அடித்து வீழ்த்தவே சிங்கள அரசு முயல்கின்றது.

சிங்கள நீதிமன்றின் தீர்ப்பு பொதுக் கட்டமைப்பை முடக்கியதுபோல சிங்கள அரசின் அவசரகாலச் சட்டம் கண்காணிப்புக் குழுவின் சேவையை - போர்நிறுத்த உடன்பாட்டின் இருப்பை பெரும் ஆபத்திற்குள்ளாக்கியுள்ளது என்றே கூறலாம்.

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட உடனேயே யாழ்ப்பாணத்தில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு - கொழும்பு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

இந்த அவசரகாலச் சட்டம் காரணமாக இந்தக் கைதுபற்றி சிங்களப் படைகளிடம் புலிகள் இயக்கமும் பேசமுடியாது, கண்காணிப்புக் குழுவும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது. படையினர் தாம் விரும்பியவாறு கைதுசெய்யவும், கொல்லவும், சித்திரவதை செய்யவும் இந்தச் சட்டம் அவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

இப்போதே நாடுமுழுவதும் தமிழர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுகின்றனர். கொழும்பில் பெருமளவு அப்பாவி மக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மன்னாரில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அனுசரணையுடன் இயங்கிவந்த தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றில் கடந்த மூன்று மாதங்களாக

**(02ஆம் பக்கம் பார்க்க)**



# சிங்கள அரசின் பிண அரசியல்

**புலிகளின் குரல்**

**ச**ந்திரிகா அம்மையாரின் “சமாதானத்திற்கான போர்” என்ற இராணுவ சித்தாந்தத்தை சர்வதேச நாடுகள் சிலவற்றில் வெற்றிகரமாகச் சந்தைப்படுத்திய விற்பனை முகவராக லக்ஸ்மன் கதிர்காமர் செயற்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் என்ற பெயருடன் உலகவலம் வந்த கதிர்காமர் உண்மையில், சர்வதேச அரங்கில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்துவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சராகவே தொழிற்பட்டிருந்தார்.

தமிழர் தாயகத்தில் சிங்களப் படைகள் நடாத்தி வந்த தமிழினப் படுகொலைகளையும் - தமிழரின் போராட்ட நியாயங்களையும் சர்வதேசத்திற்கு மறைத்ததில் பெரும் பங்கு வகித்தவர் கதிர்காமர். ஒரு சில படுகொலைகளை உலகிற்கு அம்பலப்படுத்திய சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களை கடுமையாகக் கண்டித்த கதிர்காமர், அவ்வாறான படுகொலைகள் இங்கே நடக்கவேயில்லை யென்றும் மறுப்பறிக்கைகள் வெளியிட்டிருந்தார். புலிகள் இயக்கம்தான் பயங்கராவாதச் செயல்களைப் புரிந்து வருகின்றது என்று பொய்ப்பிரச்சாரங்கள் செய்து சில நாடுகள் புலிகளை தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கமாக அறிவிக்கவும் முன்னின்று உழைத்திருந்தார்.

இவை காரணமாக சிங்களப் பேரினவாதிகளின் செல்லப்பிள்ளையாக கதிர்காமர் விளங்கிவந்தார்.

ஆனால், கடந்த மூன்றரை ஆண்டு சமாதான சூழலும், அந்தக் காலப்பகுதியில் புலிகள் நடாத்திய அரசியல் வேலைகளும் கதிர்காமர் செய்த முன்னைய வேலையை, சர்வதேச மட்டத்தில் அர்த்தமிழக்கச் செய்து விட்டன.

போர்நடந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களப்படைகள் எவ்விதம் நடந்துகொண்டன என்ற உண்மைகளையும், தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கான அரசியல் நியாயங்களையும், புலிகள் இயக்கம், சர்வதேச சமூகத்திற்கு நேரடியாகவே விளங்கியது. அத்துடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் மனநிலை யுடன் சிங்கள அரசு இல்லை என்ற உண்மையையும் புலிகள் இக்காலப்பகுதியில் விளக்கியுள்ளனர். இப்போது, புலிகள் இயக்கத்திற்கும் - தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கும் சர்வதேச ஆதரவு பெருகிவருகின்ற யதார்த்தம் பிறந்துள்ளது.

இத்தகைய அரசியற் புறச்சூழலில் கதிர்காமரின் தேவை சிங்களப் பேரினவாதத்திற்குத் தேவையாகி விட்டது.

இந்த நிலையிலேயே கதிர்காமர் கொல்லப் படுகின்றார். அதுவும், மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் இருந்த கதிர்காமர் இருள்சூழ்ந்த இரவில் - அவரது இல்லத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். கொலையாளி யார் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஊகத்தின் அடிப்படையில் புலிகளை நோக்கி அரசு குற்றச்சாட்டுக்களைத் தொடுத்துள்ளது.

கடந்த மூன்றரை வருடகாலமாக சிங்கள அரசு டன் புலிகள் இயக்கம் நடாத்திவந்த அரசியற் சமரில் புலிகள் இயக்கம் வெற்றிக்கனி பறித்து இப்போது சர்வதேச ரீதியில் மதிப்புடன் காணப்படுகின்றது.

இந்த சர்வதேச மதிப்பைச் சிதைக்கும் அரசியற் சூழ்ச்சியுடனேயே கதிர்காமரின் கொலைக்கான பழியை புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு சுமத்த முனைகின் றது.

இந்தச் சமாதான காலத்தில் 25ற்கும் மேற்பட்ட புலிவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். புத்திஜீவிகள் - புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் என்று இருநூறிற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் எவருக்கும் காட்டாத அளவுக்கு கதிர்காமரின் கொலையை மட்டும் அரசு தூக்கிப்பிடித்துக்கொண்டு ஒரு பிண அரசியலை நடாத்துவது ஏன்!

சிங்களப் பேரினவாதத்தின் கூலிப்படையாளைப் போல் இருந்து திறமையாகச் செயற்பட்டார் என்பதைத் தவிர கதிர்காமர் குறிப்பிடும்படி என்ன செய்தார்?

இன்று அவரை வைத்து ஒரு பிண அரசியலை சிங்கள அரசு செய்யுமளவுக்கு இந்த நாட்டின் வளர்ச்சிக்கு அல்லது மக்களது நல்வாழ்விற்கு அவர் செய்த சேவை என்ன!

ஒன்றுமேயில்லை....

பேரினவாதிகளின் போர் வெறிக்குத் தீனி போட்டுக்கொண்டிருந்தார். சமாதானத்தைத் தோற்கடிக்க கடுமையாக முயன்றார். இரத்தக் களரியை ஊக்கு வித்தார். சிங்கள - தமிழ் இளைஞர்களின் சாவில் குளிர் காய ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார். நாட்டை சுடுகாடாக்கி - மக்களை துன்பக் கடலில் அமிழ்த்த முனையும் குரூர மனநிலையைக் கொண்டிருந்தார்.

சந்திரிகா அரசில் சுமார் பத்து வருடங்களாக கதிர்காமர் அமைச்சர் பதவி வகித்துவருகின்றார். ஒரு தடவைகூட அவர் தேர்தலில் நிற்கவுமில்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்படவுமில்லை. போர்த் தளபதிகளை நிய மிப்பது போல, அதே நோக்கத்துடன், கதிர்காமரும் அமைச்சராக்கப்பட்டார். சிவில் உடையில் இராணுவப் பணிகள் புரிந்த சிங்கள அரசின் போர் அமைச்சராகவே கதிர்காமரை தமிழ்மக்கள் நோக்குகின்றனர்.

போருக்கான புறநிலைகளை உருவாக்குவதைத் தவிர கதிர்காமர் வேறெந்த அரசியல் பணியும் செய்ய வில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது கதிர்காமர் தனது தீவிர எதிர்ப்பைக் காட்டியிருந்தார். பேச்சுவார்த்தைகள் நடந்தவேளையிலும் அதைக் குழப்பி யடிக்கும் நோக்குடனேயே கருத்துக்களைக் கூறிவந்தார். பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டை ஆரம்பத்திலிருந்து இறுதி வரை எதிர்த்தார். கண்காணிப்புக் குழுவையும் கண்டன விமர்சனம் செய்தார். சமாதானத்திற்குப் பாடுபடும் நோர்வே அரசையும் சாடி, கருத்துக்கள் வெளியிட்டிருந்தார். மனிதாபிமானப் பணிகள் புரிந்துவரும் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களையும் கொச்சைப்படுத்தி திட்டித் தீர்த்திருந்தார்.

இவ்விதம், இலங்கைத்தீவில் சமாதானத்தைத் தோற்றுவிக்கும் இலக்குடன் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக் கைகளையும் - அவற்றை முன்னெடுத்த எல்லாத் தரப் பினரையும் கதிர்காமர் கண்டன விமர்சனம் செய்தார்.

இவை காரணமாக சர்வதேச மட்டத்தில் மதிப் பிழந்த ஒரு மனிதராக கதிர்காமர் பார்க்கப்பட்டார்.

இப்போது அவர் மர்மமான வகையில் கொல்லப் பட்டும் விட்டார். அந்த மர்மத்தை மறைத்துவிட்டு சமாதானத்திற்காகப் பாடுபட்ட ஒரு தலைவன் புலிகள் இயக்கத்தால் கொல்லப்பட்டுவிட்டார் என்று புலிகள் மீது பழிபோட்டு - முதலைக்கண்ணீர் வடித்து சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடாத்த சந்திரிகா அரசு முனை கின்றது.

சிங்கள அரசின் இத்தகைய சதி அரசியலுக்கு இனிமேலும் சர்வதேச சமூகம் பலியாகிவிடக் கூடாது என்று புலிகள் இயக்கம் கேட்டுக்கொள்கின்றது. ●

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டி ருந்த இரண்டு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட பதினை ந்து பெண்கள் காரணமேதுமின்றி கைது செய்யப்பட்டனர்.

இவற்றால் தமிழர் தாயகப்பகுதி எங்குமே பதற்றநிலை தோன்றியுள்ளது. இங்கு பணிபுரியும் மனித உரிமைக் குழுக் களும் எதுவும் செய்யமுடியாது முடங்கிப் போயுள்ளன.

தமிழருக்கு எதிராக ஒரு முயற் சியை சிங்கள அரசு எடுக்கும்போது சிங்க ளக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசுக்கு ஆதரவு கொடுக்கும் இனவெறி அரசியலை இந்தத் தடவையும் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

சமாதானத்தைத் தோன்றுவிக்க என்ன முயற்சிகளை, யார் எடுத்தாலென்ன சிங்களதேசம் - சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களைப் பொருட்படுத்தாமல் தங்களது நலனை மட்டும் முன்நிறுத்தி ஒன்றிணை வதும், செயற்படுவதும் தமிழ்மக்களை விரக்திக்குள்ளாக்கி வருகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை பலப் படுத்தி நடைமுறைப்படுத்தும் நோக்குடன் புலிகளுக்கும் - அரசுக்குமிடையில் நேரடிப் பேச்சுக்கள் நடக்க இருக்கின்றன. ஆனால், அவசரகாலச் சட்டம் அகற்றப் படாது - நீண்டநாட்களுக்கு இருக்குமே யானால் நேரடிப் பேச்சிலும் எதையும் சாதிக்கமுடியாத அவலநிலை ஏற்படவும் இடமுண்டு. ஆகவே, அவசரகாலச் சட்டம் உடனடியாக அகற்றப்படவேண்டும் என் பதே சமாதானத்தை விரும்பும் அனைத் துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். ●



www.eelamview.com

# “இன்னொரு ஏய்ப்பர் வருகிறார்”

- க.வே.பாலகுமாரன் -



சந்திரிக்கா அம்மையார் தமிழ்நாட்டில் பிறந்திருப்பாரேயானால் என்ன நடந்திருக்கும்? இன்று அங்கு தலைசிறந்த அதாவது பிறர் தலையைச் சுத்தவைக்கும் “மெகாத்தொடர்” எழுத்தாளராக பெரும் புகழ்பெற்றிருப்பார். சிறிலங்கா அரசியலில் முடிவுதெரியாத அரசியல் மெகாத்தொடரின் நிரந்தர நாயகியவர். இன்றைய நாளைக் கடந்து மறுநாளை அடைவதற்காக எதனையும் செய்ய அவர் எப்போதும் ஆயத்தமாகவுள்ளார். இதுவொரு உலக சாதனையென்பது மட்டுமல்ல உலகின் விசித்திர உளவியல் சிக்கலாகவும் மாறிவிட்டது. ஈராக்கின் தொடர் குண்டுவெடிப்புச் சிதறல்களோ, இலண்டன் வெடிப்பின் அதிர்வுகளோ, மும்பாய் வெள்ளப்பெருக்கோ, யோன் கராங்கின் திடீர் மரணமோ அம்மையாரின் பரபரப்பு அரசியல் தொடரின் முன் இரண்டாம் நிலையே. தினக்குரலில் பேராசிரியர் சிவசண்முகம் எழுதியதுபோல் அம்மையாருக்குச் சொல்ல முன் சொல்லப்போவதென்ன என்பதும் தெரியாது. சொன்னபின் சொன்னதென்னவென்பதும் புரியாது. இது ஒருவித அத்துவித நிலை; அம்மையாருக்கு வாய்த்த நிலை.

எனவே அம்மையார் தொடர்ந்தும் எவ்வாறு ஆட்சியிலிருக்கப் போகின்றார் என்பதே உலகின் முதன்மைச் சிக்கல் போலாகிவிட்டது. அடுத்த ஆண்டுவரை பதவியை நீட்டிப்பது, அதற்கு முடியாவிட்டால் வேறு வழிகளைக் கையாளுவது என அவர் இடைவிடாது செயற்படுகின்றார். தாக்குதலொன்றிலிருந்து 1999, டிசம்பரில் நூலிழையில் உயிர்தப்பிய அவர் 1999, டிசம்பர் 22ஆம் திகதி (அதாவது சனாதிபதித் தேர்தல் முடிவடைந்த அதே மாதத்தில்) வெளிப்படையாக சத்தியப்பிரமாணம் செய்தார். அரசியல் யாப்பின்படி சனாதிபதியினது முதலாவது பதவிக்காலம் முடிவடைந்து இரண்டாம் பதவிக்காலம் 2000ஆம் ஆண்டு நவம்பரிலே ஆரம்பிக்க வாய்ப்பிருந்தது. ஆனால் அம்மையார் அவசரப்பட்டு 1999 டிசம்பரில் சத்தியப்பிரமாணம் செய்தார். இதனால் சனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதுவென சிங்களம் திகைக்க நேரிட்டுள்ளது. இன்னொரு இரகசிய பதவிப்பிரமாணம் பிரதம நீதியரசர் முன் 2000, நவம்பர் வாக்கில் எடுத்ததாக அம்மையார் அளந்துவருகின்றார். திகதிக் குழப்பத்தை வைத்தாவது ஆளப் பார்க்கின்றார்.

அதேவேளை அரசியல் யாப்போ சனாதிபதியினைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு மாதத்திற்குக் குறையாமலும் இரு மாதத்திற்கு மேற்படாமலும் நடைபெறுதல் வேண்டுமென்கிறது. அதேவேளை தேர்தல் ஆணையாளரே திகதியையும் தீர்மானித்து தேர்தலையும் நடத்தவேண்டுமெவும் அது கூறுகின்றது. அதாவது அம்மையாரின் பொய்யெது, புழுகெது என்பதை தேர்தல் ஆணையாளரே தீர்மானித்தல் வேண்டும். ஆனால் அவரோ “ஆளைவிட்டால் போதுமென்றும்” அம்மையார் மீதும் கடுப்போடும், பதவியில் வேண்டா வெறுப்பாகவிருப்பதால் அநேகமாக இவ்வருட முடிவிற்குள் சனாதிபதித் தேர்தல் நடத்த முடிவெடுப்பார் என நம்பப்படுகின்றது. அதேவேளை, எலியை விழுங்கிய சாரைபோல பதுங்கிக்கிடந்த ரணிலோ கடுகதி வேகத்தில் பயணிப்பதும் அம்மையாரைப் பெரிதும் கலவரப்படுத்துகின்றது.

எனவே தனது பதவியை 2006வரை நீட்டிப்பதும் சனாதிபதி பதவிக்கான சுதந்திரக்கட்சியின் வேட்பாளரை அறிவிக்காமல் விடுவதும் ஆபத்தான நிலையைத் தோற்றுவிக்குமென்பதால் வேண்டாவெறுப்பாகவே மகிந்தரை சனாதிபதி வேட்பாளராக அவர் நியமித்தார். அதுவும் எவ்வாறு? “நாட்டு மக்களின் பணத்தினை திருடுபவர்களும் மக்களைக் கொலைசெய்பவர்களும் நாட்டின் அரசுத் தலைவர் பொறுப்பிற்கு வரமுடியாது” இவ்வாறு அநுராதபுரத்தில் ஆதரவாளர் மத்தியில் யூலை 24இல் அவர் பேசுகின்றார். இத் திருமொழி பகர்ந்து நான்கு நாட்களுக்குள் அடுத்த அறிவிப்பு. மகிந்தரை அவர் முன்மொழிகின்றார். (சிங்கள அரசியலுலகிலே இப்போது எல்லாமே வேண்டா, வெறுப்பாகவும், தவிர்க்கமுடியாத நிலையிலுமே நடக்கின்றது. இதற்கு யார் அல்லது எது காரணம் என்பதையறியாத எம் மக்கள் யாருமிருக்க முடியாதென்பதும் இதுவோர் புதிய பரிமாணமென்பதையும் நாம் பதிவில் கொள்வோம்) இதற்கிடையில் இத்தகைய அறிவிப்புக்களை பயனற்றுப் போகச்செய்ய அடுத்த அறிவிப்பு. தேர்தலுக்கான திகதியை அறிவிக்குமாறு கோரி உயர் நீதிமன்றிற்கு அம்மையார் விண்ணப்பம். சிறிலங்காவில் உயர்நீதிமன்றமென்பது சனாதிபதி செயலகத்தின் சமையலறையிலல்லவா இயங்குகின்றது. இப்போது இவையாவும் பிழைத்தாலும் அடுத்த அறிவிப்பும் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது பெரும்பொறி. முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அவர் முயலக்கூடும். இவ்வாறு செய்வதன்மூலம் ரணில் பதவியைப் பெற வழியில்லாமலும் மகிந்தரை முறையாக பழிவாங்கும் வகையில் அவரை வெறும் நாடாளுமன்ற பிரதிநிதி பதவிக்குப் போட்டியிட வைத்து அனுராவை பிரதம அமைச்சராக்கி பண்டா குடும்பத்து ஆட்சியைத் தக்கவைக்கவும் முடியும். இவ்வருட முடிவிற்குள் தான் பதவிவிலக நேர்ந்தால் பிரதமரை தற்காலிக சனாதிபதியாக்கியும் அனுராவை பதவிக்குவர வழியேற்படுத்தவும் முடியும். இன்னொரு ஆய்வாளரோ, இன்னொரு குண்டை தூக்கிப் போடுகின்றார். பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் உதவியோடு யாப்பினைத் திருத்த முடியுமென்றால் சனாதிபதிப் பதவியை ஒழித்து தனது பின்வருகைக்கு வழிகோலவும் அவருக்கு வாய்ப்புள்ளதாம். **இவ்வாறாக ஆய்வாளருக்கு இடைவிடாமல் தொல்லைகொடுக்கும் அம்மையார் எல்லோரையும் மண்டையைப் பிய்க்க வைக்கிறார் என்பது மட்டும் உண்மை.** இன்னொரு உண்மையும் மிகத் தெளிவாக இப்பெருங் குழப்பத்திலும் மேலாகின்றது. அம்மையார் இலேசில் பதவிவிட்டு விலகப்போவதில்லை என்பதுதான் அது.

இத்தகைய சிங்களத்தின் எதிர்வுகூறமுடியாத நாசகாரத்தன்மை அரசியல் பற்றி இப்பத்தியில் வேலை மினக்கெட்டு எழுதுவதேன் என்கிற கேள்வி எழுகின்றது. **இவற்றினை வாசிக்கும் எம்மினிய வாசகர்களுக்கு குழப்பத்திற்குப் பதிலாக மிகத் தெளிவுவரவேண்டும்மென்பதே எம் அவா. ஏனெனில் தமிழ்பேசும் மக்களை முற்றிலுமாகத் திசைதிருப்ப, முதன்மைச் சிக்கலிலிருந்து பராக்குக் காட்ட, வரலாறு தன்னை எமக்கு மிக்க மகிழ்வுடன் உவந்தளித்திருக்கும் வாய்ப்பினை எம்மைப் பயன்படுத்தாது தடுக்க, எம்மை கீழ்மை நிலையில் வைத்திருக்கவே இத்தேர்தல் நாடகம் ஆடப்படுகின்றது. எப்போதுமே சிங்களம் தனது அரசியல் இருப்பின் சிக்கலை எம் தலையில் கட்டியடிப்பதும் தமிழ்பேசும் மக்களின் அழிவில் தமது இருப்பினை கட்டியெழுப்புவதும் இம்முறை நிகழக்கூடாது.** மீண்டும் பழைய உத்தி, புதிய மீட்பர் வருகின்றார். அவர் தோளில் குங்குமநிறத் துண்டோடும் முகத்தில் நடிகனின் காந்தச் சிரிப்போடும் ஏழைப் பங்காளனாக எம்மை நோக்கி இரு கரங்களையும் நீட்டியவண்ணம் வருகின்றார். (மடுவிற்கும் வர அவர் விருப்பம் தெரிவித்தாராம்) அவரது சால்வைத்துண்டு பண்டாவையும் புன்சிரிப்பு மக்கள் திலகத்தினையும் நினைவுபடுத்த “தெற்கின் சாதாரணன்” வருகின்றார். பெருமெடுப்பில் எம்மை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் ஏய்க்க அவர் வருகின்றார். இங்குள்ள நகைமுரண் என்னவென்றால் மகிந்தரின் எழுச்சியை நிச்சயமாக அம்மையார் விரும்பாதபோதும் அவரின் செல்வாக்கின் அழுத்தத்தினை அம்மையார் நிராகரிக்க முடியவில்லை என்பதே. இதன் காரணத்தாலே மகிந்தர் முதலமைச்சராக முன்னர் வரமுடிந்தது.

எதிர்பார்த்தது போலவே மகிந்தரைச் சுற்றி ஆதரவு திரள்கின்றது. போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டால் மேலும், எமது ஆதரவு உமக்கேயென பொதுவுடமை பேசி பூண்டாகத் தேய்ந்த வாசுதேவவே கூறிவிட்டார். யாரிந்த பேர்சி மகிந்த ராசபக்ச? சிங்கள தேசியத்தின் மையநிலமான தெற்கின் புதல்வனாக, மைய இடதுநிலை கொண்டவராக, தொழிலாளர் நலன் விரும்பியாக, கொழும்பு மேட்டிமைத் தனத்தோடு தன்னை இனம் காட்டாதவரான மகிந்தரின் இலக்கென்ன? பண்டா குடும்பம் போலவே ராசபக்ச குடும்பமும் நீண்ட அரசியல் பாரம்பரியம் கொண்டது. அது கண்டியென்றால் இது அம்பாந்தோட்டை. சிங்கள அரசியல் மையங்கள் இரண்டு. சுதந்திரத்திற்கு பின்னாலான சிங்கள அரசியல் வரலாற்றில் எவ்வளவு உரிமையை சேனநாயக்கக்களின் போகத் தலை குடும்ப மரபும் பண்டாக்களின் அத்தகைய குடும்ப மரபும் கொண்டுள்ளதோ, அவற்றிற்கும் சிறிதும் குறையாத உரிமையினை ராசபக்சக்களின் அம்பாந்தோட்டை மரபிற்கும் உண்டென அஜித் சமரநாயக்கா எழுதுகின்றார். இங்குள்ள மிகச்சுவையான முக்கியமான தகவலென்னவென்றால் 1951இல் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பண்டா வெளியேறியபோது அவருக்குத் துணையாக அவருடன் கூடவே வெளியேறியவர் மகிந்தரின் தந்தையான காலம்சென்ற டி.ஏ.ராசபக்ச. அதுபோலவே இவரது இரண்டு உறவினர்களான ஜோர்ச்சு, லக்சுமன் ராசபக்சக்களும் புகழ்பெற்ற அரசியல்வாதிகளாவர். இவர்களின் நிழலில் வளர்ந்தவர்தான் இன்றைய சனாதிபதி வேட்பாளர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோல்விகண்ட காலகட்டங்களின் பொழுதும் கூடவே நின்று விசுவாசமாக உழைத்த தனது குடும்பத்திற்கு கண்டி “வளவுக்காரர்” செய்ததென்ன? பண்டா குடும்பத்திற்கு படிக்கல்லா ராசபக்ச குடும்பம்? இவை மகிந்தரின் மனத்திலெழும் கேள்விகள். இருபத்திநான்கு வயதில் 1970களில் பெலியத்தை பிரதிநிதியாக நாடாளுமன்றிற்குள் நுழைந்து முப்பத்தைந்து வருடத்திற்குமேலாக அனுபவம்பெற்ற இவரின் கேள்விகளுக்கு ஒரு வரலாற்றுப் பதிலுண்டு. அதுதான் இன்னொரு கொப்பேக்கடுவவாக மகிந்தர் மாறுவாரா? என்பதேயது. சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்ட நிலையில் 1982 ஒக்டோபர் மாத சனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர் என்கிற கிழட்டு நரிக்கெதிராக போட்டியிடுவதற்கு தெரிவான கெக்டர் கொப்பேக்கடுவா தோல்வியை தழுவினார் என்பதை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.



ஆகவே நடக்கப்போவது என்ன என்பது தெளிவாகின்றது. அதுபோலவே இதுவரை காலமும் எவ்வித நிபந்தனையுமின்றி சிறிலங்காவிற்கு அதுவொரு அரசு என்கின்றமையால் முண்டுகொடுத்த சர்வதேச சமூகம் வெட்கித் தலைகுனியும் நிலையேற்பட்டுள்ளது. சிங்கள அரசியாளர்களுக்கு தமது சொந்த நாடெனக் குறிப்பிடும் நாடு குறித்து உண்மையிலே பற்றுள்ளதா? தேசப்பற்றென ஜே.வி.பியினரும், கெல உறுமயக்காரரும் கத்துவது வெறும் பதவிப் பற்றென்பதும், இனித் தொடர்ந்தும் சிறிலங்காவிற்குத் துணைநிற்றல் எவ்வகையாலும் நியாயப்படுத்த முடியாதென்பதும் புரியப்படுவதால் ஒரு **மீளாய்வு நிலைக்கு உலகம் தள்ளப்பட்டுள்ளதும் உணரப்பட்ட நிலை.** ஆகவே இப்பொழுது எம் மக்கள் நினைவிற்கொள்ளவேண்டிய இருவரின் கருத்துக்களைக் கூறிவைக்க விரும்புகின்றோம். 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் திகதி புதன்கிழமை கறுப்பின மக்களின் மனித உரிமைகோரி நடத்திய பேரணியின் பொழுது லிங்கன் நினைவிடத்தில் மாமனிதர் மாட்டின் லூதர்கிங் கூறியது எமக்குமானது. **“என்னிடம் கனவொன்றுள்ளது. நண்பர்களே ஒன்றினை நினைவிற் கொள்ளுங்கள். இன்றும், நாளையும் நாம் துன்பத்தினை எதிர்நோக்க வேண்டியிருந்தபொழுது கனவொன்றை நான் காண்கின்றேன். இந்த நாடு ஒருநாள் உயிர்த்தெழுமென்றும் அனைத்து மனிதர்களும் சமமானவர்கள் என்கிற உண்மைகள் விளங்கும்... ஒடுக்குமுறையின் வெப்பத்தினால் வெந்து தணியும் இப்பூமி விடுதலை நீதியின் பாலைவனப் பசும்சோலையாக மாறுமென கனவு காண்கிறேன்”.** ஆகவே நாமும் கனவு காண்போம். அதேவேளை கனவினை நனவாக்க கனவிலிருந்து விடுபடுவோம். அப்பொழுது ஏ.கே.வில்சன் தனது நூலான இரண்டாக உடையும் சிறிலங்கா (Brake up of Srilank, 1988) என்கிற நூலில் எழுதியது நிறைவேறும். “எனது ஆழமான கருத்தென்னவென்றால் சிறிலங்கா ஏற்கெனவே இரண்டு தனித் தனிப் பகுதிகளாக பிரிந்துவிட்டது. இப்போது இந்நிலை மனத்தின் நிலை. இம் மனநிலை நடைமுறை நிலையாக மாறுவது காலத்தைப் பொறுத்தது” அவர் குறிப்பிட்ட காலம் இக்காலம், எம் தலைவனுக்கு வாய்த்த காலம்; அதுவே எம் காலம். ●


> **தமிழ்பேசும் மக்களை முற்றிலுமாகத் திசைதிருப்ப, முதன்மைச் சிக்கலிலிருந்து பராக்குக் காட்ட, வரலாறு தன்னை எமக்கு மிக்க மகிழ்வுடன் உவந்தளித்திருக்கும் வாய்ப்பினை எம்மைப் பயன்படுத்தாது தடுக்க, எம்மை கீழ்மை நிலையில் வைத்திருக்கவே இத்தேர்தல் நாடகம் ஆடப்படுகின்றது. எப்போதுமே சிங்களம் தனது அரசியல் இருப்பின் சிக்கலை எம் தலையில் கட்டியடிப்பதும் தமிழ்பேசும் மக்களின் அழிவில் தமது இருப்பினை கட்டியெழுப்புவதும் இம்முறை நிகழக்கூடாது.**



www.eelamview.com



# தமிழீழ மண்ணில் சூழல் நல்லாட்சிக்கெனவோர் ஆணையம்



பேராசிரியர் நடராசா சிறீஸ்கந்தராசா
விவசாயப் பல்கலைக்கழகம்
டென்மார்க்

## சூழல் நல்லாட்சி

சூழல் எனும்போது நாம் வாழும் சுற்றாடலைத்தான் குறிப்பிடுகிறோம். எமக்குப் புறம்பாக அச்சூழலிலுள்ள எல்லா உயிரினங்களும் அதுபோலவே உயிரற்ற அம்சங்களாக எமது வாழ்க்கையோடிணைந்து காணப்படுபவையெல்லாம் சூழல் என்னும் பதத்தினுள்ளடங்கும். இயற்கையின் கூறுகளாக நாம் கருதுகின்ற மண், நீர், மரம், செடிகொடிகளும் விலங்கினங்களும, நாம் சுவாசிக்கும் காற்றும் எமது சூழலின் பகுதிகளே. அதேபோல செயற்கைக் கூறுகளாக நாங்கள் அமைத்துக் கொண்டு வாழும் இல்லங்கள், தெருக்கள், கட்டமைப்புக்கள் போன்ற உயிரற்ற பொருட்களும் எமது சூழலின் கூறுகளாகின்றன.

இவ்வியற்கைக் கூறுகளோடு இசைவான வகையில் ஆதிமனிதன் வாழ்ந்து தன்மட்டான தேவைகளை மட்டுமே பெற்று வந்தான். இந்நிலையிலிருந்து விலகி இன்றைய மனிதன் தன்னை இயற்கையிலிருந்து புறம்பாக்கிப் பார்க்கும் தன்மையோடு தனது தேவைகளை முதன்மைப்படுத்தி கட்டுப்பாடற்ற நுகர்வுக்கேற்ற வகையில் தனது சூழலை மாற்றிவருகின்றான். அறிவியலும், தொழில்நுட்ப வளர்ச்சியும் ஏற்படுத்திக் கொடுத்த பல் வேறு புதிய வாய்ப்புக்களோடு சேர்ந்தே சூழல்மேல்வந்த பாதிப்புக்களும் வந்துசேர்ந்துள்ளன. இயற்கையின் சிதைவெனவும் சூழலின் மாசடைவும் அழிவெனவும் பலமட்டங்களில் பேசப்படும் மாற்றங்களெல்லாம் நவீனயுகம் தந்த அதிவேக வளர்ச்சியின் விளைவுகள்தான் என்பது தெளிவாகியபின் மேற்குலகம் வழி நடத்திவந்த இவ் வளர்ச்சிப் பாதை கேள்விக் குள்ளாக்கப்பட்டு 1992இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சூழல் மாநாட்டுப் பிரகடனங்களின் உந்துதலின்படி "பேணத்தகு மேம்பாடு" (Sustainable Development) என்ற பெயரில் இயற்கையையும் ஒரே நேரத்தில் இணைத்து நோக்கும் அபிவிருத்தி பற்றிய புதிய விழிப்புணர்வு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

இம்முயற்சிகளை சூழல் தொடர்பான அமைப்புக்களும் பசுமை இயக்கங்களும் மக்களிடையே தோன்றிய தன்னார்வக் குழுக்களும் பல நாடுகளில் தீவிரமாக இயக்கி வருகின்றன. வளர்ச்சிப் பாதையில் ஏற்கனவே முன்னேறிவிட்ட பெரும் தேசங்களிற்கூட புதுமைவாய்ந்த சூழல்பற்றிய கருத்தாக்கம் சிறிது சிறிதாகவே உள்வாங்கப்படும். இவ் வேளையில், பல எதிர்ப்புக்களின் மத்தியில் விடுதலை பெற்று வெளிவரக் காத்திருக்கும் ஒரு சிறிய தேசிய இனம் தன் இயற்கை வளங்களைப் பேணுவதற்குரிய வாய்ப்புக்கள் எவை? இவற்றை எவ்வாறு நடைமுறைப் படுத்தலாம்? இங்கேதான் எமக்கெனவே கிடைத்துள்ள அரிய புதிய வாய்ப்புகள் முன்னிலைக்கு வருகின்றன. இவற்றுள் முக்கியமான வாய்ப்பென்பது நீண்டதோர் யுத்த சூழ்நிலையின் பின் நாம் விடிவு பெறும்போது எமது எதிர்காலத்தை நாமே நிர்ணயித்து கட்டியெழுப்ப எமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பமாகும். எத்தனையோ அழிவுகளைச் சந்தித்த தன் பின் நாம் மீள நிர்மாணிக்கும் தேசம் விரைவாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது உண்மையென்றாலும்கூட நாம் கண்மூடித்தனமாகவோ நிதானமின்றியோ மற்றையோர் எம்மீது திணிக்கவிரும்பும் கருத்தாக்கங்களை ஏற்றுக் கொண்டு விடாமல் புதுமைமிக்க சிந்தனைகளை உள்வாங்கி, மற்றைய தேசங்கள் விட்ட தவறுகளைத் தெரிந்து தவிர்த்துக்கொண்டு, நேரடியாகவே வலிமையான சமூகத்தையும் அதற்குகந்த நேர்த்தியான கொள்கைகளையும் வகுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பினையும் நாம் தவறவிடக்கூடாது. எனவேதான் சூழல் பாதுகாப்பு, முகாமைத்துவம், பாதிப்புக்களைத் தவிர்த்தல் என்றவகையில் இதுவரை பல நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளைத் தாண்டி சூழல் நல்லாட்சி (Environmental Governance) என்ற உயர்ந்த நிலைப்பாட்டுக்கு எமது தேசத்தினை இட்டுச்செல்வது உகந்ததாகிறது.

Governance என்ற சொல்லுக்கு ஏற்ற நல்லாட்சி என்பது வெறும் பராமரிப்புக் கொண்டு நடத்துவது என்பதற்கப்பால் நல்ல மனித விழுமியங்கட்கேற்ற வகையில் சமூகத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் அவர்கள் அனைவருமே தமது இணைந்த செயற்பாட்டின் மூலம் தமது வளங்களை ஆட்சி செய்தலைக் குறிக் கும். இங்கே அம்மக்கள் உரிமையோடும் மனத்தெளிவோடு தனியாகவும் நிறுவன ரீதியாகவும் செயற்படும் நல்ல சமத்துவமான அறிவுசார்ந்த நடத்தை வெளிப்படுகின்றது. இத்தகைய சிந்தனையின் அடிப்படையில் சூழல் நல்லாட்சியினை நோக்குவோமானால் சூழல்பற்றி நாம் ஏற்படுத்தும் விதிகள், சட்டங்களுக்குப் பணிந்து தண்டனை அபராதங்கள் என்பவற்றுக்குப் பயந்து நடக்கும் ஒரு சமூகத்துக்குப் பதிலாக சூழலின் பல்வேறு அம்சங்களையும் தம் வாழ்க்கைக்கு வளம்தரும் நற்சூழலின் அவசியத்தையும் நன்கறிந்த அறிவுசார் சமூகம் கட்டியெழுப்பப்படும். அத்தகைய சமூகத்தின் முழுமையான பங்களிப்போடு சூழல் நல்லாட்சி செய்யப்படும். இதுவே இப்புதிய ஆணையத்தின் எதிர்பார்ப்பாக அமைகிறது. இன்றைய மானிட சமூகத்தினதும் அதனது நாளைய சந்ததியினதும் மேன்மை, நலவாழ்வு என்பவற்றை உறுதி செய்யும் உயர்ந்தபட்ச சமநிலை கொண்ட இயற்கையினை எமது தாயகத்தில் பேணுதலே இவ்வாணையத்தின் தொலை நோக்காக வரையப்பட்டுள்ளது.

## எமது வளங்களும் நாம் வந்த பாதையும்

தமிழ்த் தாயகத்தின் இயற்கை வளங்கள் பரந்தவை. பல்வேறு வகைப் பட்டவை. வரண்ட யாழ்.குடாநாட்டின் வயல் வெளிகளும், பனந்தோப்புக்களும், கடல் வளமும், நிலத்தடி நீர்வளமும் அடர்த்தியான மக்கள் தொகையை நெடுங்காலமாகத் தாங்கி வந்துள்ளன. வன்னிப் பெருநிலமும் தென் தமிழீழமும் அடர்ந்த இயற்கைக் காடுகள் முதல் ஐதான வரண்டநிலக் காடுகள் வரையும், பரந்த நெற்பயிர் நிலங்கள் பெரும் குளங்கள் பலவற்றையும் கொண்டவை. நீண்ட கரையோரம், ஆழ்கடல், நன்னீர், உவர்நீர், வாவிகள் எனப் பல்வேறு இயற்கைக் கூறுகள் வளமும் வாழ்வும் வனப்பும் தருபவை. கிழக்கேயும் மேற்கேயும் வனவிலங்குச் சரணாலயங்கள் எமது மண்ணின் எல்லைகளாகின்றன. சுண்டிக்குளம், கொக்கிளாய் போன்ற பறவைகள் பல வாழும் நீர்நிலைகளும் எமது இயற்கையின் பகுதிகளே. இவையெல்லாம் யுத்தகாலம் வரை நல்லதொரு சமநிலையில் இருந்தனவென்றாலும் கடந்த 20 ஆண்டு காலமாகப் படிப்படியாக இச்சமநிலை சீர் குலைந்து பல பகுதிகளில் சூழல் பேரழிவு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. முழு இலங்கைத் தீவிலும் எஞ்சியுள்ள இயற்கைக் காடுகளில் பாதிக்குமேல் தமிழர் தாயகத்தில் உள்ளதென்பதும் யுத்த காலத்தில் பெரும் அழிவுக்குள்ளாக்கப்பட்ட இயற்கை வளம் இதுவேயென்பதும் நினைவிற் கொள்ளப்பட வேண்டியது.

எனவேதான் நிறைவுடைய தேசம் ஒன்றினை நிர்மாணிப்பதில் நிலையான இயற்கையைப் பேணுவதிலும் குறிப்பாக வனவளத்தினைப் பாதுகாப்பதிலும் மிகக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்துகொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அதற்கான கொள்கைகளை வகுத்த தோடு வனவள பாதுகாப்புப் பிரிவு என்ற நிறைவேற்றும் அலகினையும் ஏற்கனவே 1991இல் ஆரம்பித்திருந்தார். அழிக்கப்பட்ட காடுகளை மீள்வனமாக்கல் முறையில் திரும்ப நிறுவியும், நடுகைக் காடுகள் என்ற பெயரில் உற்பத்திக்கான மரங்களைப் பெரும் திட்டங்களாக நட்டு வளர்த்தும், சாலை மருங்குகள், பொது இடங்கள், பள்ளிகள் என பல்வேறு இடங்களில் நடுகை செய்தும் இற்றைவரை பல இலட்சம் பயன்தரும் மரங்கள் தமிழீழ மண்ணில் நட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமூகக் காடுகள் என்னும் பரீட்சார்த்தத் திட்டத்தின் மூலம் மக்களின் ஈடுபாடு பெருக்கப் படுவதோடு, பல் வேறு விழிப்புணர்வூட்டும் திட்டங்கள் மூலம் இயற்கை பற்றிய அறிவுத்தல் சமூகத்தினிடையே சென்றடைகிறது. அனுமதியின்றி சிறு மரத்தினைக்கூட வெட்ட முடியாத வகையில் கட்டுப்பாடுகள் இவ் வனவளப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. சர்ச்சைக்குரிய இவ்விதிகள் படிப் படியாக மக்களிடையே ஏற்றுக்கொள்ளப்படும் வேளையில் அம்மக்களின் தேவைகட்கென மாற்றீடுகள் தேடுவதும் உரிய அறிவுரைகள் பெறுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனவிலங்குகள் வேட்டையாடப் படுவதற்கான தடை இவ்விலங்குகளைப் பாதுகாப்பதற்கான சரணாலயங்கள் அமைக்கும் திட்டம், மக்களுக்கும் காட்டு யானைகட்குமிடையே நேரடிப் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கான ஆய்வுத்திட்டம் இவையெல்லாம் ஏற்கனவே நடைமுறையிலுள்ள முற்போக்கான சிந்தனைகளாகும். வனவளம் பாதுகாக்கப் படுவது போலவே யுத்தகாலத்தின் மத்தியிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்ட பல்வேறு சூழல் பாதுகாப்பு முயற்சிகளும் நிலவளம், நீர்வளம் பேணவென மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்திட்டங்கள் தொலைநோக்குக் கொண்ட தேசத்தின் அறிகுறிகளாக விளங்கிவந்துள்ளன.

## இன்றைய சவால்கள்

நீண்டதோர் போர்க்காலச் சூழலில் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டிருந்த மக்கள் போர்நிறுத்தம் கொண்டுவந்த அமைதியையும் புதிய வாய்ப்புக்களையும் அனுபவிக்கத் தொடங்கிய அதே காலத்தில்தான் அம்மக்கள் விரும்பியோ விரும்பாமலோ அதிகரித்த தேவைகளோடு சேர்ந்து அவர்களது அன்றாட வாழ்க்கைச் சூழலைப் பாதிக்கும் காரணிகளும் அவர்களிடையே வந்திறங்கியுள்ளன. அக்காரணிகளைப் பிரித்தறிந்து தெரிவு செய்யக்கூடிய நிலையில் மக்களுமில்லை. அவற்றை விற்பவர்கள் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் உற்சாகத்தின் மத்தியிலும் தாம் அறிமுகம் செய்யும் பண்டங்களின் நெடுங்கால விளைவுகள் பற்றிச் சிந்திக்கவோ அவற்றுக்கான பொறுப்புரிமை கோரவோ தயாராகவுமில்லை. இவை அன்றாட உணவுப் பொருட்களாக இருக்கலாம், அவை பொதியாக்கப்பட்டுள்ள செயற்கைப் பிளாஸ்ரிக் கவசங்களாக இருக்கலாம், உணவுற்பத்திக்குத் தேவையானவையென விற்பனை செய்யப் படும் பல்வேறு இரசாயனப் பொருட்களாக இருக்கலாம், அவர்களது வீட்டுப் பாவனைக் கென இறக்குமதி செய்யப்படும் பல்வேறு புதிய பாவனைப் பொருட்களாகவிருக்கலாம். இவைபற்றிய அறிவும் தெளிவும் கொண்டவர்கள் சமூகத்தினிடையே பரவி வாழ்ந்தாலும் இவ்விடயங்களில் வெவ்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கவல்ல அமைப்புக்கள் பரவலாகக் காணப்பட்டாலும் இவை எல்லாவற்றையும் தொகுத்து நோக்கவல்ல நிறுவனமாக அதற்கான அறிவுவளம் கொண்ட ஆலோசனைத் தகைமை இறுதியில் சூழல் நல்லாட்சியினை முழுத் தாயகமண்ணிலும் ஒரே தளத்தில் உறுதிப்படுத்தும் அதிகாரம் என்பவற்றைக் கொண்ட ஆணையம் ஒன்றே இன்றைய அதி உயர் தேவையாகவுள்ளது. அத்தகைய ஆணையம் முழுமையான அறிவியல் சார்ந்த தரவுகளை மையப்படுத்துவதாகவும் அரசியல் தளத்தில் அனைத்து நிறுவனங்கள் சமூகக் கட்டமைப்புக்களையும் மேற்பார்வை செய்யக்கூடிய வலிமை கொண்டதாக இருப்பதன் மூலமே இன்றைய சவால்களை எதிர் கொள்ளக் கூடியதாய் அது இயங்கமுடியும்.



## ஆணையத்தின் கட்டமைப்பு

அறிவியலையும் அரசியலையும் ஒரே தளத்தில் வைத்துக்கொண்டு நல்ல தரவுகளின் அடிப்படையில் சமூகத்துக்கு நன்மை பயக்கும் சூழல் நல்லாட்சி ஆணையம் இன்றைய காலகட்டத்தில் எமது தேசத்துக் கான திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்கான செயலகத்தின் கட்டமைப்பின் கீழ் இயங்குவதே சாலச் சிறந்தது. அன்றாட மீள்கட்டுமான முயற்சிகள் ஒருபுறமும், ஆழிப்பேரலை

(தொடர்ச்சி 14ஆம் பக்கத்தில்...)

**எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் அவர்கள் அனைவருமே தமது இணைந்த செயற்பாட்டின் மூலம் தமது வளங்களை ஆட்சி செய்தலைக் குறிக்கும். இங்கே அம்மக்கள் உரிமையோடும் மனத்தெளிவோடு தனியாகவும் நிறுவன ரீதியாகவும் செயற்படும் நல்ல சமத்துவமான அறிவுசார்ந்த நடத்தை வெளிப்படுகின்றது. இத்தகைய சிந்தனையின் அடிப்படையில் சூழல் நல்லாட்சியினை நோக்குவோமானால் சூழல்பற்றி நாம் ஏற்படுத்தும் விதிகள், சட்டங்களுக்குப் பணிந்து தண்டனை அபராதங்கள் என்பவற்றுக்குப் பயந்து நடக்கும் ஒரு சமூகத்துக்குப் பதிலாக சூழலின் பல்வேறு அம்சங்களையும் தம் வாழ்க்கைக்கு வளம்தரும் நற்சூழலின் அவசியத்தையும் நன்கறிந்த அறிவுசார் சமூகம் கட்டியெழுப்பப்படும்.**



www.eelamview.com

# சிங்கள அரசிடமிருந்து அரசியல் தீர்வு; கல்லில் நார் உரிக்கும் முயற்சி




மூன்றரை வருடகால சமாதான அரசியலின் முடிவு காலம் நெருங்கிவருகின்றது. தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக சிங்களதேசம் கடைப்பிடித்துவரும் கடும்போக்கு நிலைப்பாடு வர, வர தீவிரமடைகின்றது. இந்த அரசியல் முடக்கநிலையை நீக்க முடியாது நோர்வே அரசும் திண்டாடுகின்றது. ''அரசியல் அமைப்பு இடந்தரவில்லை'', ''நீதிமன்றத் தீர்ப்பை மீறமுடியவில்லை'' என்று காரணங்கள் காட்டிச் சிங்கள அரசு தனது கடும்போக்கு அரசியலை சர்வதேச சமூகத்திற்கு நியாயப்படுத்துகின்றது. இதேவேளை, புலிகள் இயக்கத்திற்கு எதிரான நிழல்யுத்தம் ஒன்றின் மூலம் சிங்களப் படைகள் போரையும் ஆரம்பித்துவிட்டன என்றே கூறவேண்டும். தமிழ் மக்களும் சமாதான அரசியலில் சலிப்படைந்து - தீவிர நிலைப்பாட்டை வலியுறுத்தத் தொடங்கி விட்டனர்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல்தீர்வு தேட முயல்வது கல்லில் நார் உரிப்பது போன்று பயனற்ற முயற்சி என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இம்முறை அதை சர்வதேச சமூகம் அனுபவித்துள்ளது. சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்குச் சிங்கள அரசு அடிபணியவில்லை. சாட்டுக்கள் கூறி அது காலத்தைக் கடத்தி சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவருகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று சிங்கள அரசு இப்போது நோர்வேயை கோருவதும் ஒருவகை காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயமேயாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டை சிங்கள அரசு சரியாக நடைமுறைப் படுத்தவில்லை. அதனால், சமாதான முயற்சிகள் முறிவடையும் புறச்சூழல் ஏற்பட்டுள்ளது. அதற்குச் சிங்கள அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் கருத்தாகும்.

சிங்கள அரசுக்கெதிரான இந்தக் கருத்தை முறியடிக்கும் தந்திரோபாயத்துடன் சந்திரிக்கா அரசு எடுத்துள்ள அரசியல் நகர்வுதான் போர்நிறுத்த உடன்பாட்டை புதுப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

இந்த தந்திரோபாயக் கோரிக்கையின் மூலம் சிங்கள அரசு போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்வது போலவும், சமாதானச் சூழலை பாதுகாக்க விரும்புவது போலவும் - புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தத் தயார் என்பது போன்ற ஒரு 'மாயாஜால' அரசியல் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்குக் காட்டியுள்ளது.

ஆனால், போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட வாய்ப்பில்லை என்பது சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். எனினும் காலங்கடத்தவும் - சர்வதேச சமூகத்தின் தீவிர குற்றச்சாட்டுக்களில் இருந்து தற்காலிகமாகவேனும் தப்பிக்க முடியும் என்று சிங்கள அரசு எண்ணுகிறது. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்ற உள்நாட்டு அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக சமாதான அரசியலை சிறிதுகாலம் தள்ளிப் போடும்படியும் அது சர்வதேச சமூகத்தைக் கோரமுனையும்.

இவ்வாறு நோர்வே அரசையும் - சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற சிங்கள அரசு மாறி, மாறி அரசியல் நாடகங்களை நடாத்த முயலும்.

கடந்த ஐம்பது வருடகாலம் இவ்வாறுதான் தமிழ் மக்களையும் அது ஏமாற்றி வருகின்றது. இப்போது தமிழ் மக்களுடன், சர்வதேச சமூகத்தையும் சேர்த்து ஏமாற்ற அது ஆரம்பித்துள்ளது.

பொதுக்கட்டமைப்புக் குச் சிங்கள நீதிமன்று முட்டுக் கட்டை போட்ட உடனேயே நாடாளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுக் கட்டமைப்பை சிங்கள அரசால் இயங்க வைத்திருக்க முடியும். ஆனால், சந்திரிக்கா அரசின் உண்மையான விருப்பமும் பொதுக்கட்டமைப்பு இயங்கக் கூடாது என்பதால் நீதிமன்றின் தீர்ப்பை தனக்குச் சாதகமாக எடுத்து சர்வதேச சமூகத்திற்குச் சுட்டிக்காட்டி பொதுக்கட்டமைப்பை கைவிட்டுவிட்டார்.

***பொருளாதார அபிவிருத்தியை – சமூக முன்னேற்றத்தை வலியுறுத்திச் சிங்கள தேசத்தில் இதுவரை எந்த ஒரு மக்கள் போராட்டமும் நடைபெறவில்லை. இத்தகைய மேன்மையான கோரிக்கைகளை முன்வைத்து சிங்களத்தின் அரசியல் கட்சிகளும் போராட்டங்களை முன்னெடுக்க வில்லை. ஆனால், சமாதானத்தின் திசையில் உதித்த போர்நிறுத்த உடன்பாட்டிற்கு எதிராக – பொதுக்கட்டமைப்புக்கு எதிராக – புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கெதிராக – தமிழருடனான சமாதான ஒப்பந்தங்களுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை சிங்களதேசம் நடாத்திவருகின்றது.***

சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு வெறுமனே புனர்வாழ்வு - நிவாரண விடயங்களுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது தற்போதைய சமாதான அரசியலை மேலும் பலப்படுத்தி அரசியல் தீர்விற்கான பாதையைச் செப்பனிடும் இலக்கையும் கொண்டது.

பொதுக் கட்டமைப்பை சிங்கள நீதிமன்று முடக்கிய தன் மூலம் சமாதான முயற்சிக்கும் அது சாவுமணி அடித்துள்ளது. அத்துடன், சிங்கள - தமிழ் இனப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி இரத்தக்களரி மிக்கதொரு பெரும் போரை மூட்டிவிடும் அழிவுகார வேலையையும் அது செய்துள்ளது.

இந்தப்பெரும் ஆபத்தைச் சிங்களப் பத்திரிகை உலகமும் சிங்களமக்களுக்கு எடுத்து விளக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்து, ஜே.வி.பி, கெலஉறுமய போன்ற பேரினவாதக் கட்சிகளின் இனவெறிக் கருத்துக்களுடன் அது ஒத்துப்போயுள்ளது.

சிங்கள - தமிழ் இனப் பிரச்சினைக்கு ஒரு நீதியான அரசியல் தீர்வைக்கண்டு போரை நிறுத்தி - நாட்டை அபிவிருத்தியடைய வைக்க வேண்டும் என்ற சிந்தனை சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இல்லை, சிங்களப் பத்திரிகை உலகத்திற்கும் இல்லை. சிங்கள மக்களின் சமூக முன்னேற்றம் பற்றியும் இவர்களுக்கு அக்கறையில்லை. தமிழருக்கு எதிரான இனவாத செயற்பாட்டிற்காக சிங்களத்தின் அபிவிருத்தி, பொருளாதார மேம்பாடு என்பவற்றைத் தாரைவார்க்கும் வெறித்தனமான மனநிலையுடனேயே சிங்களதேசம் உள்ளது.

பொருளாதார அபிவிருத்தியை - சமூக முன்னேற்றத்தை வலியுறுத்திச் சிங்கள தேசத்தில் இதுவரை எந்த ஒரு மக்கள் போராட்டமும் நடைபெறவில்லை. இத்தகைய மேன்மையான கோரிக்கைகளை முன்வைத்து சிங்களத்தின் அரசியல் கட்சிகளும் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை.

ஆனால், சமாதானத்தின் திசையில் உதித்த போர் நிறுத்த உடன்பாட்டிற்கு எதிராக - பொதுக்கட்டமைப்புக்கு எதிராக - புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கெதிராக - தமிழருடனான சமாதான ஒப்பந்தங்களுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை சிங்களதேசம் நடாத்திவருகின்றது.

மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியத்துவத்தின் கீழ் - சர்வதேச கண்காணிப்பின் கீழ் சிங்கள அரசு ஒரு சமாதானப் பேச்சை முறையாக நடாத்தும் என்ற தமிழ்மக்களின் எதிர்பார்ப்பும் இப்போது பொய்யாகிப் போய்விட்டது.

இந்நிலையில், எந்த வகையான அரசியலை சிங்கள அரசுடன் நடாத்தி தமிழர் தம் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்? இதுதான் தமிழ்மக்களின் இன்றைய அரசியல் கேள்வி.

1985ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் இந்திய சஞ்சிகையொன்றுக்கு வழங்கிய செய்தியில் குறிப்பிட்ட ஒரு அரசியல் தீர்க்கதரிசனம் இருபது ஆண்டுகளின் பின் இன்றைக்கும் பொருத்தமாகவே உள்ளது. **சிங்கள அரசானது நீதியான முறையில் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை வழங்க முன்வரும் என்று நான் நம்பவில்லை** என்பதே அந்த அரசியல் வாக்கியம் ஆகும். இன்றைய அரசியல் சூழலுக்கான பதிலும் இதுதான்.

மீண்டும் ஒருபோர் தொடங்கினால் இடைநடுவில் அரசியல் பேச்சுவார்த்தைக்காக போரை நிறுத்துவதென்பது சாத்தியமற்றுப்போகும். தமிழர் தம் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள போரைவிட்டால் வேறு வழிகளில்லை என்ற அரசியல் சூனிய நிலைக்குள்ளேயே இன்று தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த மூன்றரை வருடகாலமாக நடந்த அரசியல் நிகழ்ச்சிகளின் விளைவாக தமிழ்மக்களிடமும் - புலிகள் இயக்கத்திடமும் எழுந்துள்ள இந்தச் சலிப்பை, விரக்தியை, கோபத்தை இலங்கையின் சமாதானத்திற்காக உழைத்துவரும் சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

**- எல்லாளன் -**



www.eelamview.com

# இலங்கை இனப்பிரச்சினையின் போக்கும் நீதிமன்றங்களின் நோக்கும்

- நேசன் -

கடந்த அறுபது ஆண்டுகளில் இலங்கையின் தேசிய இனத்துவப் பிரச்சினைகள் காலத்திற்குக் காலம் பல்வேறு பரிமாணங்களில் தோற்றம்பெற்று கூர்மையடைந்து முனைப்படையலாயிற்று. இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபோது அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையின் நீதித்துறையை நாடியபோதெல்லாம் நீதித்துறை அவற்றை எவ்வாறு நோக்கியது? கையாண்டது? தீர்ப்பளித்தது? என்பது தொடர்பான ஒரு வரலாற்று ரீதியான உசாவலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### *இலங்கை இனப்பிரச்சினையின் பரிமாணங்கள் -*

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளும் பேரினவாதிகளின் இனரீதியான பாரபட்சங்களும் 1920 களிலேயே ஆரம்பித்துவிட்டன. ஆனால் அவை படிப்படியாக விசாலிப்புப்பெற்று 1940களின் முற்பகுதியில் தமிழ்பேசும் பிரதேசங்களில் நிலச் சூறையாடலாகவும் 1940களின் பிற்பகுதிகளில் மலையகத் தமிழ்மக்களின் பிரசாவுரிமை பிரச்சினையாகவும் 1950களில் தனிச்சிங்களச் சட்டத்தின் அமுலாக்கல் காரணமாகவும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டமையும் 1960 களில் இலங்கையின் அரசாங்க சேவையில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டமையும் 1970களில் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பெறுவதில் தமிழ்மாணவர்களுக்கு இனரீதியான தரப்படுத்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டதாலும் இனப்பிரச்சினையின் பரிமாணம் பல்வேறு தளங்களில் தமிழ்பேசும் மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தலாயிற்று.

இனரீதியான பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ்மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக இலங்கை நீதிமன்றங்களை நாடியபோதெல்லாம் அவையளித்த பரிகாரங்களும் தீர்ப்புக்களும் இன்றும் கவனிப்பிற்குரியனவாகும்.

### *பிரசாவுரிமைப் பிரச்சினை -*

1948ஆம் ஆண்டு இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கணிசமான அளவு மலையகத் தமிழ்மக்களது வாக்குகள் செல்வாக்குச் செலுத்தியமையாலும் 101 பேரைக்கொண்ட பாராளுமன்றத்தில் 07 பேர் மலையகத் தமிழ்மக்களினை பிரதிநிதிகளாகவும் தேர்ந்தமையைக் கண்டு மனம் பொறுக்காத அப்போதைய இலங்கைப் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா மலையகத் தமிழ்மக்களது பிரசாவுரிமையையும் வாக்குரிமையையும் பறிப்பதன்மூலம் அவர்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பறிக்கும் நோக்குடன் 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஒரு சட்டத்தை பாராளுமன்றில் கொண்டு வந்தார். இதுவே இனரீதியான ஒடுக்கு முறையின் ஆரம்ப புள்ளியாயிற்று. 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்க பிரசாவுரிமைச் சட்டமும் 1949 ஆம் ஆண்டு 34ஆம் இலக்க இந்திய – பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டமும் 1949ஆம் ஆண்டு 48ஆம் இலக்க மலையக மக்களின் வாக்குரிமையை இரத்துச்செய்யும் சட்டமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.



இந்தச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையால் மலையகப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை முற்றாகவே இழந்தார்கள். அவர்கள் தமது இலங்கை குடியுரிமையை நிரூபிக்கவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

> இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளும் பேரினவாதிகளின் இனரீதியான பாரபட்சங்களும் 1920களிலேயே ஆரம்பித்துவிட்டன. ஆனால் அவை படிப்படியாக விசாலிப்புப்பெற்று 1940களின் முற்பகுதியில் தமிழ்பேசும் பிரதேசங்களில் நிலச் சூறையாடலாகவும் 1940களின் பிற்பகுதிகளில் மலையக தமிழ்மக்களின் பிரசாவுரிமை பிரச்சினையாகவும் 1950களில் தனிச்சிங்களச் சட்டத்தின் அமுலாக்கல் காரணமாகவும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டமையும் 1960களில் இலங்கையின் அரசாங்கசேவையில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டமையும் 1970களில் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறுவதில் தமிழ்மாணவர்களுக்கு இனரீதியான தரப்படுத்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட்டதாலும் இனப்பிரச்சினையின் பரிமாணம் பல்வேறு தளங்களில் தமிழ்பேசும் மக்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தலாயிற்று.

இந்த நிரூபனச்சுமை தொடர்பாக எழுந்த வழக்கு கொடக்கன்பிள்ளை எதிர் மதநாயகா என்பதாகும்.

மேற்படி வழக்கின் நிகழ்வு பின்வருமாறு:-

இந்த வழக்கில் தேர்தல் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டபோது கொடக்கன்பிள்ளை என்ற தமிழர் தனது பெயர் கேகாலைமாவட்ட தேர்தல் இடாப்பில் இடம்பெறவில்லை என்பதைக் கண்டார். இதைக் கண்ணுற்ற கொடக்கன்பிள்ளை கேகாலைமாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தார். தேர்தல் ஆணையாளர் கொடக்கன் பிள்ளையின் முறைப்பாட்டை நிராகரித்து அவர் இலங்கைப் பிரசை என்பதை நிரூபிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் புதிய பிரசாவுரிமைச் சட்டத்தின்படி அதனை நிரூபிக்கும் நிரூபனச்சுமை கொடக்கன் பிள்ளைக்கே உண்டு என்றும் அதனை அவரால் நிரூபிக்க முடியாததையடுத்து அவர் இலங்கைப் பிரசையல்ல என்று உதவித்தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

மேற்படி பிரசாவுரிமைச் சட்டம் 1946ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் 29ஆம் பிரிவுக்கு எதிராக இருப்பதாகக் கூறி கொடக்கன் பிள்ளை கேகாலைமாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார். இவ்வழக்கின் புகழ்பெற்ற இலங்கை வழக்கறிஞரும் இராணி அப்புக்காத்துமாகிய செனட்டர் நடேசன் மனுதார் சார்பாக ஆஜரானார். உதவித் தேர்தல் ஆணையாளர் மதநாயக்கா சார்பில் அப்போதைய சட்டமா அதிபர் அலன்றோஸ் அவர்கள் ஆஜரானார்கள். இருபகுதியினரதும் வாதப் பிரதிவாதத்தினைச் செவிமடுத்த மாவட்ட நீதிபதி என்.சிவஞானசுந்தரம் குடியுரிமைச் சட்டம் 1946ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பின் 29ஆம் பிரிவை மீறுகின்றபடியால் பிரசாவுரிமைச் சட்டம் செல்லுபடியற்றது என்ற தீர்ப்பை வழங்கினார். இதனால் அரசாங்கம் உயர்நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்தது. அங்கு வழக்கை விளங்கிய மூன்று நீதிபதிகள் மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பை இரத்துச்செய்து தீர்ப்பு வழங்கினார்கள். இதற்கு எதிராக கொடக்கன்பிள்ளை லண்டனில் உள்ள பிரிவுக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தார்.

லண்டனில் உள்ள பிரிவுக் கவுன்சில் புதியதொரு கண்டுபிடிப்பைச் செய்தது. அதாவது **"இந்திய வம்சா வழி மக்கள் ஒரு தேசிய இனம் அல்ல"** என்று அந்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இது கடுமையான விமர்சனத்திற் குள்ளானது. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்திற்கு எதுவித சட்டப்பரிகாரமும் கிட்டவில்லை.

### *மொழிரீதியான பாரபட்சங்கள்-*

1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மொழிப்பிரச்சினை முக்கிய பிரச்சினையாக உருவெடுத்தது. காலஞ்சென்றவர்களான டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவலை, ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் மறுபக்கம் எஸ். டபிள்ய.ஆர்.டி..பண்டாரநாயக்கா, பிலிப் குணவர்த்தனா, மெத்தானந்தா, ஏ.பி.ஜெயசூரியா போன்ற மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக "சிங்களம் மட்டும்" சட்டத்தை முன்வைத்தார்கள். மிகக் குறுகிய வழியில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் போட்டியில் இருபெரும் பேரினவாதக் கட்சிகளும் சிங்களம் மட்டும் கொள்கையை பிரதான ஆயுதமாகப் பயன்படுத்தின.

அதாவது இரு பேரினவாதக் கட்சிகளும் 1956ஆம் ஆண்டு உத்தேச பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில் அப்போது அரசகரும மொழியாகவிருந்த ஆங்கில மொழியை அகற்றி அதற்குப்பதிலாக சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதாகக் குறிப்பிட்டு "சிங்களம் மட்டும்" என்பதைத் தமது கட்சிகளின் மறுக்கப்பட முடியாத கோரிக்கையாகப் பிரச்சாரப் படுத்தினார்கள்.

இந்த அதிகாரப் போட்டியில் 1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகளின்படி திரு.பண்டாரநாயக்கா தலைமை யிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பிரதான அமைப்பாகக் கொண்டிருந்த மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது. இதனால் திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா பிரதமரானார். அவர் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்க் கட்சிகளதும் இடதுசாரிக் கட்சிகளதும் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இச்சட்டம் நிறைவேறியது.

1956ஆம் ஆண்டு 33ஆம் இலக்க இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக அரசாங்க சேவையில் சேர்ந்த தமிழ் அரச ஊழியர்கள் தமது பதவியுயர்வுக்காகவும் சம்பள உயர்வுக்காகவும் சிங்களம் படிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சிங்களம் படிக்க தமிழ் அரச ஊழியர்கள் மறுத்தார்கள். தமிழரசுக் கட்சியும் இதனை ஊக்குவித்தது. அரசசேவையில் இருந்த எழுதுவினைஞர்கள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கினார்கள். இச்சங்கத்தின் சார்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. அக்காலத்தில் எழுதுவினைஞராகவிருந்த கோடீஸ்வரன் என்பவர் மனுதாராக நியமிக்கப்பட்டார். இதனால் இந்த வழக்கு சட்டப்புத்தகத்தில் கோடீஸ்வரன் எதிர் சட்டமா அதிபர் என அழைக்கப்படலாயிற்று. இந்த வழக்கின் நிகழ்வு பின்வருமாறு:-

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டமையால் பாதிக்கப்பட்ட அரசாங்க எழுதுவினைஞரான கோடீஸ்வரன் என்பவர் தமக்கு வரவேண்டிய பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன மறுக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். வழக்கை விளங்கிய மாவட்ட நீதிபதி **கிரெட்சர்** என்பவர் மனுதாரரான கோடீஸ்வரன் மேற்படி சட்டம் கொண்டுவரப்பட முன்னர் அரசவேவையில் சேர்ந்தவர் என்றபடியால் அவருக்கு இதுவரை மறுக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்றும் பதவி உயர்வு மறுக்கப்பட எவ்வித நியாயமும் இல்லை என்றும் தீர்ப்புக் கூறினார்.

கொழும்புமாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இத்தீர்ப்பால் அதிருப்தியுற்ற இலங்கை அரசின் சார்பில் சட்டமா அதிபர் இலங்கை உயர்நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்தார். இலங்கை உயர் நீதிமன்றில் இவ்வழக்கு விளக்கத்திற்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விளங்கிய இலங்கை உயர்நீதிமன்ற நீதியாளர்கள் இலங்கைப் பாராளுமன்றம் பூரண இறைமைபெற்றது என்றும் அதனால் அது எத்தகைய சட்டத்தையும் இயற்றும் வல்லமை பெற்றது எனவும் குறிப்பிட்டு இலங்கைப் பிரசை ஒருவர் என்ற முறையில் கோடீஸ்வரன் இறைமை படைத்த இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவராவர் என்றும் பாராளுமன்ற நியதிச்சட்டங்கள் எதற்கும் இலங்கைப் பிரசை ஒருவர் மேலானவர் அல்ல என்றும் ஆகவே பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்று நடக்கவேண்டிய சட்டக் கடப்பாடு கோடீஸ்வரனுக்கு உண்டு என்றும் கூறித் தீர்ப்பளித்தது.

இலங்கை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மேற்படி தீர்ப்புக்கு எதிராக கோடீஸ்வரன் இங்கிலாந்தில் உள்ள கோமறைக் கழகத்திற்கு மேன்முறையீடு செய்தார். அங்கு இப்பிரச்சினை சட்டப் பிரபுக்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அப்போதைய சோல்பரி அரசியல் யாப்பின் 29ஆம் பிரிவு அலசி ஆராயப்பட்டது. இதன்படி எந்தவொரு இனத்தவரையோ அல்லது சமயத்தைச் சேர்ந்தவர்களையோ பாதிக்கக் கூடியதான எத்தகைய சட்டத்தையும் இலங்கைப் பாராளுமன்றம் இயற்ற சட்டவாக்க அதிகாரம் கொண்டதல்ல எனவும் ஆகவே 1956ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சிங்களம் மட்டும் சட்டம் தமிழ்ச் சிறுபான்மையினரைப் பாதிப்பதாக இருப்பதால் அச்சட்டம் சோல்பரி அரசியல் யாப்புக்கு விரோதமானதென பிரிவுக் கவுன்சில் தீர்ப்புக் கூறியது.

லண்டன் மாநகரில் உள்ள மேற்படி பிரிவுக்கவுன்சில் வழங்கிய தீர்ப்பில் அதிருப்தியுற்ற பேரினவாதிகள் பிரிவுக் கவுன்சிலையே இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றமாக இல்லாமல் செய்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கிடத்தனர். 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றது. இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு சிறிமாவோ அரசாங்கம் 1971ஆம் ஆண்டு கொண்டுவந்த 44ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலங்கையிலிருந்து பிரிவுக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யும் வாய்ப்பை முற்றாகவே இல்லாமல் செய்தார்கள். 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பை அமுலாக்கிய இடதுசாரியெனக் கூறிக்கொண்ட கொல்வின் ஆர்.டி.சில்வா மேலும் ஒருபடி முன்னோக்கிச் சென்று தமிழ்மக்களுக்கு அற்பசொற்ப சலுகைகளை வழங்கிய 29ஆம் பிரிவையே முற்றாக இல்லாமல் செய்து தமிழினத்தை நிரந்தரமாகவே இரண்டாம் தரப் பிரசைகள் நிலைக்குத் தள்ளி பேரினவாத மேலாண்மைக்கு 1977ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் ஊடாகவே அங்கீகாரம் வழங்கினர்.

இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்.



www.eelamview.com

# சுனாமி நிவாரணப்பணி பொதுக்கட்டமைப்பிற்கு வெளியே

- சாரணன் -

ஜனாதிபதி, பிரதமர், ஜே.வி.பி என மும்முனை அரசியற் சுழிக்குள் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு சிக்கிச் சுழன்று மிதந்தது. 2004, டிசம்பரில் எழுந்தது புவியியல் சுனாமி. பொதுக்கட்டமைப்பு ஓர் அரசியல் சுனாமி.

அரசியல் அர்த்தத்தில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்பது சர்வதேச அபிப்பிராயப் பொதியாய் வடிவம் பெற்று விட்டது. ஜே.வி.பி இதனை ஒரு சுட்டியலாகக் கொண்டு தனது அரசியல் அதிகாரப் பரப்பை கட்டி அகட்ட விரும்பியது. அரசியல் விளைவு என்ற அர்த்தத்தில் அப்படி விழும் ஒவ்வொரு அடியும் ஜனாதிபதி சந்திரிக்காவின் நெற்றியில் விழும் அடியாகவே அமையமுடியும். ஜே.வி.பியின் இடது கையில் ஹெல உறுமய கேடயமாய் அமைய வலது கையில் சுனாமிச் சுட்டியல். ஜே.வி.பிக்கு கையசைத்த வண்ணம் பிரதமர் ராஜபக்ச மதில்மேல். கரணம் தப்பினால் மரணம் என்பது ஜனாதிபதியின் நிலை. ஜனாதிபதி உறைவாளை உருவினார். சுட்டியல் ஜனாதிபதியின் கைக்கு மாறியது. தலை பறக்கா விட்டாலும் தலைப்பாகை பறக்க ஜே.வி.பி தெருவோரம் ஓடியது. பிரதமர் தரையிறங்கினார். ஆயினும் பிரதமரை நோக்கி வாயால் ஏவக்கூடிய தனது ஆயுதங்கள் அனைத்தையும் ஏவத் தவறவில்லை. எண் கணிதத்தில் ஜே.வி.பிக்கு கூட்டலும் தெரியாது; கழித்தலும் தெரியாது என்ற உண்மை தெளிவானது.



சுனாமிக் கட்டமைப்பில் கொழும்பு கையெழுத்திடுவதைத் தவிர அரசியலில் ஓர் அங்குலம்தானும் நகரமுடியாத நிலை ஆட்சியாளர்களுக்குத் தோன்றியது. இக் கைச்சாத்து விவகாரத்தை தமிழீழ மக்களின் பக்கத்தோடு சேர்த்து ஒப்பிட்டுப் பார்த்தால் இதனை தமிழ் - சிங்களப் பிரச்சினை என்று பார்ப்பதை விடவும் ஜனாதிபதியின் கதிரையைப் பாதுகாத்தல் என்ற சிங்கள அரசியற்பக்க பதவி விவகாரமே முழுத்தன்மையான இடத்தை வகித்தது.

இனவாத வரலாற்றுக்குள்ளால் இதனைப் பார்த்தால் ஆட்சியாளர்கள் சுனாமிக் கட்டமைப்பில் கையெழுத்திட முடியாது. ஆனால் பதவிவாதக் கண்ணோட்டத்திற் பார்த்தால் கையெழுத்திடாமல் பதவியைப் பாதுகாப்பது இயலாது. இந் நிலைமையில்தான் சுனாமிக் கட்டமைப்பு கைச்சாத்தானது.

இதில் நாம் பகுத்து எடுக்க வேண்டிய உண்மை இதுதான். அதாவது சுனாமிப் பொதுக்கட்டமைப்பு அரச தரப்பில் கைச்சாத்தானது என்பது தமிழ்மக்களின் தேவையின் பொருட்டல்ல; ஆட்சியாளர்களின் பதவிகளைப் பாதுகாத்தற் பொருட்டாகும். இதனை வேறுவகையிற் சொல்வதென்றால் சுனாமிக் கட்டமைப்பு கைச்சாத்தானதென்பது சிங்கள அரசியற் போட்டியின் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்தின் ஒரு வெளிப்பாடாகும். அப்படிப் பார்த்தால் பேரினவாதம் கீழ்நிலை அடைந்து விட்டதென்றோ அன்றி அது மனமாற்றமடைந்து விட்டதென்றோ நாம் கொள்ள முடியாது என்பது தெளிவு. தனது அதிகாரத்திற்கு அது அவசியம் என்று வந்த போது ஜனாதிபதி அதனை ஒரு கருவியாக கையில் எடுத்துள்ளாரே தவிர இனவாதம் தனது கொடுமுடியை கழற்றி விடவில்லை.

அரசியல் யாப்பு, நாடாளுமன்றம், சட்டங்கள், சம்பிரதாயங்கள், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர்பதவிகள், நீதித்துறை, நிர்வாகத்துறை, இராணுவம், காவல்துறை, கல்வி, கல்வி நிறுவனங்கள், பௌத்தம், வைபவங்கள், பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் சிங்களக் கட்சிகள் ஆகிய அனைத்தும் சிங்கள இனவாத நிறுவனமயப் பட்டவைகளாய் உள்ளன. இவை அனைத்தும் ஒன்றுதிரண்ட செயல்பூர்வ வடிவமைப்பாகவே சிங்கள அரச இயந்திரம் காணப்படுகின்றது.

மேற்கூறிய அனைத்து அம்சங்களும் தனித்தனியே ஓர் அரச இயந்திரத்தின் உதிரிப்பாகங்களாகும். இயந்திரம் என்பது ஒரு குறியின் கீழான ஒரு பொறிமுறையாகும். ஒவ்வொரு உதிரிப்பாகமும் ஒரு பொதுக் குறியின் கீழ் இயங்கும் ஒரு பொறிமுறையைக் கொண்டுள்ளது. முழு இயந்திரத்தினதும் பொதுப்போக்கான செயற்பாட்டிலிருந்து ஓர் உதிரிப்பாகம் திசை திரும்பி மறுவழமாய்ச் செயற்பட முடியாது. அவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு பொதுப் போக்கைக் கொண்டுள்ளன.



உதாரணத்திற்கு நோக்குவோம். ஜனாதிபதி தனது அரசியல் அதிகாரத் தேவைக்காக கட்டமைப்பில் கைச்சாத்திடுவதான முடிவை எடுத்தபோதிலும் நாடாளுமன்றத்தில் அதனை வாக்கெடுப்பிற்கு விடும்நிலை இருக்கவில்லை. அதாவது அரச இயந்திரத்தின் நாடாளுமன்றம் என்ற உதிரிப்பாகம் சுனாமிக் கட்டமைப்பை உள்வாங்க முடியாது வெளித்தள்ளும் செயல்வீச்சைக் கொண்டிருந்தது. நீதித்துறையை எடுத்துக்கொள்வோம். அது யாப்பின் பெயரால் சுனாமிக்கட்டமைப்பின் உயிரோட்ட அம்சங்களுக்குத் தடை விதித்துள்ளது. அடுத்து பத்திரிகைகளையும் மற்றும் ஊடகங்களையும் எடுத்துக் கொண்டால் அவை சுனாமிக் கட்டமைப்பை கடுமையாக எதிர்த்து எழுதியும் பேசியும் வருகின்றன.

''பாலர் வகுப்பிலிருந்து பல் கலைக்கழகம் வரை'', வணக்கத் தலத்திலிருந்து சுடுகாடுவரை தமிழ்மக்களுக்கு எதிராக இனவாதமூட்டப்பட்டவர்களே சிங்களப் பொதுமக்களாவர். காதாற் கேட்பதும் தமிழின எதிர்ப்பு, கண்ணால் பார்ப்பதும் தமிழின எதிர்ப்பு, கண்கொண்டு வாயால் வாசிப்பதும் தமிழின எதிர்ப்பு என சிங்கள மக்களின் நிலையுள்ளது. இதில் ஊடகங்களின் பணி நூறுவீத "நெகிழ்வற்ற" யாப்பு விதிக்குச் சமனானது. அதாவது ஊடகங் கள் சிங்கள இனவாதம் பொறுத்து "நெகிழ்வற்ற சரத்துக்கள்" ஆகும்.

பிந்துனுவேவ படுகொலை விவகாரத்தில் சிங்கள உயர்நீதிமன்றம் சிறிதும் வெட்கமின்றி தீர்ப்பளித்துள்ளது. அப்படிப்பட்ட ஒரு நீதித்துறையிடமிருந்து சுனாமிப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான தீர்ப்புக் கிடைத்திருப்பது சிறிதும் வியப்பிற்குரியதல்ல. ஆதலால் சிங்கள அரச இயந்திரத்தின் எந்தவொரு மூலையிலிருந்தாவது நீதி தெறித்தெழும் என்று தொட்டிலினுள் புரளும் ஒரு பால்குடிகூட எதிர்பார்க்க மாட்டான். வேண்டுமென்றால் பயித்தியங்களின் உளறல்களைத் தவிர யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஆதலால் இலங்கையின் முறை வழி அல்லது சம்பிரதாய அரசியற் கட்டமைப்பின்கீழ் சுனாமிக் கட்டமைப்பு பயனுள்ள வகையிற் செயற்படமுடியாது. இதற்கு வெளியேயான சக்திப் பிரயோகங்கள் மூலம்தான் சுனாமி நிவாரணப்பணிகள் செயற்படமுடியும். இந்தவகையில் சுனாமிக் கட்டமைப்பு தற்போது செயலற்றிருப்பதை நோர்வே அனுசரணையாளர்களிடம் விபரித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அதனைச் செயற்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விட்டிருப்பது அதிகம் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

அதாவது சுனாமிக் கட்டமைப்பு சிங்கள அரசியல் ஆதிக்கப் போட்டியின் வெளிப்பாடாய்த்தான் உள்ளதே தவிர அது நிவாரண நோக்கு நிலைக்கானதல்ல. சிங்கள அரசு அதற்கு எதிர்வியூகத்தையே கொண்டுள்ளது. சட்டங்களுக்கு வெளியே சிங்கள அதிகாரிகளை எடுத்துக் கொண்டால் அவர்களிடமும் சுனாமி நிவாரணப் பணிகள் இனவாத நகர்த்தல்களாகவே அமையும். ஆதலால் இவை அனைத்தையும் கருத்திற்கொண்ட ஒரு சுனாமி நிவாரணப் பணியைத்தான் தமிழ்மக்கள் எதிர்பார்க்கலாமே தவிர இவற்றிற்கு உட்பட்டல்ல. ஆதலால் சுனாமி நிவாரணப் பணியானது தமிழ்மக்களைப் பொறுத்தவரை கையெழுத்தின் பின்புதான் உண்மையான யுத்தகளத்துள் பிரவேசித்துள்ளது.

கையெழுத்திற்கு முன் அது சிங்கள பதவிப் போட்டிக் களத்தில் இருந்தது. கைச்சாத்திட்ட பின்புதான் அது தமிழ் - சிங்கள யுத்த களத்துள் பிரவேசித்துள்ளது. ●

**இதில் நாம் பகுத்து எடுக்கவேண்டிய உண்மை இதுதான். அதாவது சுனாமிப் பொதுக்கட்டமைப்பு அரச தரப்பில் கைச்சாத்தானது என்பது தமிழ்மக்களின் தேவையின் பொருட்டல்ல; ஆட்சியாளர்களின் பதவிகளைப் பாதுகாத்தற் பொருட்டாகும். இதனை வேறுவகையிற் சொல்வதென்றால் சுனாமிக் கட்டமைப்பு கைச்சாத்தானதென்பது சிங்கள அரசியற் போட்டியின் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்தின் ஒரு வெளிப்பாடாகும். அப்படிப் பார்த்தால் பேரினவாதம் கீழ்நிலை அடைந்துவிட்டதென்றோ அன்றி அது மனமாற்றமடைந்து விட்டதென்றோ நாம் கொள்ளமுடியாது என்பது தெளிவு. தனது அதிகாரத்திற்கு அது அவசியம் என்று வந்தபோது ஜனாதிபதி அதனை ஒரு கருவியாக கையில் எடுத்துள்ளாரே தவிர இனவாதம் தனது கொடுமுடியை கழற்றிவிடவில்லை.**

www.eelamview.com

*"தமிழ்மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியற் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்."*

*- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*

- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -

# வவுனியாத் தீர்மானமும் அதுபோன்ற பிற நிகழ்ச்சிகளும்



இந்திய சுதந்திரப்போரில் மிகப்பெரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் 1942 ஆகஸ்து 7, 8ஆம் நாட்களில் பம்பாய் நகரில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையில் ஒன்றுகூடிய காங்கிரஸ் உயர்மட்டக் குழுவினால் நிறைவேற்றப்பட்டன. 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்று ஆங்கிலேய ஆட்சியாளர்களைக் கேட்கும் தீர்மானம் அவற்றுள் முதலிடம் பிடிக்கின்றது. இத்தீர்மானம் ஆங்கிலத்தில் QUIT INDIA RESOLUTION எனப்படும். எதுகை மோனை தேவைகளுக்காக இது 'வெள்ளையனே வெளியேறு' என்று தமிழ்நாட்டில் குரல் கொடுக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் நடந்த அக்காலப்பகுதியில் பிரித்தானியாவின் போர்க்கால அமைச் சரவையின் தீர்மானங்களை ஏந்தியவாறு சேர் ஸ்ராபோட் கிறிப்ஸ் (SIR STAF -FORD CRIPPS 1889-1952) இந்தியா வந்தார். காங்கிரஸ் தலைமைக்கு அவர் கொடுத்த தீர்மானங் களில் ஒன்றுமே புதிதாக இல்லை. இதன்மூலம் இந்தியாவுக்கு விடு தலை அளிக்கும் எண்ணம் பிரித்தானியாவுக்கு இல்லை என்பதை இந்திய தேசியக் காங்கிரஸ் நன்கு புரிந்துகொண்டது.

இந்தியாவைத் தனது அதிகாரத்திற்குள் எவ்வளவு காலம் வைத்திருக்க முடியுமோ அந்தளவு காலம் வைத்திருக்கப் பிரித்தானியா தீர்மானித்திருந்தது. உலகப் போர் முடிந்த பின் அரசுரிமை (DOMINION STATUS) தருவதாக கிறிப்ஸ் கொண்டு வந்த தீர்மானங்கள் கூறின. 'அரசுரிமை என்பது வெற்று வார்த்தைகளின் தொகுப்புத்தான்' என்று இந்திய காங்கிரஸ் அதை நிராகரித்தது. இந்தியாவை ஆதிக்கம் செய்யும் பிரித்தானியாவும் அதை எதிர்க்கும் இந்தியர்களும் முரண்பட்டனர். இரு பகுதியினரும் ஒரு கூட்டு ஒப்பந்தத்திற்கு வரும் வாய்ப்புக்கள் மிக அரிதாகக் காணப் பட்டன. இந்த எதிரிடையான நிலைப்பாடுகளின் வெளிப்பாடாக 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற தீர்மானம் தோற்றம் பெற்றது. இந்தியாவின் சுதந்திரவேட்கையை வெளிப்படுத்தும் முகமாகப் போராட்டம் ஒன்றினைத் துவக்க ஆசாத் தலைமையிலான காங்கிரஸ் குழு தீர்மானித்தது. எப்போது போராட்டத்தைத் துவக்குவது என்பதை மகாத்மா காந்தி தீர்மானிப்பார் என்றும் முடிவு எடுக்கபட்டது.

இந்திய விடுதலைக்கு ஆதரவு தருமாறு ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுப்பது என்றும் காங்கிரஸ் குழு தீர்மானம் நிறைவேற்றியது. இதன்மூலம் இந்திய விடுதலைப் போரை உலக அரங்கிற்கு எடுத்துச்செல்ல முடியுமென்று காங்கிரஸ் குழு நம்பியது. போர்ப் பிரச்சினைக்கு நடுவிலும் உலகநாடுகள் இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதைக் கூர்மையாக அவதானித்தன. அமெரிக்காவில் இந்திய விடுதலைக்குச் சார்பான உணர்வு இருந்தது. இதை மழுங்கடிப்பதற்காகக் கடும் பிரசாரப் போரை பிரித்தானியா அமெரிக்காவில் நடத்தியது. சீனாவிலும் மக்களாதரவு இந்தியா பக்கம் இருந்தது. சீனா மட்டுமல்லாது பிற ஆசிய, ஆபிரிக்க மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் இந்தியாவின் விடுதலை எதிர்கால நிகழ்ச்சிகளுக்கு ஒரு முன்னோடி என்ற கருத்து நிலவியது. "1942 ஆகஸ்து மாதம் நடந்தவை திடீரென்று நிகழ்ந்தவையல்ல, அவை முன்நிகழ்ச்சிகள் பலவற்றின் ஒருமித்த சங்கமமே" என்கிறார் ஜவகர்லால் நேரு தனது நூல் மூலமாக (THE DISCOVERY OF INDIA: JAWA - HARLAL NEHRU)

தமிழீழத் தேசிய வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய தலைமைகளால் தீர்மானங்களும், கோசங்களும், பிரகடனங்களும் நிலைமைக்கு ஏற்றவாறு வெளியிடப்பட்டுள்ளன. அவை எமது விடுதலை வரலாற்றின் படிக் கற்களாகவும், வளர்ச்சிப் பாதையைக் காட்டும் மைல் கற்களாகவும் பார்க்கப்படுகின்றன. இது எமக்கு மாத்திரம் தனித்துவமானதொரு அம்சமல்ல. விடுதலைக்காக உழைத்து தன்னாட்சி பெற்ற ஒவ்வொரு நாட்டிலும் ஒருபுறம் ஆயுதப் போரும் மறுபுறத்தில் மேற்கூறிய தீர்மானங்களும், கோசங்களும், பிரகடனங்களும் வெளிப்படுகின்றன. ஒருவிதத்தில் இவை அத்தியாவசியத் தேவையாகவே உணரப்படுகின்றன. தமிழீழ வரலாற்றில் இரு காலகட்டங்கள் தென்படுகின்றன. முதலாவது கட்டத்தில் தீர்மானங்கள் என்பனவற்றோடு மேடைப் பேச்சிலும் காலம் செலவிட்டோம். அடுத்த கட்டத்தில் ஆயுதப்போரை முன்னெடுத் தோம். முதலாவது கட்டத்தில் கடைப்பிடித்த தீர்மானங்கள், மேடைப் பேச்சுக்கள் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பயனற்றுப்போயின. இதனால் ஆயுதம் தூக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். விடுதலைப்போரின் தன்மையை எதிரியே தீர்மானிக்கிறான் என்பது பொதுவிதி, எமக்கும் இது பொருந்தும்.

பிரெஞ்சுப் புரட்சி (1789), அமெரிக்க சுதந்திரப்போர் (1775 - 1783) என்பன இன்று வரை நினைவு கூரப்படும் ஒலிநயமிக்க சுலோகங்களுடன் ஆரம்பித்தன. இச்சுலோகங்கள் அவற்றின் ஆதார சுருதியாகக் கருதப்படுகின்றன.

> *உலகின் மிகச் சுருக்கமான புதியதோர் நாட்டின் பிறப்புப் பற்றிய பிரகடனம் ஒக்ரோபர் 01, 1949ஆம் நாள் வெளியிடப்பட்டது. அன்று நவ சீனாவின் பிறப்பை அதன் தலைவர் மாவோ "நாங்கள் வந்துவிட்டோம்" (WE HAVE ARRIVED) என்று கூறி புதிய வரலாற்றைத் தொடக்கிவைத்தார்.*

பிரான்சில் மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த மேற்கூறிய புரட்சி அடிமை வாழ்வு, சர்வாதிகாரம், தனிமனிதர் சுதந்திரத்திற்கு எதிரான தடைகள் என்பவற்றைக் கண்டித்ததோடு மானுட சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றிற்கும் குரல் கொடுத்தது. பிரெஞ்சுப் புரட்சியும், அமெரிக்கச் சுதந்திரப்போரும் ஒன்றிணைந்து பல ஆபிரிக்க - அமெரிக்க சுதந்திரப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக அமைந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் போது காத்திரமான உந்துசக்தியாகப் பயன்படுத்தப்பட்ட மூன்று சொற்களாவன ஆங்கிலத்தில்: LIBERTY, EQVALITY, FRATERNITY எனப்படுகின்றன. அமெரிக்க விடுதலையின்போது சுதந்திரத்தைக் குறிக்கும் சொல்லான 'லிபேர்ட்டி' பெருமளவில் பயன் படுத்தப்பட்டது. இரு நிகழ்ச்சிகளுக்கும் இடையிலான நெருக்கத்தை இதிலிருந்து உணரலாம்.

அமெரிக்க சுதந்திரப் போராட்ட காலத்தில் உணர்ச்சி பொங்கப் பேசுவதில் வல்லவரான பற்றிக் ஹென்றி (PATRICK HENRY 1736-1799) என்ற புரட்சித் தலைவர் "எனக்குச் சுதந்திரத்தைத் தா அல்லது மரணத்தைத் தா" என்று மேடை தோறும் கனல் பறக்கும் குரலில் பேசினார். "GIVE ME LIBE RTY, OR GIVE ME DEATH" என்ற வரி வரும். 1775இல் அவர் நடத்திய பேருரை பிரிட்டிகஷ் அரசுடனான போருக்கு அமெரிக்க மக்களைத் தயார்படுத்தியது. வழக்கறிஞரான இந்த மனிதருக்கு இப்பேருரை பேரும், புகழும், நிறைந்த செல்வமும் ஈட்டிக் கொடுத்தன. மேடைப் பேச்சிற்குப் பெரும் செல்வாக்கு இருந்த அக்காலகட்டத்தில் பற்றிக் ஹென்றியின் பேச்சு முதலிடம் வகிப்பதாகக் கணிப்பிடுகிறது. இன்றும் மேற்கூறிய வரிக்கு மதிப்பும், மரியாதையும் இருப்பது கண்கூடு. ORATORY எனப்படும் மேடைப் பேச்சுக்கலை அருகிவரும் நவீன உலகில் பாடப் புத்தகங் களிலும் வரலாற்று நூல்களிலும் அவருடைய பேருரையைக் காணலாம்.

LIBERTY அல்லது சுதந்திரம் என்ற சொல் அமெரிக்க வரலாற்றில் மீண்டும், மீண்டும் வருவதை அவதானிக்கலாம். இது பிரெஞ்சுப் புரட்சியின் எதிரொலி என்பதில் ஐயமில்லை. நியுயோர்க் துறைமுகத்தில் STATUE OF LIBERTY எனப்படும் சுதந்திரச்சிலை LIBERTY ISLAND எனப்படும் சின்னஞ்சிறிய சுதந்திரத் தீவில் நிறுத்தப்பட்டுள்ளது. 154 அடி உயரமான இச்சிலையை பிரெஞ்சு மக்கள் ஜூலை 04, 1884ஆம் நாள் அமெரிக்காவின் சுதந்திரத்தைக் கௌரவிக்கும் முகமாக அன்பளிப்புச் செய்துள்ளனர். அமெரிக்காவின் தேசியச் சின்னமாகப் பேணப்படும் இச்சிலையின் வலது கையில் சுதந்திரதீபம் வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை பொருத்தப்பட்டுள்ள பீடத்தையும் கணக்கில் எடுத்தால் அதன் உயரம் 305 அடியாக உயர்கின்றது. ஒரு பத்துமாடிக் கட்டிடத்தின் உயரத்தில் அது நிமிர்ந்து நிற்கிறது. பீடத்தின் ஒரு பகுதியில் எம்மா லாசரஸ் (EMMA LAZA - RUS) என்ற பெண் கவிஞர் எழுதிய ஆங்கிலக் கவிதை வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதன் தமிழாக்கம் பின்வருமாறு:

சுதந்திரமாக மூச்சுவிட ஏங்கும்<br>
உங்கள் களைத்த, ஏழை மக்களை என்னிடம்<br>
தாருங்கள்,<br>
மக்கள் தொகைமிக்க உங்கள்<br>
கரையோரங்களில்<br>
வீடற்று, பெரும் புயலிற் சிக்கியதுபோல<br>
அல்லற்படுவோரை<br>
என்னிடம் அனுப்புங்கள்,<br>
தங்கக் கதவுக்குப் பக்கலில் நான் விளக்கு<br>
ஏந்தி நிற்பேன்.

கவிதையின் தலைப்பு 'புதிய பிரமாண்டமான சிலை' (THE NEW COLOSSUS) உட்புறமூடாக சிலையின் உச்சிவரை செல்வதற்குப் படிக்கட்டும் மின்தூக்கி வசதியும் செய்யப்பட்டு ள்ளது. சிலையின் அடிப்பாகத்தில் குடி வருவோர் நினைவால யம் (AMERI - CAN MUSEUM OF IMMIGRATION) அமைக்கப்பட்டுள்ளது.

மனித சுதந்திரத் திற்காக வெளி யிடப்படும் தீர் மானங்கள், பிர கடனங்கள், கோசங்கள் என்பன வற்றிற்கு நிகரானதாக சுதந்திரத்தைப் பிர கடனப்படுத்தும் மணி யோசை யும் கணிப்பிடப் படுகிறது. அமெரிக்க சுதந்திரப்போரின் சின்னமாக 'சுந்திர மணி' (LIBERTY BELL) இடம் பெறுகின்றது. உலகில் பல பாகங் களில் இருந்து மூன்று உயரமும் 2080 இறாத்தல் எடையும் கொண்ட இந்த மணியைப் பார்ப்பதற்கு உல்லாசப் பயணி கள் வருகை தருகிறார்கள். அமெரிக்க விடுதலை நாளான ஜூலை 04ஆம் நாள் இது முன்பு ஒலிக்கவிடப்பட்டது. இப்போது மேலிருந்து கீழ்வரை வெடித்துவிட்ட நிலையில் 1835ஆம் வருடம்தொட்டு அது ஒலிக்கவிடப்படுவதில்லை. என்றாலும் அமெரிக்க சுதந்திரச் சின்னம் என்ற சிறப்பு இன்றுவரை அதற்கு உண்டு. மணி பேசுமா என்று கேட்போருக்கு முறைப்படி வார்ப்புச் செய்யப்பட்ட மணி சப்தசுவரங்களிலும் பாடும் என்று விடை கூறுகிறோம்.

பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள கெற்றிஸ்பேர்க் போர்வீரர் தேசிய துயிலுமில்லத்தை (THE GETTYSBURG NATIONAL SOLDIERS CEMETERY) நவம்பர் 19, 1863ஆம் நாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். அவ்வமயம் அவர் ஆற்றிய இரண்டரை நிமிடம் மாத்திரம் நீடித்த 268 சொற்கள் கொண்ட பேருரை மனித வரலாற்றிலேயே மிகச் சிறந்த பிரகடனங்களில் ஒன்றாகக் கணிப்பிடப் படுகிறது. "எமது நாடு வாழ்வதற்கு இவர்கள் உயிர் கொடுத்தார்கள்" என்று கூறிய லிங்கன் "இப் புனித பூமியை எம்மால் மேலும் புனிதமாக்க முடியாது அது ஏற்கனவே அவர்களால் புனிதமாக்கப்பட்டுவிட்டது" என்றார். அத்தோடு தனது இறுதி வரியில் ஜனநாயகம் என்றால் "மக்களிடமிருந்து, மக்களால், மக்களுக்காகச் செய்யப்படும்" ஆட்சி என்று அவர் வரையறை செய்தார். (GOVERNMENT OF THE PEOPLE, BY THE PEOPLE, FOR THE PEOPLE) இதிலும் பார்க்கத் திறம்பட ஜனநாயகத்தைப் பிரகடனம் செய்யமுடியாது என்பது அறிஞர் கருத்து. உலகின் மிகச் சுருக்க மான புதியதோர் நாட்டின் பிறப்புப் பற்றிய பிரகடனம் ஒக்ரோபர் 01, 1949ஆம் நாள் வெளியிடப்பட்டது. அன்று நவ சீனாவின் பிறப்பை அதன் தலைவர் மாவோ "நாங்கள் வந்துவிட்டோம்" (WE HAVE ARRIVED) என்று கூறி புதிய வரலாற்றைத் தொடக்கிவைத்தார்.

1942இல் நடந்தவை திடீரென்று நடந்த





www.eelamview.com

வையல்ல அவை முன் நிகழ்ச்சிகள் பலவற்றின் ஒருமித்த சங்கமமே என்று நேரு தனது நூலில் கூறியது தமிழீழ வரலாற்றிற்கும் சில வித்தியாசங்களுடன் பொருத்தமாகும் எனலாம். எமது விடுதலைப்போர் பல்வேறு இன முரண்பாட்டு நிகழ்ச்சிகளின் சங்கமமாக இடம்பெறுகிறது. தமிழர் அரசியலில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் நான்கு முக்கிய கட்டங்கள் காணப்படுகின்றன. முதலாவது கட்டம் 1833இல் தொடங்கி 1921இல் முடிவுக்கு வருகிறது. இரண்டாம் கட்டம் 1921இல் தொடங்கி 1948வரையிலான காலம்வரை நீடிக்கிறது. மூன்றாம் கட்டம் 1949 தொடக்கம் 1976ஆம் ஆண்டுவரை தொடர்கின்றது. நான்காம் கட்டம் 1976தொடங்கி இன்றுவரை விரிகின்றது.

முதலாம் கட்டத்தில் தமிழர்களுக்குத் தலைமை தாங்கியோர் இன அடையாளம் பற்றிய சித்தனையோடு இருக்கவில்லை. இன அடையாளம் முதன்மைப் படுத்தப்படாது இலங்கையர் என்ற அடையாளமே முன்னுரிமை பெற்றது. முத்துக்குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் போன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உயர் குடிப் பிறந்த தமிழ்த் தலைவர்கள் தம்மை இலங்கைத் தலைவர்களாகவும் சிங்களவர்களின் அரசியல் தலைமையாகவும் கருதினர். அப்போது சிங்களவர் மத்தியில் பெருந்தலைவர்கள் தோன்றாத காரணத்தால் இவர்களே அந்த இடத்தை நிரப்பினர். 1912, 1916ஆம் ஆண்டுகளில் நடந்த படித்த இலங்கையர் தேர்தல் தொகுதிக்கு வேட்பாளராக நின்ற இராமநாதனுக்கு பெரும்பான்மைச் சிங்கள வாக்குகள் கிடைத்தன. பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம், வெசாக் விடுமுறைதினச் சட்டம் என்பனவற்றை நிறைவேற்றக் காரணமாக இருந்ததோடு சிங்களவர் மத்தியில் சிங்களமொழிப் பற்றையும் இராமநாதன் ஊக்குவித்தார்.

ஆனந்தா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது ஆரம்ப வைபவத்தில் இராமநாதன் பங்குபற்றி ஆரம்பகால உறுப்பினராக ரூபா 25 நன்கொடை வழங்கினார். 1904ஆம் ஆண்டு செப்ரம்பர் 3ஆம் நாள் இக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிங்கள மொழிக்காகக் குரல் கொடுத்தார். அவருடைய உரையின் ஒரு வரியை சிங்கள மக்கள் இன்றும் மறக்கவில்லை. "சிங்கள உதடுகள் சிங்கள மொழியைப் பேசாவிடின் வேறுயார் அதைப் பேசப்போகிறார்கள்?" (IF SINHALESE LIPS WILL NOT SPEAK THE SINHALESE LANGUAGE WHO ELSE IS THERE TO SPEAK IT) இராமநாதனின் இளவலான அருணாசலம் 1913 இல் ஆரம்பித்த தனது அரசியல் வாழ்வில் பல முக்கிய பணிகளை மேற்கொண்டார். 1917இல் அரசியல் சீர்திருத்தக் கழகத்தை (CEYLON REFORM LEAGUE) உருவாக்கி இலங்கைத் தேசியத்திற்கான அடித்தளம் இட்டார். இந்த அமைப்பு 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் (CEYLON NATIONAL CONGRESS) என்று வளர்ச்சிபெற்றது. சிங்களவர்கள் அது பற்றிச் சிந்திக்காத காலகட்டத்தில் அருணாசலம் பூரணசுதந்திரக் கோரிக்கையை முன்வைத்தார். 1920வரை சிங்கள அரசியல் தலைவர்களிலும் பார்க்க தேசிய நோக்குடன் செயற்பட்ட அருணாசலம் போன்றோருக்கு 1921இல் பலத்த அடி வீழ்ந்தது.

1921இல் மானிங் அரசியற் சீர்திருத்த முயற்சிகள் நடந்தபோது மேல்மாகாணத்தில் தமிழர்களுக்கு ஒரு தொகுதி ஒதுக்குவதற்கும் மேல்மாகாணத் தமிழர் பிரதிநிதித்துவத்தை ஏற்பதற்கும் ஒப்பந்தம் செய்த சிங்களத் தலைவர்கள் அதே ஒப்பந்தத்தை உதாசீனம் செய்தனர். அதிகாரம் இலங்கையர்களுக்கு மாறியபோது அது சிங்களவர்களுக்கு மாத்திரமே என்ற நிலைப்பாட்டைச் சிங்களத் தலைவர்கள் எடுத்தனர். இதன் காரணமாகத் தமிழர் என்ற தேசிய அடையாளத்தை நோக்கி அருணாசலம் தலைமையிலானோர் நகர்ந்தனர். தேசிய காங்கிரசை உருவாக்கிய அருணாசலம் அதன் சாதாரண அங்கத்துவப் பதவியையும் உதறித் தள்ளினார். தமது வாக்குறுதியை மீறியதற்குச் சிங்களத் தலைவர்கள் கூறிய காரணங்கள் விசித்திரமானவை. அருணாசலத்திற்கு உறுதிமொழி வழங்கிய பீரீசும் சமரவிக்கிரமாவும் தேசிய காங்கிரஸ் சார்பாக அந்த உறுதிமொழியை வழங்கவில்லை. அது அவர்கள் சொந்த விருப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டது. அப்படியான வாக்குறுதி இலங்கைத் தேசிய காங்கிரசை கட்டுப்படுத்த மாட்டாது.

தமிழர்கள் ஏமாந்தது இதுவே முதல் தடவை. மனமுடைந்து, கொழும்பு வாழ்வில் வெறுப்படைந்த அருணாசலம் யாழ்ப்பாணம் திரும்பினார். இனிமேல் தமிழர்கள் தங்களைத் தாமே ஆட்சிசெய்யக்கூடிய வகையில் 'தமிழகம்' ஒன்றை அமைப்பது நன்று என்று பேசினார். 1921 ஆகஸ்து 15ஆம் நாள் அவர் தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பை உருவாக்கினார். அவர் ஆற்றிய தலைமை உரையில் "காங்கிரசின் சிங்களத் தலைவர்களை இனிமேலும் நம்புவதற்கு நாம் தயாரில்லை. தங்கள் நலனைப் பாதுகாப்பதற்குத் தமிழர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்" என்றார். தமிழர் மகாஜன சபை உருவாக்கத்தோடு தமிழ்த்தேசியம் உருவாகியது என்பது வரலாற்று உண்மை. (SRI LANKAN TAMIL NATIONALISM, A STUDY OF ITS ORIGINS BY MURUGASINGHAM 1999)

1948 சிங்களவர் பெற்ற சுதந்திரத்தோடு தமிழ்த்தேசிய வரலாற்றின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கிறது. சுதந்திரம் பெற்ற ஒருசில மாதங்களில் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்தை பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா கொண்டுவந்தார். இதற்கு ஆதரவு வழங்கிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 1949 டிசம்பர் 18ஆம் நாள் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். அத்தோடு தமிழர் தேசியம் முனைப்புப்பெறத் தொடங்கியது. 1947இல் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றபின் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடந்த வெற்றிவிழாவில் "தமிழ், தமிழர், தமிழர் தாயகம் ஆகிய மூன்றும் தமிழ்மக்களின் உயிர்" என்று செல்வநாயகம் கூறினார். இதைத் தொடர்ந்து யாழ்.முற்றவெளியில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் அவர் "ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ்மக்கள் கோரவேண்டிவரும்" என்றார்.

1948 தொடக்கம் 1956வரை சிங்கள ஆட்சியாளர்களால் யாழ்ப்பாணத் தமிழர், வன்னித் தமிழர், மன்னார்த் தமிழர், திருகோணமலைத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், இஸ்லாமியர்கள் என பலவாறாகப் பிரிக்கப்பட்ட தமிழ்பேசும் இனத்தை செல்வநாயகம் ஒன்றுபடுத்தினார். 1949இல் மிகவும் தீர்க்கதரிசனத்துடன் அவர் பின்வருமாறு பிரகடனஞ் செய்தார். "மொழிவாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் யுத்தத்தில் முடிந்து பெரிய தேசிய இனங்களும் மோதிக்கொள்ள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது. இதிலும் மிகத் தீவிரம் குறைந்ததான மற்றைய வழி, மொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தையுடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே".

அருணாசலத்தின் மகாஜன சபை பேச்சு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேயளவு அல்லது அதற்கும் மேலான முக்கியத்துவம் மேற்கூறிய செல்வநாயகத்தின் உரைக்கும் உண்டு. அருணாசலத்தின் பேச்சு ஈழத்தமிழர் தேசியத்தின் பிறப்பைக் கட்டியம் கூறியதோடு தமிழகம் என்ற தாயகக் கோட்பாட்டையும் முன்வைத்தது. இந்தவகையில் அவர் எமது தேசியத்தின் பிதாமகர் ஆவார். சமஷ்டிக்கட்சி தலைமையிலான தமிழ்மக்கள் 1976வரை ஜனநாயக வழிமுறைகள் ஊடாகச் சாத்வீக முறையில் ஒரு சமஷ்டி அரசமைப்பை நிறுவ முனைந்தனர். அது சரிவராது என்றநிலை தோன்றியபோது தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தமிழ்மக்கள் தள்ளப்பட்டனர். வட்டுக்கோட்டையில் தமிழரசுக் கட்சி அங்கம்வகித்த தமிழர் விடுதலை முன்னணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இது 1976ஆம் ஆண்டில் நடைபெற்றது. "முழு இறைமை பெற்ற தமிழீழம் அடையும் வரை" போரிடுவதற்கு தமிழினத்தைப் பொதுவாகவும் தமிழ் இளைஞர்களைக் குறிப்பாகவும் சுதந்திரப்போரில் குதிக்க வரும்படி வட்டுக் கோட்டைத் தீர்மானம் அழைப்பு விடுத்தது. 1977ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் தமிழீழக் கோரிக்கைக்குப் பேராதரவு வழங்கினர். ஆனால் பாராளுமன்றம் சென்ற தமிழ் உறுப்பினர்கள் தமிழீழ இலட்சியத்தை அடைவதற்கு யாதொரு முயற்சியும் செய்யாமல் வாளாவிருந்தனர்.

ஆயுதப்போரில் முற்றாக நம்பியிருந்த அரசுக்கு எதிராக அகிம்சை முறையில் போரிட இயலாது. ஆயுதம் பேசும் மொழி ஒன்றைத்தான் சிங்கள அரசுகள் புரிந்துகொள்வார்கள். புலிகள் இயக்கம் 1972இல் தோன்றியதோடு அகிம்சைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 1976, மே 05ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயருடன் புலிகள் இயக்கம் தன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொண்டது. ஒரு இனம், ஒரு தேசமாக எழுச்சியடைவதும், சுயநிர்ணய உரிமைகளுக்கான நிலைப்பாடுகளை முன்வைப்பதும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டமே முதற் காரணமாக அமைகின்றது. எமது தேசிய வரலாறும் இதையே காட்டுகின்றது. புலிகளின் தோற்றத்தோடு ஆரம்பிக்கும் எமது தேசியத்தின் நான்காம் கட்டம் தொடர்ந்தபடி இருக்கின்றது. எம்மால் போராடமுடியும் என்பதோடு மிக நுண்ணிய இராசதந்திர நகர்வுகளையும் சர்வதேச அரங்கில் முன்னெடுக்க எம்மால் முடியும் என்பதையும் நாம் நன்கு நிரூபித்துள்ளோம். எமது இராசதந்திரத்தின் ஒரு கேந்திர அங்கமாக நாம் பல்வேறு அமர்வுகளையும், நிகழ்ச்சிகளையும் உருவாக்கி காத்திரமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம்.

பொங்குதமிழ் என்று பெயரிடப்பட்ட வெகுஜன நிகழ்ச்சிகளை 2001ஆம் ஆண்டு தொடக்கம் தமிழீழத்தின் பல மாவட்டங்களில் நடத்தியுள்ளோம். ஆயுதமேந்திய சிங்கள இராணுவம் புடைசூழ முதலாவது பொங்குதமிழ் நிகழ்ச்சி யாழ்.பல்கலைக்கழக திறந்தவெளி அரங்கில் 2001, ஜனவரி 21ஆம் நாள் தமிழீழ மாணவர் சமூகத்தினால் நடத்தப்பட்டது. அரசு நடத்தும் கொடிய யுத்தத்தை நிறுத்தும்படி முதலாவது பொங்குதமிழ் பிரகடனம் கூறியது. தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை இவற்றை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வை நாம் காணவேண்டும் என்பதை வலியுறுத்தும் பொங்குதமிழ் பிரகடனமும் அங்கு நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து அதேவருட பெப்பிரவரி, 01ஆம் நாள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொங்குதமிழ் நிகழ்ச்சி நடைபெற்றது. வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய நகரங்களிலும் பின்பு நடத்தப்பட்டது. பொங்கு தமிழ் நிகழ்வின்போது எழுப்பப்பட்ட கோசம் "எங்கள் நிலம் எமக்கு வேண்டும், உங்கள் (இராணுவம்) வீடுகளுக்கு நீங்கள் போங்கள்" என்று ஆக்கிரமிப்பு இராணுவத்தை பணித்தது.

***தமிழ்மக்கள் 1976வரை ஜனநாயக வழிமுறைகள் ஊடாகச் சாத்வீக முறையில் ஒரு சமஷ்டி அரசமைப்பை நிறுவ முனைந்தனர். அது சரிவராது என்றநிலை தோன்றியபோது தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தமிழ்மக்கள் தள்ளப்பட்டனர். வட்டுக்கோட்டையில் தமிழரசுக்கட்சி அங்கம் வகித்த தமிழர் விடுதலை முன்னணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இது 1976ஆம் ஆண்டில் நடைபெற்றது. "முழு இறைமை பெற்ற தமிழீழம் அடையும்வரை" போரிடுவதற்கு தமிழினத்தை பொதுவாகவும் தமிழ் இளைஞர்களைக் குறிப்பாகவும் சுதந்திரப்போரில் குதிக்க வரும்படி வட்டுக்கோட்டைத் தீர்மானம் அழைப்பு விடுத்தது. 1977ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் தமிழீழக் கோரிக்கைக்குப் பேராதரவு வழங்கினர்.***

உலகத்தமிழர் வரலாற்றில் பிரான்சு, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. ஆனால் முதன்முறையாக புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் கனடா நாட்டில் 2004, செப்ரம்பர் 25ஆம் நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொங்குதமிழ் நிகழ்ச்சியை நடத்திச் சாதனை படைத்துள்ளனர். கனேடிய தமிழ் மாணவர் ஒன்றியம் பல தடைகளைத் தாண்டி இந்நிகழ்வை மிகச் சிறந்த முறையில் நடத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் முன்வைத்த தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் சிறிலங்கா அரசு எவ்வகை நிபந்தனையுமின்றி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கனடா பொங்குதமிழ் தீர்மானம் கூறுவதோடு "சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் நேர்மையான அபிலாசைகளையும் சர்வதேச சமூகம் விளங்கிக்கொண்டு அவற்றிற்கு உதவவேண்டும்" என்ற முக்கிய கோரிக்கையையும் முன்வைத்தது.

"வெள்ளையனே வெளியேறு" என்ற 1942ஆம் ஆண்டு கோசத்தோடு "எங்கள் நிலம் எமக்கு வேண்டும் உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள்" என்ற கோசத்தை ஒப்பிட்டுப் பாருங்கள், இரண்டிற்கும் இடையிலுள்ள ஒற்றுமை விளங்கும்.



நியுயோர்க் துறைமுகத்தில் STATUE OF LIBERTY எனப்படும் இந்த சுதந்திரச்சிலை LIBERTY ISLAND எனப்படும் சின்னஞ்சிறிய சுதந்திரத் தீவில் நிறுத்தப்பட்டுள்ளது. 154 அடி உயரமான இச்சிலை பிரெஞ்சு மக்களால் ஜூலை 04, 1884ஆம் நாள் அமெரிக்காவின் சுதந்திரத்தைக் கௌரவிக்கும் முகமாக அன்பளிப்புச் செய்யப்பட்டது.

2005, ஜூலை 27ஆம் நாள் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு வவுனியாவில் நடைபெற்றது. தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து போராளர்கள் வந்திருந்தனர். இஸ்லாமிய சகோதரர்களும் வந்திருந்தனர். எமது தமிழ்பேசும் இனத்தின் ஒருமித்த மாநாடாக இடம்பெற்றது. சிறிலங்கா அரசிடமிருந்து நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டோம். சர்வதேச சமூகமே முன்வந்து நியாயம் வழங்கு என்ற தொனிப்பொருளுடன் வவுனியாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு அடுத்தபடியான முக்கியத்துவம் வவுனியாத் தீர்மானத்திற்கும் உண்டு. வவுனியா மாநாட்டைத் தொடர்ந்து மட்டக்களப்பிலும் அதையொத்த மாநாடு நடைபெற்றது. எதிர்வரும் காலத்தில் இன்னுமோர் முக்கிய தீர்மானம் நிறைவேறலாம் என்று இப்போது எதிர்வு கூறப்படுகின்றது. நிட்சயமாக அது எங்கள் சுதந்திரப் பிரகடனமாகத்தான் இருக்கும்.



www.eelamview.com

# வரலாற்றை வரையும் தூரிகைகள்



**மலைமகள்**

## — இரண்டு தசாப்த நிறைவில் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகள் —

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி தோற்றங்கொண்டு ஐந்தாண்டுகள் நிறைந்த நிலையில், தமிழீழ தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் பலாலிப்பகுதி காப்பரண் தொகுதிகளில் பெண் போராளிகளுக்கென தனித்த பகுதிகளை ஒதுக்கியிருந்தார். கோழியின் சிறகுகளுள் குஞ்சுகள் இருந்த காலம் முடிந்துபோனது. குஞ்சுகளின் காலம்.

வீடுகளும், தோட்டங்களும், தோப்புக்களுமாகவுள்ள பலாலிப் பகுதியில் எந்த மதிலுக்குப் பின்னால் எந்த வாழை மரங்களிடையே எந்த வடலியின் மறைவில் எப்போது சிறிலங்கா இராணுவம் வந்துநிற்கும் என்று எவருக்கும் தெரியாது. இரவு, பகல் என்றில்லாமல் எப்போதுமே விழிப்பாக இருக்க



போராளிகளுடன் நான்கைந்து பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து சமராடிய நாட்கள் அவை.

முன்னேறி வந்த இந்திய இராணுவம் கல்லுண்டாய் வெளியில் தளம் அமைத்து நிலைகொண்டது. லெப்.கேணல் ஜொனியின் தலைமையில் பெண்போராளிகளும் புறப்பட்டார்கள் தளத்தைத் தாக்கியழிக்க. இரண்டு இரவுகள் முயன்று, மூன்றாம் நாளிரவு பலத்த எதிர்ப்புக்களின் நடுவே தளத்தை நெருங்கினர். காப்புகளற்ற வயல்வெளிகளில் புலிகள். வரம்புகளைவிட்டு தலையை உயர்த்தியவர்களின் நெற்றிகளில் விழுந்தது சூடு. கடும் மோதலின் பின் தளத்தைத் தகர்த்து, எதிரிகளின் ஆயுதங்களை அள்ளி எடுத்தவர்கள், ஒருவரை மற்றவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். மூன்று நாட்களாகச் சேற்றுவயலில் கிடந்ததால் உடல் முழுவதும் சேறு.

பெண் போராளிகளிடம் வந்த லெப். கேணல் ஜொனி,

“பிள்ளையள் போய் குளித்துவிட்டு கொஞ்சம் ஓய்வெடுங்கோ. அடுத்த சண்டைக்குப் போகவேண்டும்.”

என்று சொல்லி முடிப்பதற்கிடையில் வந்தது செய்தி, “சங்கானைக்கு ஆமி வந்திட்டான்.”

இராணுவத்தோடு மட்டுமல்ல போராட்டம்; இயற்கையோடும் தான்.

---

1990ஆம் ஆண்டு. பலாலிப் பகுதியில் நிலைகொண்டிருந்த பெண் போராளிகளில் ஒரு பகுதியினர் கொக் காவிலிலுள்ள சிறிலங்கா படைத்தளத்தைத்

கொள்ளாமல் இயங்கிக்கொண்டிருந்தனர். லெப். அனித்தாவும் தன்னை வெளிப்படுத்தாமல் தாயகத்துக்கான பணிகளில் ஈடுபட்டார்.

அனித்தாவின் வேலை மட்டக்களப்பு மாவட்டமெங்கும் விரிவாக்கப்பட்டது. இருவேறு பண்பாடுகளைக் கொண்ட தமிழ், இஸ்லாமிய சமூகத்தவரிடையே பொதுவான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்களின் எளிமையான வாழ்வைப் புரிந்துகொண்டு அவர்களுள் ஒருவராகி நிதானத்துடனும் கவனத்துடனும் செயலாற்றத் தொடங்கினார்.

இந்திய இராணுவ வருகையின் பின் அனித்தாவின் செயற்திறன் அம்பாறைக்கும் தேவைப்பட்டது. வேலைகள் விரிவாக்கப்பட்டன. எடுத்த பணியை முடிப்பதற்காகப் பல தடவைகள் பல படைத்தளங்களைக் கடந்து அம்பாறைக்கும் மட்டக்களப்புக்குமாக அவர் போய்வரவேண்டியிருந்தது.

தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் பகைத்தளங்களைக் கடந்து போய் வருகின்ற அனித்தா 1988.11.28 அன்று காட்டிக்கொடுக்கப்பட்டு, தேசத் துரோகிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படும் வழியிலேயே சயனைட் அருந்தி தன்னை அழித்துக்கொண்டார்.

ஈழத்தின் தெற்கில் உதிர்ந்த முதல் வித்து லெப். அனித்தா.

---

கள்ளீச்சையிலிருந்து வெலிகந்த நோக்கிக் காவல் உலாப்போகும் சிறிலங்கா படையினர் மீது தாக்குதல் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில போராளிகளைக்கொண்ட குழுவின் தலைவியாக மேஜர் வளர்மதி, குழுவில் ஒருவராக 2ம் லெப். நிலா.

நிலாவும் வளர்மதியும் உயிர் நண்பிகள். இருவரின் உரையாடலிலும் நகைச்

படையினரின் கண்களில் படாமல் கரையேறி, நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைக்கூட தம் வேவுக் கண்களிலிருந்து விட்டுவைக்கவில்லை இவர்கள்.

தனித்த வேவுப்பாதை. கப்டன் தேனுஜாவின் கனவு அது. அவர் விழிமூடி ஒரு வருடத்தில் நனவானது. பூநகரிப் படைத்தளம் மீது ‘தவளைகளெனப்’ புலிகள் பாய்ந்தபோது தனித்தனியாக தாம் எடுத்த வேவுப் பாதைகளால் கப்டன் துளசிராமும் லெப்.கேணல் முகுந்தாவும் அணிகளை வழிநடத்தி களம் புகுந்தனர்.

---

1992.03.01 அன்று தரைப்படையிலிருந்து முப்பது பெண்போராளிகள் கடலுக்குள் குதித்தார்கள்.

தலைவர் அவர்கள் கடற்புலிகளுக்குரிய பயிற்சித் திட்டங்களை வரையறுக்கும்போது நீச்சற்போட்டி ஒன்று வைத்தார். ஆண்கள் மூன்று கடல்மைல்களையும், பெண்கள் இரண்டு கடல்மைல்களையும் அடிப்படையில் முடித்திருக்கவேண்டும். ஆனால் நீச்சலுக்கான விருதைப் பெறுவதாயின், ஆண்கள் ஐந்து கடல்மைல்களையும், பெண்கள் மூன்று கடல் மைல்களையும் நீந்தி முடிக்கவேண்டும்.

பெண்கள் ஐந்து கடல் மைல்களை நீந்தி முடித்தார்கள். தலைவர் அவர்களிடமிருந்து சிறப்புப் பரிசுகளை பெற்றுக் கொண்டார்கள்.

1995ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதத்தில், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் மாலுமிகள் உட்பட நூற்று இருபத்தெட்டுப் பயணிகளைச் சுமந்து வந்த ‘ஐரிஷ்மோனா’ கடற்புலிகள் மகளிர் படையணியால் வழிமறிக்கப்பட்டு, முல்லைத்தீவுக் கடற்பரப்பில்

வேண்டிய இடம் அது. பலருக்கு இதுவே முதற்களம். இது பெண் போராளிகளின் பகுதி என இராணுவத்தால் இனங்காணப்பட்ட இடங்களிலே ஓயாமல் முன்னேறுவதும் தொந்தரவுத் தாக்குதலும் தான். இத்தகைய தொடர் சம்பவங்களால் சோர்வடையாமல் பெண் போராளிகளுக்குத் தெம்பூட்டியது, தலைவர் அவர்கள் சொல்லிவிடுகின்ற நம்பிக்கையான வார்த்தைகளும் உத்திகளும் தான்.

1990ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் பாரிய முன்னேற்ற முயற்சியொன்றை படையினர் மேற்கொண்டனர். கப்டன் அஜித்தாவின் வழிநடத்தலில் பெண் போராளிகள் நான்குமணி நேரமாக எதிர்ச்சமராடி முன்னேற்ற முயற்சியை முறியடித்தனர். எதிரிகள் பலரை வீழ்த்தியதோடு, எம் - 203 பிஸ்ரல் உட்பட வேறுசில ஆயுதங்களையும், ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றினர். முதன் முதலாக தனித்துப் போரிட்டு, பகைவரின் ஆயுதம் எடுத்த சமரைத் தலைமையேற்று நடத்திய பெருமை கப்டன் அஜித்தாவுக்குரியது.

---

1986ஆம் ஆண்டில் மன்னார் சிறிலங்கா காவல்நிலையம் மீதான தாக்குதல், தள்ளாடியிலிருந்து முன்னேறி வந்த சிறிலங்காப் படையினரை அடம்பனில் இடைமறித்துத் தாக்குதல். 1987இல் யாழ். தொலைத் தொடர்பு நிலையம் மீதான தாக்குதல், மயிலியதனைச் சிறுதளம் மீதான தாக்குதல் என ஆண் போராளிகளின் வழிநடத்தலில் களங்களாடி, சிறிது சிறிதாக போராற்றலை வளர்த்துக்கொண்டிருந்த பெண் போராளிகளுக்கு, இந்திய இராணுவக் காலம் திறந்த பல்கலைக்கழகமானது.

கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பொன்னாலை, மாசியப்பிட்டி, கோப்பாய், நீர்வேலி போன்ற பல இடங்களில் இந்திய இராணுவத்தினரின் ஏராளமான தாக்குதல்களை எதிர்கொண்டு பதிலடி கொடுக்கும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்தது. சூழலை நன்கறிந்த, போர் அனுபவமுள்ள ஆண்

தாக்கவென வன்னிக்கு வந்துவிட்டனர். பெண் போராளிகளுக்குரிய இலக்குகள் தலைவர் அவர்களால் தனித்துப் பிரிக்கப்பட்டன.

சண்டை தொடங்கியது. தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த பகைவரின் காப்பரணை மின்னல் வேகத்தில் அழித்து உள்நுழைந்தனர் பெண் போராளிகள்.

“நான் ஆமியின்ரை பொயின்ரில நிக்கிறன்” வானலையில் வந்தது மேஜர் சஞ்சிகாவின் குரல். அடுத்தடுத்த காப்பரண்களைக் கைப்பற்றவேண்டிய ஆண் போராளிகளின் அணிக்குப் பொறுப்பாகப்போன தளபதியால் நம்பமுடியவில்லை. ஆனால் சஞ்சிகா இப்படிச் செய்யக்கூடியவர்தான் என்பதும் இவருக்குத் தெரியும். உண்மையிலேயே மேஜர் சஞ்சிகாவின் அணி உள்நிற்பதை உறுதிசெய்த தளபதி, பக்கக் காப்பரண்கள் பிடிபடாத நிலையில் ஒரு அணி தனித்து நிற்பதன் ஆபத்தை உணர்ந்து தாக்குதலை வேகப்படுத்தினார். களங்களில் சஞ்சிகா ஒரு புயல்தான்.

அந்நிய இராணுவங்களாலும் சமூக விரோதிகளாலும் சூழப்பட்டிருக்கும் இடமொன்றில் ஒரு பெண் இரகசிய ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் மிகவும் சிரமம். ஈழத்தின் தெற்குப்பகுதியின் இந்நிலையைப் புரிந்துகொண்ட விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவினர் தம்மை யாரென இனங்காட்டிக்



சுவை இழையோடும்.



இருநாள் பயணம். தேவையான உணவுப் பொருட்கள், ஆயுத தளபாடங்களோடு பயணம் தொடர்ந்தது. அருவிகள், மலைகள் கடந்து நீண்ட பயணத்தின் முடிவில், தாக்குவதற்காக நிலையெடுத்தனர். ஊர்திகளில் வந்த சிறிலங்காப் படையினர் மீது இருபது நிமிடங்கள்வரை நீடித்த தாக்குதலில், கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்களைக் கைவிட்டு ஏனையோர் காடுகளுக்குள் தப்பியோடினர். படையினரின் ஜீப் ஒன்றும், உழவு இயந்திரம் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது. எல்.எம்.ஜி உட்பட கைப்பற்றப்பட்ட ஆயுதங்களோடு மாவீராங்கனையான 2ம் லெப்.நிலாவின் வித்துடலையும் சுமந்தபடி, மறுபடி மலைகள், அருவிகள் கடந்து தொடர்ந்தது பயணம்.

---

காரிருளில் தம்மை உருமறைத்தபடி இருளோடு இருளாக வயல் வரம்புகளுடன் சில உருவங்கள் ஊர்ந்தன. பூநகரியிலிருந்த சிறிலங்கா படையினரின் தேடொளிகள் உயிர் பெற்றதும் அவை மண்ணோடு ஒன்றின. தேடொளி வேறுதிசை திரும்பியதும் மறுபடி ஊர்ந்தன. எனினும் ஐயங்கொண்ட படையினர் ரவைமழை பொழிந்தனர்.

ஓசையேதும் எழுப்பாமல், காயப்பட்ட தோழிகளைத் தமது தங்ககம்வரை சுமந்துவந்த வேவுப் புலிகள் அவசர முதலுதவிச் சிகிச்சையில் இறங்கினர்.

நீர் தேங்கி நிற்கும் வயல்களில், இரவுகளில் ஊர்ந்து போவதால் உடல் முழுவதும் சேறு அப்பும். சென்றபணி முடித்துத் திரும்பும்வரை சேறுதான் அவர்களுக்குப் போர்வை.

நல்ல குளிர் இரவுகளில் பூநகரிக் கடலை நீந்திக் கடந்து

தடுத்து வைக்கப்பட்டது. கடற்புலிகளின் இலக்கு ‘ஐரிஷ்மோனா’ அல்ல. இது இறால், இறாலை மகளிர் படையணி தக்கவைத்துக் கொண்டது.

இறால் தேடி சுறாக்கள் புறப்பட்டன. தேடிவந்த சிங்களக் கடற்படையினரின் இரண்டு சுப்படோரா படகுகள் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. நவீன ராடர் கருவிகளும், நவீன பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன. இருபது படையினரைக் காணவில்லை என சிங்கள அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தனைக்கும் ஏதுவான இறாலை கடற்புலிகள் மகளிர் படையணி தன் தூண்டிலில் தக்கவைத்திருந்தது கடற்சமரில் முத்திரை பதித்திருந்தது.

காடு. பெருங்காடு. சிறுத்தைகள் போல் ஓசையின்றி நகர்ந்தார்கள் அவர்கள். ஒட்டவெட்டிய முடி, பார்வையில் கூர்மை, பலமான உடலமைப்பு, பார்த்தாலே தெரியும் இவர்கள் எமது சிறப்புப் படையணியினர் என்பது.

முன்னணியில் நகர்ந்த மேஜர் மாதங்கிக்கு வெளிப்புறத்தே நடக்கும் பெருஞ் சண்டையின் ஓசைகள் கேட்டுக் கொண்டிருந்





# — இரண்டு தசாப்த நிறைவில் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகள் —

தன. மணலாற்றிலுள்ள ஐந்து படைத்தளங்கள் ஒரேநேரத்தில் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சிறிலங்கா இராணுவத்தினரும் மிக விழிப்புடன் இருந்ததால், வெளிப்புறக் காப்பரணிலேயே கடும் மோதல் வெடித்திருந்தது.

மேஜர் மாதங்கியின் அணியோ தளத்தினுள் ஊடுருவி, ஆட்லறி ஏவு தளத்தைக் குறிவைத்து நகர்ந்து கொண்டிருந்தது. போகும் வழியிலேயே சண்டை தொடங்கிவிட்டது. இடைவழியில் இவர்களைக்கண்ட இராணுவம் சுட, இவர்களும் சுட்டவாறே நகர்ந்தனர். முடிந்தவரை சண்டையைத் தவிர்க்க முயன்றும், முடியாமல் போனதால் சண்டையிட்டபடியே ஆட்லறித் தளத்தினை நெருங்கியது அணி. இவர்கள் சுட்டுவீழ்த்த, புற்றீசல் போல் படையினர் வந்துகொண்டேயிருந்தார்கள்

ரவைகள் முடியும்வரை சண்டை நடந்தது. ரவைகள் முடிந்த பின்பும் சண்டை தொடர்ந்தது. சுடுகலன்களும் கைகளாலும் கால்களாலும் சிங்கள இராணுவத்தினரை அடித்து வீழ்த்தியவாறும், இழுத்து விழுத்தி மரங்களோடு மோதியவாறும் நிலைமையைத் தொடர்ந்தும் தம் கட்டுப்பாட்டில் வைத்தபடியே, ஆட்லறியைத் தகர்த்தார்கள் இவர்கள்.

●———●

பெறுமதிமிக்க நூற்று எழுபத்தைந்து வீராங்கணைகளின் உயிர்கள், ஐநூற்று அறுபத்தாறு தூக்கமற்ற இரவுகள், மழைக் காலங்களில் நனைந்தவாறும், நீர் நிறைந்த பதுங்கு குழிகளோடும் கழிந்த நாட்கள், வெயில் காலங்களில் நாவரண்டு மர இலைகளில் வழியும் பனிநீரையும் விடாது சேகரித்துக் குடித்த நாட்கள், சிறிலங்கா படையினர் நகரும் திசைகளிலெல்லாம் பதுங்கு குழிகளை அமைத்தவாறே நகர்ந்த நாட்கள், நீண்ட தொலைதூர சுமைதாங்கிய நடைப் பயணங்கள், ஓயாத சண்டைகளால் உண்டான உடற்களைப்பு எல்லாவற்றையும் கடந்து ஓயாத விழிப்புடன் 2ம் லெப். மாலதி படையணி போரிட்டது 'ஜெயசிக்குறு' எதிர் நடவடிக்கைக் களத்தில்.



நெடுங்கேணியில் ஆரம்பமாகி, புளியங்குளம், புதூர், மன்னகுளம், மாங்குளம், வன்னிவிளாங்குளம் என்றுபோய் கடைசியில் அம்பகாமம்வரை களம் நீண்டு அகன்றது. போரனுபவம் மிக்க பழையவர்கள், போர்க் களத்தில் வைத்தே புதிய போராளிகளுக்குச் சண்டை பழக்கிய களம் அது. மறுபடி மறுபடி சிறிலங்கா படையினரின் பதுங்கித் தாக்கும் அணிகள் ஊடுருவ முயன்றுகொண்டேயிருக்கும். இரவுபகல் என்றில்லாது எந்நேரமும் விழிப்புடனிருக்கும் 2ம் லெப்.மாலதி படையணிப் போராளிகளின் சுடுகுழல்கள் கனன்று கொண்டேயிருக்கும்.

அப்போதுதான் குறுகியகால படையத் தொடக்கப் பயிற்சியை நிறைவுசெய்த புதிய அணியினர் அம்பகாமத்துக்கு வந்திருந்திருந்தனர். 1998ஆம் ஆண்டின் ஜூன் மாதம், ஏற்கனவே இருதடவை சிறிலங்காப் படையினரை இவர்கள் எதிர்கொண்டிருந்தனர். இன்று மூன்றாம் முறையாக இராணுவம் முன்னேறியது.

படையினர் முன்னகர்வதை, காப்பரண்களிலிருந்து குறிப்பிட்டளவு தூரம் முன்னே அவதானிப்பு நிலையில் நின்ற 2ம் லெப்.இன்குறிஞ்சி கண்டு, சுடத் தொடங்கிவிட்டார். இவரைத் தொடர்ந்து பின்னே காப்பரணில் நின்ற தர்சினி, மேஜர் வாணி முதலானோரும் தாக்கத் தொடங்கிவிட்டனர்.

இவர்கள் பின்னே வரும்படி கத்தியதையும் கருத்திலெடுக்காமல், அவதானிப்பு நிலையைவிட்டு வெளியேறாமல் தனியாக நின்று, தனது ரவைகள் முடியும்வரை சுட்டுவிட்டு, நெஞ்சில் பட்ட காயத்துடன் எழும்பி ஓடிவந்து காப்பரணில் விழுந்தவர், விழிமூடிப் போனார்.

அச்சம் சிறிதுமற்ற அந்தப் புதிய போராளியின் துணிச்சல் 2ம் லெப். மாலதி படையணியின் அன்றைய நாளை பெறுமதியாக்கி விட்டிருந்தது.

உலக வரலாற்றின் இரண்டாம் நோர்மன்டித் தரையிறக்கம் அது. இம்முறை அது குடாரப்புவில் 2000.03.26 அன்று அதிகாலையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் நிகழ்த்தப்பட்டிருந்தது.

தரையிறங்கிய வேகத்திலேயே, தொண்டமனாற்றிலிருந்து ஆனையிறவுநோக்கி நீண்டு கிடக்கும் கடல்நீரேரியைக் கடந்து, பளைக்கும் முகமாலைக்கும் இடையிலான யாழ்.நெடுஞ்சாலையை ஊடறுத்து நிலைகொண்டன புலியணிகள். நீரேரியின் கரையிலிருந்து நெடுஞ்சாலையை நெருங்குவதற்குச் சற்று முன்புவரை, ஆனையிறவைப் பார்த்தபடி 2ம்லெப்.மாலதி படையணியும், அவர்களைத் தொடர்ந்து நெடுஞ்சாலையை வெட்டிக்கடந்து கிளாலிநோக்கிப் பார்த்தபடியும் மறுபடி வெட்டிக்கடந்து சாவகச்சேரி நோக்கிப் பார்த்தபடியுமாக மேஜர் சோதியா படையணியும், தொடர்ந்து சாவகச்சேரியைப் பார்த்தபடியே லெப்.சாள்ஸ் அன்ரனி படையணியும், சிறப்பு எல்லைப்படை வீரர்களும் 2ம் லெப்.மாலதி படையணியின் பிறிதொரு அணியும் நிலைகொண்டிருந்தன.

நெடுஞ்சாலையைக் கடந்து கவிழ்ந்த U வடிவில் மேஜர் சோதியா படையணி தனித்து நின்றது. வேம்பொடுகேணி பாடசாலை, புகையிரதப்பாதை எல்லாமே இவர்களின் கட்டுப்பாட்டில். 2000.04.02 அன்று ஆனையிறவுத் திசையிலிருந்து முன்னேறி உள்நுழைந்த சிறிலங்காப் படையினரை 2ம் லெப். மாலதி படையணி சம்பலாக்கிவிட்டிருந்தது. இனி எந்நேரமும் தமது பகுதியில் ஒரு தாக்குதல் நிகழலாமென சோதியா படையணி விழிப்புடன் நின்றது. ஏற்கனவே 2000.03.27 அன்று படையினர் செய்த முன்னேற்ற முயற்சியொன்றை இவ்விடத்தில் நின்ற லெப். சாள்ஸ் அன்ரனி படையணியினர் முறியடித்துமிருந்தனர். இன்று 10ஆம் திகதி. படையினர் பாரிய நகர்வொன்றை ராங்குகளைப் பயன்படுத்திச் செய்தனர். பாடசாலைக்கு அப்புறமும் இப்புறமுமாக இரு வரிசையில் இராணுவம் முன்னேற, இவர்களின் அணி மூன்று கூறுகளாக வெட்டப்பட்டது. எங்கு பார்த்தாலும் ராங்குகள். சுழல்மேடைகள் சுழலச் சுழல, பீரங்கி வாய்கள் புகைகக்க, எங்கும் பாரிய வெடிப்பொலிகள். கொப்புகள், கற்கள், மண் எல்லாம் மேலுயர்வதும் விழுவது மாக களத்தில் அனல் வீசத்தொடங்கியது.

செல்வியின் காப்பரணருகே, அது காப்பரண் என்பதை இன்னமும் கவனிக்காத ராங்கொன்று நின்று முழங்கிக்கொண்டிருந்தது. கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்த செல்விக்கு, ஒவ்வொரு காப்பரணின் தொடர்பும் அற்றுப் போய்க்கொண்டிருந்தது. கூடநின்ற இலக்கணாவை ராங்கிக்கு கைக்குண்டை வீசுமாறு கூறிவிட்டு, இல்லாமல்போன தொடர்புகளை எடுக்க முயன்றுகொண்டிருந்தார்.

முதலில் வீசப்பட்ட குண்டு சற்று சறுக்கிப்போனாலும், இரண்டாவது குண்டு தன் பணியைச் செவ்வனே செய்ததால் ராங்கியினால் நகரமுடியவில்லை.

சேதமுற்ற ராங்கியினைச் சீர்செய்யவென உள்ளிருக்கும் படையினர் வெளிவர முயற்சிப்பதும், இவர்கள் சுடுவதும் அவர்கள் தலையை உள்ளிழுத்துவிட்டு மறுபடி வெளிவர முயற்சிப்பதும், இவர்கள் சுட்டு வீழ்த்துவதுமாக, ஒருநாள் காலை தொடங்கிய சண்டை மறுநாள் காலை முடிவுக்கு வரும்வரை அந்த ராங்கியை மீட்க இராணுவத்தால் முடியவில்லை.

மலையான மலையெ, பெரும் பலமெனப் படையினரால் நம்பப்படுகின்ற ராங்கியொன்று, தனித்து நின்ற இரு பெண் புலிகளால் அன்று வெற்றிகொள்ளப்பட்டது.

●———●

ஓயாத அலைகள் - 02, 03 நடவடிக்கைகளால் தமிழீழத்தின் பாரிய நிலப்பரப்பை விடுதலைப்புலிகள் மீட்டிருந்தனர். ஒன்பது வருடங்களாக சிங்கத்தின் குகையாகக் கிடந்த ஆனையிறவு மறுபடியும் தமிழ்மக்களின் சொத்தாக மாறியதில் சிங்கள அரசு சினத்தோடு இருந்தது.

ஆனையிறவைப் பிடிக்கும் அவாவில் மறுபடியும் சிறிலங்காப் படையினர் முன்னேற முயல்வர் என்பதை உய்த்துணர்ந்த தலைவர் அவர்கள், திட்டமொன்றைத் தீட்டினார். எழுதுமட்டுவாள், முகமாலை, கிளாலி, நாகர்கோவில் என நீண்டுகிடக்கும் போராளிகளின் முன்னரங்குகளைப் பாதுகாக்கும், பலப்படுத்தும் திட்டம் அது.

திட்டத்தைச் சுமந்தபடி லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி படைப்பிரிவு களமிறங்கியது. காப்பரண்களில் நின்ற 2ம் லெப்.மாலதி படையணிப் போராளிகளும், மேஜர் சோதியா படையணிப் போராளிகளும், வேலைசெய்து கொண்டிருந்த பெண் போராளிகளுக்கு (லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி படைப்பிரிவு பெண் போராளிகளை மட்டுமே கொண்டது) காப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். வேலை முடிந்தது. 2001.04.24 காலை விடிந்தது. 5.30 மணியளவிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் உடைப்பை ஏற்படுத்திய சிறிலங்காப் படையினர், வேகமாக உள்நுழைந்து ஒரு கிலோமீற்றர் தூரம்வரை போய், பெட்டிவடிவில் போராளிகளைச் சுற்றி வளைத்தனர்.

தொடங்கியது கடும் சண்டை. படையினரின் கைகளில் விழுந்த காப்பரண்களைப் போராளிகள் கைப்பற்றியபடியே போக, பின்னாலேயே படையினரும் வந்து புகுந்துவிடுவர். மறுபடியும் காப்பரண்களை மீட்டபடி போராளிகள் போக, பின்னால் வேறு படையினர் வந்து புகுந்துவிடுவர். பதினான்கு தடவைகளுக்கு மேல் படையினரிடமும் போராளிகளிடமும் காப்பரண்கள் கைமாறிக்கொண்டிருந்தன.

லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் மகளிர் படையணியின் எறிகணை செலுத்திகள், முன்னரங்கக் காப்பரணில் நின்று சமராடியபடியே ஆதரவுச் சூடுகளைக் கேட்கும் போராளிகள் சொல்கின்ற ஆள்கூறுகளுக்கு அமைவாக, எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தன. முன்னேறிய சிங்களப் படையினர் இப்போது எறிகணை செலுத்தியை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

சாதாரணமாக, சமர்க்களத்திலிருந்து பாதுகாப்பான தூரத்துக்கு அப்பால்தான் எறிகணை செலுத்தி இடம் மாற்றப்படும். எறிகணை செலுத்தும் குழுவினர், தமது போர் உத்தியில் மாற்றம் செய்தனர். முன்னரங்கப் போராளிகளுக்கான ஆதரவுச்சூடு வழங்குவதை இடைநிறுத்தாமல் தொடர்ந்து செய்யும்படியே, சூழவந்த படையினரைத் தமது சுடுகலன்களால் தாக்கத் தொடங்கினர். எறிகணைகளை ஏவி, ஏவி பீரங்கிவாய் சிவந்தது. பீரங்கியைப் பகைவரிடமிருந்து பாதுகாக்க சுடுகலன்களும் சிவந்தன. பின்னரங்கில் போர் தீச்சுவாலை கக்கியது.

மூன்றாம் நாளின் முடிவில், இழப்புக்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம், முற்றுகை வளையத்தை விலக்கிக்கொண்டு தப்பியோடத் தொடங்கியது. பகைவர் உள்நுழைந்த பாதைகள் யாவற்றையும் எஞ்சிய போராளிகளும் எல்லைப்படை வீரர்களும் இணைந்து மூடிவிட, உள்நிற்கும் இராணுவத்துக்கு முன்புறமும் போராளிகளின் தாக்குதல், முதுகுப்புறமாகவும் தாக்குதல்.

கலைந்து செல்லும் பட்டிபோல கண்ணில் பட்ட திசைகளாலெல்லாம் முன்னரங்க காப்பரண் வரிசையைக் கடந்து ஓட முற்பட்ட இராணுவத்தினரின் கால்கள் பறந்தன. விழுந்தவரின் உயிர்களும் பறந்தன. தப்பியோடும் திசையெல்லாம் வெவ்வேறு வடிவங்களில் வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள், பொறிவெடிகள், சூழ்ச்சியமைப்புகள் எல்லாம் வெடிக்க, லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி கூட தமிழீழத்தையே நினைக்கும் தலைவனின் உழைப்புத் தெரிந்தது. ●



**குறிப்புகள்:-**

**(அ)** 1985.08.18 அன்று இந்தியாவின் திண்டுக்கல்லில் உள்ள சிறுமலைக் காட்டில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பாசறை ஆரம்பமானது. எனினும், பெண்களை அரசியல்மயப்படுத்தலும், போராட்டத்தில் பெண்கள் உள்வாங்கப்படலும் இதற்கு முந்தைய ஆண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டன,

**(ஆ)** கப்டன் அஜித்தா வீரச்சாவு 1990.12.22 கட்டுவனில்,

**(இ)** லெப்.கேணல் ஜோனி வீரச்சாவு 1988.03.13 தேவிபுரத்தில்,

**(ஈ)** மேஜர் சஞ்சிகா வீரச்சாவு 1990.11.03 மாவிட்டபுரத்தில்,

**(உ)** 2ம் லெப். நிலா வீரச்சாவு,

**(ஊ)** வேவுப் புலிகள் வீரச்சாவு
கப்டன் தேனுஜா 1992.07.14 கறுக்காய்தீவில்
கப்டன் துளசிராம் 1993.11.11 பூநகரியில்
லெப்.கேணல் முகுந்தா 1997.06.19 குறிசுட்டானில்,

**(எ)** இரண்டு சுப்படோராக்கள் தாக்கப்பட்டது 1995.08.29 அன்று,

**(ஏ)** 2ம் லெப்.இன்குறிஞ்சி வீரச்சாவு 1998.06.16 அம்பகாமத்தில்.



www.eelamview.com

# ஆற்றல்மிகு வீரர்களாக எங்கள் அன்னையர்

**பூரணம் அம்மா,**
**ஆரையம்பதி, மட்டக்களப்பு**

மட்டக்களப்பின் அந்த வைத்தியசாலையில் குப்பிகடித்து வீரச்சாவடைந்த அந்த இரு இளைஞர்களின் உடல்களையும் சிங்களப்படைகள் கொண்டுவந்து வீசிவிட்டுப் போனபோது, பூரணம் அம்மாவும் அங்கேதான் நின்றிருந்தார். அருகில் சென்று பார்க்கமுடியாமல் யார்பெற்ற பிள்ளைகளோ என்று குமுறி அழுதுவிட்டு சிங்களப்படைகளை திட்டித்தீர்த்து சபித்து வீடு திரும்பியிருந்தவரைச் சந்திக்க, அவர் உணவூட்டி பகையிடமிருந்து மறைத்துப் பாதுகாத்த பிள்ளைகளின் வருகை.

வாசல்வரை வந்தவர்களுக்குள் தயக்கம். அன்றுவரைக்கும் இல்லாத தடுமாற்றம். போராடு என்று அம்மாவே அனுப்பிய அவரது ஒரே ஒரு மகன்தான் வைத்தியசாலையில் போடப்பட்டவன் என்பதை எப்படிச் சொல்வது? தாங்குவாவா? சத்தம் போட்டு குழறுவாரா? "அவனைக் குடுத்திட்டு நீங்கள் ஏன் வந்தனீங்கள்" என்று ஏசுவாரா? மனதுக்குள் கேள்விகள் சில நிமிடங்கள் மட்டும்தான்.

அம்மாவுக்கு பார்வையிலேயே புரிந்திருக்கவேண்டும். "என்னைத்தான் நீங்கள் முதல்ல கண்டனீங்கள், பிறகுதானே அவனைக் கண்டனீங்கள். அவனுக்காக நீங்கள் ஏன் வராமல் நிக்கிறீங்கள். உள்ளுக்க வாங்க பிள்ளைகள்". அம்மா அம்மாவேதான். யாருக்குவரும் இந்த மனத்திடம். மகனின் வீரச்சாவிற்கு முன்னும்சரி, பின்னும்சரி அம்மா மாறவேயில்லை. அவரின் பலமும் துணிவும் இறுதிவரை அவருடன் கூடவே இருந்தது. 1990களில் தேசத்துரோகக் குழு ஒன்றினால் பிடிக்கப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டபோதும், அம்மா அவர்களை அடித்துப் பிடித்து போராடியே உயிரைவிட்டதாக, பார்த்துக்கொண்டே ஏதும் செய்யமுடியாது நின்ற அவரது பிள்ளைகள் சொல்கிறார்கள். சாகும்போது அம்மாவுக்கு வயது 55தான்.

1984இல் இடம்பெற்ற சிறையுடைப்பு ஒன்றின்போதே அம்மா பிள்ளைகளுக்கு அறிமுகமானார். அதன்பின் அம்மாவின் உணவு வேளைகள் ஒவ்வொன்றும் யாரேனும் ஒருவரையேனும் எதிர்பார்த்துக் காத்திருந்த பின்னே இடம்பெறும். எதிர்பார்த்தவர்கள் வந்தால் உணவு பங்கிடப்படும். சிலவேளை அம்மாவிற்குரியதும் அவர்களுக்கே போகும். அம்மா தேநீரோடு மட்டும் இருந்துகொள்வாள். ஆனால் வயிறும், மனமும் நிறைந்து உற்சாகம் கூடியிருக்குமேயொழிய சோர்ந்திருக்காது. மட்டக்களப்பில் நின்று அம்மாவிடம் சாப்பிடாத போராளிகளே இல்லை எனும் அளவிற்கு அந்தத் தாய்

## தமிழவள்

போராளிகளை அரவணைத்திருந்தார். இத்தனைக்கும் தையல் மூலம் வந்த வருமானமே அம்மாவுக்கு பெற்ற பிள்ளைகள் மூன்றையும், வந்த பிள்ளைகள் அனைவரையும் தன் கையின் உழைப்பை நம்பியே அம்மா வளர்த்தார். ஒரே மகனை போராட்டத்திற்குத் தானே அனுப்பியபோதும் சரி, அந்த மகன் வீரச்சாவடைந்தபோதும் சரி அம்மாவின் துணிவும் விடுதலை மீதிருந்த ஓர்மமும் இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்க வைக்கும். இந்திய இராணுவம் எம் மண்ணிலிருந்த காலத்தில் அவர்களுடன் இணைந்து தேசவிரோதச் செயலில் ஈடுபட்ட அமைப்பொன்றினால் அம்மா கைதுசெய்யப்பட்டார். பழுக்கக் காய்ச்சிய கம்பிகளினால் குறியிடப்பட்டு சித்திரவதைக்குள்ளான பின்னும்கூட அம்மா எள்ளளவேனும் மாறிவிடவில்லை. சூட்டு அடையாளங்கள் தெரியும் அந்தக் கைகள் உணவிடுவதையும் அரவணைத்துக் காப்பதையும் நிறுத்தவேயில்லை தனது சாவு வரையும்.

**தேவநாயகி**

தனது ஒன்பதாவது வயதில் தந்தை ஞ.து.ஏ.செல்வநாயகத்திற்கு காங்கேசன்துறையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் மாலைபோட்டு அவருடன் உரையாடியதோடு அக்காவின் தமிழின விடுதலைப்பயணம் ஆரம்பித்திருந்தது.

அரசியலில் பெண்கள் அதிகம் ஈடுபடாத காலம் அது. தனது ஆயுர்வேத (D.A.M) பரீட்சையை முடித்து, தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையை 1967ஆம் ஆண்டு அக்கா பெற்றுக்கொண்டபோது அவருக்கு வயது 24. அதற்கிடையில் எத்தனை சத்தியாக்கிரகங்கள், சட்டமறுப்பு போராட்டங்கள் அத்தனையும் விடுதலைக்காக அவரைப் புடம்



போட்டவையாகவே இருந்தன.

1961ஆம் ஆண்டில் ஒரு மாணவியாகக் கலந்துகொண்ட சிங்களச் சட்டமறுப்புப் போராட்டம், ஒரு சில பெண்களே அரசியற் பணிகளில் பங்கேற்ற 1965ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல், 1967ஆம் ஆண்டில் மருதனார்மடத்தில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சி மாநாடு, 1969ஆம் ஆண்டில் துடிப்பான இளைஞர் சமுதாயத்தை உள்வாங்கி தமிழரசுக்கட்சி கொண்ட புதுத்தோற்றம், 1970ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் என அனைத்தினோடும் அக்கா இணைந்திருந்தார்.

1972மே மாதம் 14நாள் தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டபோது அக்கா போன்ற இளம் சமூகத்தவர் எதிர்த்தபோதும் வட்டுக்கோட்டை தனித்தமிழ் தீர்மானம், அவர்களைத் தொடர்ந்தும் அரசியல் பாதையில் பயணிக்கவே வைத்தது. 1978ஆம் ஆண்டு வரையும் அவரது சாத்வீக அரசியலைத் தொடர்ந்து 1978இல் தலைவர் பிரபாகரனை சந்தித்ததோடு ஆரம்பித்த அவரது அடுத்தகட்டப் பணியானது, காலத்திற்கேற்றவாறு மாற்றம்பெற்று 1990களில் இராணுவப் பயிற்சி பெற்ற போராளியாகவும், வைத்தியராகவும் இன்றும் தொடர்கின்றது. 1977ஆம் ஆண்டு தனித் தமிழீழத்திற்கான வாக்கெடுப்பில் வெற்றிபெற்று கட்டுவனில் நடத்தப்பட்ட வெற்றிவிழாவின்போது தந்தை செல்வநாயகம் "தமிழ்மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும். தமிழீழம்தான் முடிந்த முடிவு. தமிழீழத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. அதை நாங்கள் எடுக்கத் தவறினால், இளைஞர்கள் அதை எடுக்க முன்வருவார்கள்".

என்று உரையாற்றியதை நினைவுகூரும் அக்கா, "அவருடைய வழி சரியென்றுதான் வெளிக்கிட்டனான். பிறகு அவர்காலம் முடிந்ததும், அவர் நம்பிச்சென்ற அந்த இளைஞர் படையோடு என்னை இணைத்துக்கொண்டேன்" என்கிறார். யாழ்.நெடுஞ்சாலை திறக்கப்பட்டபோது அக்காவைப் பார்த்து சிங்கள இராணுவத்தைச் சேர்ந்த ஒருவன், "சுடுதண்ணீரிலயா குளிக்கிறனீங்கள்" என அவரது வயதைக் குறிப்பிட கிண்டலாகக் கேட்டபோது, அக்கா சொன்ன பதில் இப்போதும் காதில் ஒலிக்கிறது. "நீ உதில இருக்குமட்டும் நான் சுடுதண்ணியில குளிக்கிறதைப்பற்றி யோசிக்கமாட்டன்".

---

**1**984ஆம் ஆண்டின் மாரிகாலப்பகுதி அது. ஒரு சில ஆயுதங்களுடன் ஐந்து, ஆறுபேர் என போராளிகள் அனைத்து மாவட்டங்களிலும் பரவத்தொடங்கிய நேரம்.

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய் காடு, அடர்காட்டின் அசாதாரண அமைதியும் திடீர் திடீர் என எழும் யானைபோன்ற காட்டு மிருகங்களின் சத்தங்களுமாய் ஓர் புதிதான, புதிரான சூழல். சிங்களப் படைகளின் சுற்றிவளைப்புக்களிலிருந்தும், தேடுதல்களிலிருந்தும் தப்புவதற்காக அப்படியான காடுகளே புலிகளின் வாழிடங்களாயின.

காட்டில் வாழும் ஜீவராசிகளுக்கு காடும் அதனோடிணைந்த இயற்கையும் உணவளிக்கும், கரந்துறையும் இந்தப் போராளிகளுக்கு உணவு? அட, அதைப்பற்றி என்ன கவலை!? அதற்குத்தான் அம்மா இருக்கிறாரே!

அம்மா ஏற்கனவே ஒரு மகனை இந்த மண்ணிற்காக ஈந்திருந்தா சாதாரணமாக, வழமையாக சந்திக்கின்ற பெண்களைவிட அம்மா வேறுபட்டே இருந்தார். உடல் வலுவில், அச்சமென்றா ஏதென்றே அறியாத மனத்துணிவில் அங்கிருந்த அ இளைஞர் குழு ஆச்சரியப்படத்தக்க வகையில் அவரது இயல்புகள், ஆற்றல்க இருந்தன.

காட்டில் அவர்களது இருப்பிட ஒரு பேராறையும் சில அருவிகளையும் தாண்டியதாக இருந்தது. அவற்றின் ஆழமும், அகலமும் கண்ணுக்குத் தெரியாத சுழிகளும் ஆற்றைப்பற்றிய அழகிய கற்பனைகளுக்கப்பால் திகிலை ஊட்டுவதாகவே எப்போதும் இருக்கும். திசையை ஊகித்துப் பாதையை உருவாக்குவதென்பது கடும் சிரமமானதாகவும், அனைத்து இடங்களுமே ஒரே மாதிரியானதாகவும் தோன்றி புத்தியைக் குழப்பி மயங்கச் செய்துவிடும் பயங்கர மிருகங்களின் காலடிகளும், எச்சங்களும் அவற்றின் இருப்பு அருகாமையில் என்பதை உணர்த்தும். இத்தனையையும் தாண்டி அம்மா உணவு சுமந்துவருவார். முதலி வெளியில் யாருக்கும் தெரியாதவாறு உள்ளுக்குள் இருக்கும் பிள்ளைகளுக் நான்கு, ஐந்து நாட்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டின் ஓரப் பகுதியொன்றில் சேர்க்கத் தொடங்குவார். வேண்டிய அளவு சேர்ந்ததும், அன்றே சாப்பிடக்கூடிய சமைத்த உணவுடன் புறப்படுவார். பற்றையொன்றுக்குள் சேர்த்த அனைத்தையும் ஒன்றுதிரட்டி ஒருபெரும் மூட்டையாகக் கட்டி தலையில் தூக்கி வைத்தாரென்றால் நடைதான். பிள்ளைகளிருக்குமிடம் சேருவதுமட்டுமே குறியாயிருக்க, காடும் இடையிடையே பாயும் ஆறுகளும் அம்மாவின் கட்டளைக்கு அடிபணியும் விதமாக அப்படி ஒரு நடை. நனைந்து, காய்ந்து பின் நனைந்தபடியே உரிய இடம் சேர்ந்து உணவைப் பங்கிட்டு, தேநீர் தயாரித்து கொடுத்து, நான்கைந்து நாட்களுக்குரிய பொருட்களை ஒப்படைத்து அவர்களது அவசரத் தேவைகளைக் கேட்டறிந்து மீண்டும் ஊர்நோக்கி நடக்கத்தொடங்குவார். அம்மாவுக்குள் எங்கிருந்துதான் இத்தனை பலமும், துணிவும் தோன்றியிருக்கும்? பிள்ளைகள் வியப்பிற்குள்ளாவார்கள்.

இதற்கிடையே ஊருக்குள் ஓர் அவலம். போராளிகளுக்கு உதவியதற்காகவோ, அன்றி தங்களுக்கெதிராக மக்கள் எதுவும் செய்யக்கூடாது என்பதற்காகவோ சிங்களப்படைகள் ஒரு கோரக் கொடுமையை அந்த மக்கள்முன் அரங்கேற்றியது.

இரு தமிழ் இளைஞர்கள் பிடிக்கப்பட்டு, அவர்கள் இருவரது உள்ளங்கைகளுக்கூடேயும் முள்ளுக்கம் குத்திக் கோர்த்து பிணைக்கப்பட்டு கோரமாக கொலைசெய்யப்பட்டனர். பார்ப்போரை அச்சத்திற்குள்ளாக்கிய இந்தச் செயல் அம்மாவையும் தற்காலிகமாகவேனும் தடுக்கும் என நினைத்திருக்க, அம்மாவின் காட்டுப்பயணம் மறுநாளும்.... தோலில் சுருக்கங்கள் தோன்றத்தொடங்கிய வயதின் பின்னும் அவருக்கிருந்த வலிமை, களைப்பின்மை பின்னாளில் களமாடவென வந்த பெண்களின் வருகைக்கு ஒரு ஆரம்ப அறிகுறி என்பது வெளிப்படை. அம்மாவுக்கு இப்போது தொண்ணூறை தாண்டிய வயது. இப்போதும் வாழ்கிறார் தன் வாரிசுகளின் வெற்றிகளை இடுங்கிய கண்களால் இரசித்தபடி.

# உறவுகள் செதுக்கிய உறுதியின் உறைவிடம்

## கரும்புலி கப்டன் சத்தியா / சசி



**- கிருஸ்ணமூர்த்தி முகுந்தினி -**
**யாழ்ப்பாணம்**

**வீரமலர்வு: 1978.12.06**
**வீரச்சாவு : 2000.03.31**

**ச**த்தியா வீரச்சாவு என்று அறிந்தபோது அதை ஏற்றுக்கொள்ளும் திடம் யாருக்கும் இருக்கவில்லை. சத்தியா... அவளை எப்படித்தான் பிரிந்திருப்பது. அன்பாய் சண்டைபோடும் அவளின் குழந்தைத் தனமான பேச்சு சின்ன விடயங்களையே தாங்கமாட்டாமல் கசிகின்ற கண்களும் மீண்டும் மீண்டும் அவளை நினைவூட்டுவனவாகவே இருந்தன.

சின்னப்பிள்ளை அல்ல கட்டையென்றுதான் அவளைச் சொல்வார்கள். அவ்வளவு உயரம் குறைவு. ஆனால் அவள் சின்னப்பிள்ளையில்லை. 06.02.1978இல் பிறந்தவள். 11ஆம் ஆண்டில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போது போராட்டத்தில் இணைந்துகொண்டவள்.

நடக்கின்றபோது அவளின் துடியாட்டமான நடை ஒரு உற்சாகமான கறுப்புத் தாரா நடப்பதுபோல் இருக்கும். அவள் 'லோ' கட்டினால் அதுவும் அவளும் ஒரேயளவு போல் எண்ணத் தோன்றும். ஆனையிறவுக்குள் நடத்தப்பட்ட பல கரும்புலித் தாக்குதல்களில் இவளைச் சேர்த்துக்கொள்ளவில்லை. தண்ணீருக்குள்ளால் நகர்ந்து செல்லவேண்டிய அநேகமான தாக்குதல்களுக்கு இவள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. அவளின் குறைந்த உயரம்தான் அதற்கு ஒரேயொரு காரணம்.

நித்தமும் இப்படியே சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடுமோ என்று நினைத்தால் அவளுக்கு அழுகை வந்துவிடும். தனக்குச் சந்தர்ப்பம் தரும்படி மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டேயிருப்பாள். இவளோடு அன்பாய் சண்டை செய்வதற்காக மற்றத் தோழிகள் இவளைப் பார்த்துக் கேலி செய்வார்கள்.

> "இஞ்ச இருட்டுக்குப் பயப்பிடுகிறனி விளக்கு நூந்தாலே கத்திறனி அங்க என்னண்டு துணிவாய் நிற்கிறாய்" என்றபோது அவள் சிரிப்பால் மட்டும் சமாளித்துக்கொண்டாள். அது வெறும் சிரிப்பல்ல. அந்தச் சிரிப்புக்குள் ஏராளமான அர்த்தங்கள் இருந்தன.

"நாங்க போறம்..." என்ற போதெல்லாம் அவள் தனது உறவுகளை மறைத்துச் சிரிப்பாள். "நானும் வருவன்தானே. ஆனையிறவுக்குத்தான் தண்ணி கடக்கவேணும். பலாலி றோட்டால போவன்'' என்று தன் உள்ளத்தில் என்றுமே மாறாத உறுதியைச் சொல்வாள். ஆனாலும் அவளுக்குள் உள்ளூர ஒரு சோகம் இருக்கவே செய்தது. தானும் விரைவாகப் போய் தனது இலக்குகளை அழிக்கவேண்டும். நளா அக்காவும் இன்னும் எத்தனையோ கரும்புலி வீரர்களின் கனவோடு சென்று மக்களின் அவலவாழ்வு போக்கவேண்டும் என்ற துடிப்பு, வெளித்தெரியாமல் அவளிற்குள்ளேயே மறைந்திருந்தது. அவளைக் கரும்புலியாய் மாற்றியது அவள் பழகிய ஒவ்வொரு கரும்புலி வீரர்களின் முகங்களும் அவர்களின் இலட்சியம் சுமந்த அங்கங்களும்தான். அந்த வீரர்களின் முகங்கள்தான் நெஞ்சில் நிறைந்திருந்தது. கரும்புலிகளோடு சேர்ந்து வாழ்வதும் அவர்கள் பிரியும்போது இதயம் விம்முவதும் யாராலும் தாங்கமுடியாத வேதனை. அவளிற்கு இது எத்தனையோ தடவை வந்துபோன நிகழ்வு.

இயக்கத்தில் இணைந்து அடிப்படை இராணுவப் பயிற்சி முடியமுன்னரே சூரியகதிர் இராணுவ நடவடிக்கையில் காவு குழுவாகச் செயற்பட்டவள்.

காயப்பட்ட போராளிகளையும், வீரச்சாவடைந்த வித்துடல்களையும் சுமந்து அவள் தோள்களும், கைகளும் காய்த்திருந்தன. முதலுதவிச் சிகிச்சை வழங்கிக்கொண்டிருந்தபோது பல போராளிகள் அவள் மடியிலேயே உயிரடங்கியிருக்கிறார்கள். அவையெல்லாம் வேதனைதான். அவள் தனக்குள்ளேயே அழுதுகொண்டிருந்தாள். அந்த நாட்கள்தான் போராட்ட வாழ்வில் அவள் முதலில் சந்தித்த கடுமையான நாட்கள். ஈர உடுப்புக்கள், உடைமாற்ற நேரமற்றுக் கடமைகள், ஓய்வில்லாமல் தொடர்ச்சியாகக் களப்பணிகளில் ஈடுபட்டவள் அந்தக் களத்திலிருந்து வந்த சிறிதும் ஓய்வில்லாமலே முல்லைத்தீவுச் சமரிற்கான பயிற்சிகளில் ஈடுபட்டு சண்டையிலும் பங்குபற்றினாள். அந்தச் சண்டையில் தலையில் சிறு காயம், அது மாறமுன்னரே 'சத்ஜெய' சண்டைக்குப் போகப்போறன் என்று அடம்பிடித்து சத்ஜெய சண்டையில் நின்ற போதுதான் இன்னொரு முக்கியமான பணி இருக்கிறது என்று பின்களமுனை அழைத்து இந்தப் புதிய பணி கொடுக்கப்பட்டது.

அவள் கரும்புலிகள் அணிக்குள் நிர்வாகம் சம்பந்தமான வேலைகளுக்காகச் சென்றாள். அங்கே செல்வதற்கு முன்பிருந்த கரும்புலிகளின் தியாகங்களை, அவர்களின் உணர்வுகளை புரிந்துவிட வேண்டும் என்பதில் ஆர்வம் மிகுந்திருந்தது.

அவளின் விருப்பப்படியே அமைந்துவிட்ட இந்தப் பணியால் மகிழ்ந்தாள். நாட்கள் செல்லச்செல்ல அவர்களுடனான உறவும் வலுப்பெற அவளின் செயற்பாடுகளுக்குள்ளேயே மாறுதல்கள் வந்தது. ஒவ்வொரு கரும்புலி வீரர்களும் எவ்வளவு மென்மையானவர்கள், மற்றவர்களின் உணர்வுகளை எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவர்கள், தமக்குள்ளேயே எத்தனையோ சோகங்கள், வேதனைகள் இருந்தாலும் சிரித்துச் சிரித்து மற்றவர்களிற்காக வாழ்கிறார்கள். இப்படி அவர்களின் இதயங்களை அறிந்தபோது அவர்கள் மீதான பாசம் வலுவானது.

நிலைக்காத உறவென்று தெரிந்த பின்பும் நினைவுகளில் அவர்களின் நினைவுகளே நெருக்கமானது. அங்கே நளாதான் இவளில் அதிகபாசம். அவளும் அப்படித்தான். பயிற்சி முடிந்து வரும் ஓய்வு நேரங்களிலும் அவள் இவளோடு கதைப்பதும் அறிவுரை சொல்லுவதுமாகவே பொழுதுகள் கழிந்தது. அவளின் நெஞ்சிற்குள் இருந்த உணர்வுகள் முழுவதும் இவளுக்கும் தெரிந்திருந்தது.

ஆனையிறவுத் தளம்மீது நடத்தத் திட்டமிட்டிருந்த கரும்புலித் தாக்குதலிற்கு ஆசா தலைமையில் ஒரு அணி தயாரானபோது இவள் தன்னைப் பிரிந்து நளாக்காவும் மற்றத் தோழியரும் போகப்போகிறார்களே என்று அழுதபடி சிந்தித்த நாட்கள் கடுமையானதாகவேயிருந்தது. தாக்குதலிற்குச் செல்லத் தயாரானவர்கள் கலகலப்பாகவே இருந்தார்கள். இவளிற்கு ஆறுதல் கூறித் தேற்றினார்கள்.

"நாங்கள் சாதிக்கப்போறம் சாகப் போகேல்லை'' என்று எல்லோரும் ஒரே மூச்சில் கூறிவிட்டுப் போய்விட்டார்கள். அவர்களின் நிரந்தரமான இழப்பால் அவள் நிலை தளர்ந்துபோனாள். அவர்களிற்காக அழுவது பிழையெனக் கண்டாள். கண்ணீர் உறுதியைக் கரைத்துவிடும் என்று கண்களிற்குள்ளேயே கண்ணீரைத் தேக்கினாள்.

இப்போது அவர்களின் வழியில் அவளும் ஒரு கரும்புலியாகிவிட்டாள். இவள் கரும்புலி என்ற கனவினை நெஞ்சினுள் நிறைத்துக்கொண்டு கண்களால் அதை மறைத்துக்கொண்டு விடுமுறையில் அம்மம்மா வீடு சென்றாள்.

சின்ன வயதிலிருந்து அவள் அம்மம்மாவோடுதான் வளர்ந்தவள். அம்மம்மாவைத்தான் இவள் அம்மா என்று சொல்வாள். அம்மாவும் அப்பாவும் யாழ்ப்பாணத்தில் சிலவேளைகளில் இங்கே வந்து இவளைப் பார்த்துவிட்டு போவார்கள். விடுமுறையில் வந்தபோது எல்லாம் மாற்றமாகவே இருந்தது. அம்மம்மா இறந்துவிட்டார். அவரின் இடத்தில் இப்போது சித்தியே இருந்தாள். விடுமுறைக்காலம் கலகலப்பாகக் கழிந்தது. "இஞ்ச இருட்டுக்கு பயப்பிடுகிறனி விளக்கு நூந்தாலே கத்திறனி அங்க என்னண்டு துணிவாய் நிற்கிறாய்'' என்றபோது அவள் சிரிப்பால் மட்டும் சமாளித்துக் கொண்டாள். அது வெறும் சிரிப்பல்ல அந்தச் சிரிப்புக்குள் ஏராளமான அர்த்தங்கள் இருந்தன.

"இருட்டுக்குப் பயந்தவள் வெளியில போறதென்றால் நான் அல்லது அம்மா வேணும். இவள் வீட்டுக்குள் நிற்கேக்குள்ள விளக்கு நூந்தால் வெளியில வரமாட்டாள். வெளியில நின்று விளக்கில்லாட்டி உள்ளுக்குள் போகமாட்டாள். அவ்வளவு பயம். சும்மா வெருட்டினாலே கத்துவாள்''

– துளசிச்செல்வன் –

சத்தியாவோடு சென்ற தோழிக்கு சின்னம்மா தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருந்தாள். சத்தியாவோ தன் தோழியையும் சின்னம்மாவையும் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். அந்தச் சிரிப்பு மாறாமலே விடைபெற்றுக் கொண்டாள். அந்தச் சிரிப்புக்குள் எவ்வளவோ அர்த்தங்கள் புதைந்து கிடந்தன.

அவள் எவ்வளவு துணிச்சலான போராளி. தேசப்பற்றிலும், தோழர்களது இலட்சியத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற இலட்சியத்தில் ஊறி வளர்ந்தவள். தனியே சென்று ஒரு இராணுவ இலக்கைத் தகர்ப்பதற்குக்கூட திடம் கொண்டிருந்தவள்.

31.03.2000 அன்று தாமரைக்குளம் பகுதியில் நான்கு ஆட்லறிகளை அழிப்பதற்கு வழியமைத்துவிட்டு வீரகாவியமாகினாள்.






www.eelamview.com

# இரகசிய இடைவெளி

காட்டைக்காடு மணல் வெய்யிலில் தகித்துக் கொண்டிருக்கிறது. வானம் தெளிந்து நீலமாகக் காட்சியளிக்கின்றது. ஆயினும் யுத்தமேகம் அப்பகுதியை ஆக்கிரமித்துள்ளது. மயான அமைதி மறைமுக அழுத்தமொன்றைப் பிரயோகிக்கின்றது. பகைவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட மினிமுகாமொன்று களமருத்துவ நிலையாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் பொறுப்பு மருத்துவர் பிரத்தியேக அழைப்பையேற்று பின்தளம் செல்கின்றார். ஆதலால் நிலைமைகளுக்கு ஏற்ப முடிவெடுக்கும் பொறுப்பு தன்னியல்பாக அங்கு கடமையாற்றும், அனுபவமுள்ள களமருத்துவர் என வகைப்படுத்தப்பட்ட பெண் போராளி மருத்துவர் சாந்தியிடம் சென்றடைகின்றது. தவிர்க்க முடியாமல் உருவான இச்சூழலால் அவள் சற்றுத் தடுமாறவே செய்கிறாள். களமருத்துவத்தில் அவசர அவசிய முகாமைத்துவம் என்பது இயல்பானதொன்று. ஆபத்தான காயங்கள் வந்தால் தான் எவ்வாறு செயற்படவேண்டும், எவ்வாறு ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டும் என தன்னுள் ஒத்திகை பார்க்கிறாள். அவ்வேளை கடந்த கால கள நிகழ்வொன்று ஞாபகக் கதவை திறக்கின்றது.

ஜெயசிக்குறு மூர்க்கம் பெற்றிருந்த காலத்தில் வன்னி மண்ணின் மையப்பகுதியின் பெரியமடுப் பகுதியில் பெரியமடு எனும் கிராமத்தில் களமருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பிரதான மருத்துவருக்கு உதவியாக இவள் பணியாற்றுகின்றாள். ஒருநாள் அதிகாலை மூன்றுமணியளவில் காயமொன்று வருகின்றது. போராளியொருவனின் வலது மேற்காலில் நடுப்பகுதி சிதைந்துள்ளது. அவசரமாக அவனது உடல்நிலையும் காயமும் பரிசோதிக்கப்படுகின்றது. மீளவுயிர்ப்பளித்தல் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. சிதைந்த காயத்தினூடாக தொடைநாடி துடிப்பது தெரிகின்றது. உயிர்ப்பான குருதி வெளியேற்றம் காணப்படவில்லை. கீழ் கால்பகுதியின் குருதியோட்டம் முற்றாகத் துண்டிக்கப்பட்டதற்கான அறிகுறியும் தென்படவில்லை. மீள் குருதிப்பெருக்கு ஏற்படாத வகையில் கட்டுப்போடப்பட்டுள்ளது. திரவ ஊடகம், நோநிவாரணி என்பன ஏற்றப்பட்டு வேறு வாகனத்தில் மேலதிக சிகிச்சைக்காக பின்தள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றான்.

சிறிது நேரத்தில் போன வாகனம் திரும்பி வருகின்றது. என்ன ஏதுவென்று விளங்காமல் ஓடிச்சென்று வினாவுகின்றார்கள். "இல்லை, இல்லை இன்னும் காயம் வருகின்றதாம் அதனையும் ஏற்றிப்போகட்டாம்" சாரதி கூறுகின்றான். வாகனங்களின் பற்றாக்குறை என்பது விளங்குகின்றது. அதற்காக இக்காயக்கத்தை தாமதிக்க இயலாது. "இல்லை இப்ப கொண்டுபோங்கோ மற்றதை வந்த பிறகு பார்ப்போம்" என திருப்பி அனுப்புகிறார்கள். "ச்சே... சரியாக விளங்கப்படுத்தியிருக்கவேணும் இன்னும் அரை மணித்தியாலம் பிந்தப்போகுது" மருத்துவர் தன்னுள் பேசிக்கொள்கிறார்.

குன்றும் குழியுமான பாதையில் ஊர்ந்து, காட்டில் புதிதாக வெட்டிய பாதைகளைக் கடந்து, ஒட்டுசுட்டான் பகுதியில் இயங்கும் மருத்துவமனையை காயம் வந்தடைகின்றது. அதற்குள் மேலும் மூன்று மணித்தியாலங்கள் கடந்துவிட்டிருந்தது. அங்கும் அவனுக்குத் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றது. இக் காயத்திற்குக் குருதிக்கலன் திருத்தும் பாரிய சத்திர சிகிச்சையினை மேற்கொள்ளவேண்டும். அதற்கான பிரத்தியேக வசதிகளைக்கொண்ட, காட்டினுள் மறைமுகமாக இயங்கும் இன்னொரு மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும். அதற்கு மருத்துவமனைக்குச் சென்ற வாகனம் திரும்பவேண்டும். மீண்டும் ஒரு தாமதம் ஏற்படுகின்றது. குறித்த வாகனம் வந்தவுடன் காயக்காரன் மீண்டும் பயணிக்கின்றான். இக்காயம் வருவதற்குச் சிறிது நேரம் முன்னர்தான் அவ் மருத்துவமனையின் சத்திரசிகிச்சைக்கூடம் தனது அன்றைய பணிகளை நிறைவுசெய்திருந்தது. தொடர்ந்து சுத்திகரிப்பு வேலையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. போராளிகளும் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டனர். இலத்திரனியல் ஒட்டுக் கேட்கும் கருவிகளின் உதவியால் இவ்விடம் அறிவிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக 'வோக்கி' கதைப்பதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக முன்னறிவிப்பு செய்வதும் சாத்தியம் இல்லாமல் போயிற்று. காயம் அம் மருத்துவமனையை வந்தடைய மேலும் இரண்டு மணித்தியாலங்கள் கடந்திருந்தது. மீண்டும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் காயமடைந்த காலின் இழையங்கள் தாக்குப்பிடித்து மீளத் தொழிற்படும் தன்மையை இழந்திருந்தன. சத்திர சிகிச்சையின் வெற்றியை பல காரணிகள் தீர்மானிக்கும். அவற்றில் ஒன்றான நேரம் பிந்திவிட்டிருந்தது. இரண்டாம் நாள் அப் போராளியின் வலதுகால் தொடைமூட்டுடன் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுவிட்டது. இது அனைவருக்கும் ஒரு தோல்வி மனப்பான்மையைக் கொடுத்தது. இவ்வாறான சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்காக விளக்கங்கள் கோரப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மீள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எது எப்படியோ சாதாரண செயற்கைக் கால் பொருத்த முடியாததால், அவனது நகரும் திறன் குறைக்கப்பட்டுவிட்டது.



மேற்படி அழுத்தம் தரும் நினைவுகள் அசைபோட்டுக் கொண்டிருந்தவளை விரைந்து வரும் வாகனச் சத்தம் உலுப்பிவிட்டது. அதில் முன்னர் குறிப்பிட்ட மாதிரியான காயத்துடன், அதிர்ச்சி நிலையில் ஒரு பெண் போராளி கொண்டுவரப்பட்டிருந்தாள். அவள் கண்ணிவெடிப் பகுதிக்கு பொறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவள். வேகமாக மீளவுயிர்ப்பளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இரத்தம் ஏற்றவேண்டும், ஆனால் கைவசம் இரத்தம் சேமிப்பில் இல்லை. வேறு ஒருவரில் எடுத்து ஏற்றச் சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. திரவ ஊடகம் ஏற்றி குருதியமுக்கத்தை தற்காலிகமாகப் பேணிக்கொள்கின்றாள். இரத்தப் பெருக்கை கட்டுப்படுத்தும் கட்டை சரிபார்த்துக் கொள்கிறாள். நோநிவாரணி, நுண்ணுயிர் கொல்லி மருந்துகளையும் ஏற்றுகின்றாள். காயமடைந்த இடம், கொண்டுவர எடுத்த நேரம், மேலதிக சிகிச்சைக்கு அனுப்பவேண்டிய தூரம், அதற்கு எடுக்கும் நேரம், இடையில் ஏற்படக்கூடிய தடங்கல்கள், தாமதங்கள், அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள் அனைத்தையும் கணித்துக்கொள்கிறாள். வேகமாகச் சிகிச்சை மேற்கொண்ட வண்ணம் கட்டளைகளை பிறப்பிக்கின்றாள். வாகனத்தை ரெடி பண்ணுங்கோ, வண்டியை தயாராக நிக்கச் சொல்லுங்கோ, கடற்கரையில O⁻ இரத்தத்தோட கட்டாயம் கள மருத்துவரை வந்து நிக்கச் சொல்லுங்கோ, மூன்று மணித்தியாலத்தில் கேஸ் கிடைக்கும் தியேட்டரை ரெடிபண்ணச் சொல்லுங்கோ... என மழ மழவென கட்டளைகளைப் பிறப்பிக்கிறாள். மேற்படி விடயங்களைச் சங்கேத பாசையில் அறிவித்து பதிலை உறுதிப்படுத்திக் கொள்கிறாள் அவளின் உதவியாள்.

மீண்டும் காயமடைந்தவளின் உடல்நிலையைப் பரிசோதிக்கின்றாள். காலின்கீழ் மட்டை வைத்துக் கட்டுகின்றாள். காயமுற்றவளின் உடற்தொழிலியக்கம் தாக்குப்பிடிக்கும் பொறிமுறை இன்னும் சிறிதுநேரம் செயற்படும். அது கைவிடும்போது குருதியமுக்கம் திடீரென விழும். சிறுநீரகமும், ஏனைய அங்கங்களும் நிரந்தர பாதிப்புக்கு உள்ளாகலாம். அதனைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்கிறாள். அவசர தேவைக்கான மருந்துகள் அடங்கிய பையையும், தனது துப்பாக்கியையும் எடுத்துக்கொள்கிறாள். பிக்கப் வாகனத்தில் காயத்தை ஏற்றி தானும் ஏறிக்கொள்கிறாள். அப்போது உதவிக்கு நிற்கும் போராளி கேட்கிறாள், "வேற காயம் வந்தால் என்ன செய்கிறது?" "உனக்குச் சரியெண்டுபட்டால் செய், அங்கால பொறுப்பா ஒப்படைச்சுப்போடு. ஒரு மணித்தியாலத்தில திரும்பிடுவன்" என்றவள் சாரதியிடம் சொல்கிறாள், "உங்கட வேகத்திலதான் இவள் உயிர், கால் அல்லது இரண்டும் தங்கியிருக்கு" என தலையாட்டியவள் வாகனத்தை ஸ்ராட்செய்ய அது சீறிப்பாய்கின்றது.

அரை மணித்தியாலத்தில் கண்டாவளை நீரேரியை வந்தடைகின்றாள். அங்கு படகு தயாராக நின்றது. காயத்தை மாற்றி அதில் ஏற்றினார்கள். அது வேகமாக நீரைக்கிழித்துப் புறப்பட்டது. படகு அக்கரைசேர மேலும் அரை மணித்தியாலம் எடுத்தது. மறுகரையில் மருத்துவர் சீர்மாறன் ஆயத்தமாக நிற்கின்றார். படகு கரையை அண்மித்தவுடன் படகில்வைத்தே இரத்த மாற்றீடு செய்யப்படுகின்றது. அழற்சிக்குரிய அறிகுறிகள் தென்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் மீண்டும் ஒருபைந் இரத்தம் ஏற்றுகின்றார்கள். மீண்டும் உடல் நிலையைப் பரிசோதிக்கின்றனர். மறுபக்கம் நின்ற பிக்கப்பில் ஏற்றுகின்றனர். இரு மருத்துவர்களும் வெற்றிதான் என்பதற்கு சைகையாக வலதுகைப் பெருவிரலை உயர்த்தியபடி எதிர், எதிர்த் திசைகளில் நகர்கின்றார்கள்.

சில நாட்களின் பின்னர் மேற்படி போராளியின் சத்திர சிகிச்சை வெற்றியளித்ததை உறுதிப்படுத்திக் கொள்கிறாள். அவள் உயிர் காப்பாற்றப்பட்டதுடன் அல்லது காலின் தொழிற்படு திறன் முழுமையாக மீளப்பெறப்படும் என்பதும் தெளிவானது. இது ஒரு திருப்தியைக் கொடுத்தது. எனினும் ஒரே மாதிரியான காயத்திற்குட்பட்ட இருவரில் ஒருவர் முழுமையான போராளியாகவும், இன்னொருவரின் கால் முழுமையாக இழக்கப்பட்டதற்குமான இரகசிய இடைவெளி நெஞ்சைப் பிசைகின்றது. ஆனாலும் இந்தமுறை அவர்கள் வென்றே விட்டனர்.

— தூயவள் —

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்த அழிவுகளிலிருந்து மீளும் முயற்சிகள் மறுபுறமும் ஒரேகதியில் இயங்கும் இந்நேரத்தில் இச்செயலகம் மேற்கொள்ளும் ஒவ்வொரு புதிய முயற்சியும் சூழல் தொடர்பான கேள்விகளையும் உள்ளடக்கியதாக விருப்பதும் நடைமுறைக்குகந்தது.

சூழல் நல்லாட்சி ஆணையம் என்பது தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஒரு அதிகார வலுக்கொண்ட முகாமைத்துவ சபையையும் தனக்கான துறைசார் அறிவுரைகளை, ஆலோசனைகளை வழங்கவல்ல மதியுரைஞர் அவையையும் கொண்டிருக்கும்.

இவ்வாணையத்தின் பணிகள் மூன்று வகையானவை. இவற்றினை நிறைவேற்றவென மூன்று சிறப்பான பிரிவுகளை இவ் வாணையம் கொண்டிருக்கும். சூழல் தரவுப் பிரிவென்பது தமிழர் தாயகத்தின் இயற்கை வளம், தாவரங்கள், உயிரினங்கள் உள்ளடங்கலான சூழலியல் தொடர்பான தரவுத்தளம் ஒன்றினை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும். இது ஆணையத்தின் அறிவுத்தளமாக அமையும். இரண்டாவது பிரிவான சூழல் ஒழுங்குவிதியியற்றல் பிரிவென்பது சூழல் பேணப்படுவதற்கான நியமங்களையும் விதிகளையும் உருவாக்குவதோடு அவ்விதிகட்கு ஏற்றவகையில் மக்களையும், நிறுவனங்களையும் ஒழுங்கமைக்கும் பணியினை மேற்கொள்ளும். சூழல் பற்றிய விதிகட்கமைய சமூகத்தின் நன்னடத்தையை உறுதிசெய்யும் இப்பிரிவு தனது பங்காளர்களாக வெவ்வேறு துறைசார்ந்த நிறுவனங்கள், அலகுகளோடு இணைந்து செயற்படவேண்டிய நியதியுண்டு. மூன்றாவது பிரிவாகிய சூழல் மேம்பாட்டுப் பிரிவென்பதே சூழல் நல்லாட்சியினை உறுதிப்படுத்தும் வகையில் களநிலைப் பணிகள் எல்லாவற்றையும் முன்னெடுக்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கும். மக்களிடையே விழிப்புணர்வுக்கும் பொறுப்பான அறிவுசார்ந்த நடத்தைக்குமான செயற்றிட்டங்களை இப்பிரிவு மேற்கொள்ளும்.

உலக அரங்கிலே புதியவையாகக் கொள்ளப்படும் பல்வேறு சிந்தனைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள இவ்வாணையம் எம் தாய்மண்ணின் இயற்கையையும் மக்கள் வாழும் சூழலையும் மேன்மையான நிலையில் பேணவும் எமது சமூகத்தின் இன்றைய, இனிவரப்போகும் சந்ததியினருக்கு நல வாழ்வினை உறுதிப்படுத்தவும் வேண்டுமாயின் தகைமை வாய்ந்த மக்களையும் சூழல்பற்றிய தெளிவுபெற்ற சமூகத்தையும் வளர்த்தெடுக்கும் அதேநேரத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதிகளையமைத்து மக்களனைவரினதும் பங்கேற்போடு அவற்றை அதிகாரபூர்வமாகக் கடைப்பிடித்தால் நிறைவான சூழல் நல்லாட்சி கைகூடுமென்பதில் ஐயமெதுவுமில்லை. இயற்கையை இறைவனாகக் கண்டு வந்த தமிழினம் தமது சுதந்திர தேசத்தில் இயற்கைக்கு உரிய மதிப்பிடம் கொடுத்து வாழத் தயங்காதென்பது எம் எல்லோரதும் திடமான நம்பிக்கை. எமது இருப்பு எமது இயற்கையில் தங்கியுள்ளதென்ற உண்மையை மறவாது வாழ்வோமாக. ●



www.eelamview.com

# துணை இராணுவப் படைகள்: கேள்விக் குறியாக்கப்படும் சமாதானம்



தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை நேரடியான படைத்துறை நடவடிக்கைகள் மூலமோ அல்லது நேர்மையான அரசியல் இராசதந்திரச் செயற்பாடுகள் மூலமாகவோ இல்லாதொழித்துவிட முடியாது என்பதை சிங்களதேசம் நன்கு உணர்ந்துள்ளது.

படைத்துறை ரீதியான இவ்வகைச் செயற்பாடுகள் சிறிலங்கா படைத்தரப்பை ஒரு 'தோற்கடிக்கப்பட்ட படை' என்ற நிலைக்கு மிக அண்மையில் கொண்டுவந்து விட்டபோது விழித்துக்கொண்ட பேரினவாதம் அரசியல், இராசதந்திரம் என்பவற்றின்மூலம் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை செயலிழக்கச்செய்ய முடியுமா என சிந்திக்கத் தலைப்பட்டது. அதன் விளைவே இந்த 'போர்நிறுத்த உடன்படிக்கையும்' அதனோடு இணைந்த 'சமாதானச் செயற்பாடுகளும்' ஆகும்.

இங்கும் தமிழர் தரப்பின் காத்திரமான செயற்பாடுகள் மேலோங்கி நின்றதுடன் சர்வதேச அரசியல், இராசதந்திர மட்டங்களில் அவை பெருத்த செல்வாக்கையும் வரவேற்பையும் பெற்றன. அத்துடன் தமிழர் தரப்பின் போராட்ட நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் படிப்படியாக உணரவும் தொடங்கியது. இந்த யதார்த்த நிலை சிங்கள

**சிறிலங்கா அரசு யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அதன்மூலமாக வன்செயல்கள் இடம்பெறுவதை தடுக்கவேண்டும்.**

- அமெரிக்கா, யப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத்தலைமை.

பேரினவாத அரசை பேரச்சத்திற்குள்ளாக்கியது.

தமிழர் தரப்பிற்கெதிரான தமது படைத்துறை, அரசியல், இராசதந்திரச் செயற்பாடுகள் வெற்றிபெறப் போவதில்லை என்பதை உணர்ந்த சிறிலங்கா பேரினவாதம், தமிழர் தரப்புக்கெதிராக 'நிழல் யுத்தம்' என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்தது. இதன்மூலம் தமிழர் தரப்பை வலிந்து போருக்கு இழுத்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக அவர்கள்மேல் குற்றம் சுமத்தி அதனை சர்வதேச சமூகத்தை நம்பச்செய்வதே அவர்களின் அடிப்படை நோக்கமாக உள்ளது.

அத்துடன் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தமிழர் சேனையின் தளபதிகளை வீரர்களை கொன்றொழிப்பது அவர்களது பேரவாவென்பது வெளிப்படை. மேலும் தேசப்பற்றாளர்களையும் பொதுமக்களையும் படுகொலை செய்து அதன்மூலம் மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை தோற்றுவிப்பதும் இந்நடவடிக்கைகளின் மற்றுமோர் நோக்கமாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஒட்டுமொத்த தமிழர் சமுதாயத்தைப் பலவீனப்படுத்தி அவர்களின் நியாயபூர்வமான உரிமைப்போரை நசுக்கிவிட சிங்களப் பேரினவாதம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிழல் யுத்தத்தில் சிறிலங்கா அரசால் பேணி வளர்க்கப்படும் தேசவிரோத ஆயுதக் குழுக்கள் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவுகளால் பயன்படுத்தப்பட்டு வருவது மிக வெளிப்படையான விடயமே. இத்தகையோரில் அநேகர் சிறிலங்காவின் படைத்துறை துணைப்படைப் பிரிவுகளில் இணைக்கப்பட்டு படைத்துறை வேதனம் பெற்று வருவது ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. குறிப்பாக சிறிலங்காவின் 9வது துணைப்படைப்பிரிவு (9 SLNG) பெரும்பாலும் 'ராசிக்' குழுவினரை கொண்டிருந்தது என்பதும் அவர்களுக்கு சிறிலங்காவின் படைத்துறை நிலைகளும் வழங்கப்பட்டதுடன் (தற்கொடைத் தாக்குதலொன்றில் ராசிக் கொல்லப்பட்டபோது சிறிலங்கா அரசால் 'லெப்டினன்ட்' நிலை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது) அவர்கள் கொல்லப்படும் சந்தர்ப்பங்களில் சிறிலங்கா தேசியக்கொடியால் போர்த்தப்பட்டு சிறிலங்கா படைத்துறை "மரியாதை' வழங்கப்பட்டமையும் நாம் அறிந்ததே.

அதேபோல் ஈ.பி.டி.பி(EPDP) தேசவிரோதக் கும்பலும் சிறிலங்கா அரசால் துணைப்படைக் கட்டமைப் பொன்றுக்குள் வைத்து பேணப்படுவதுடன் இவர்களுக்கான வேதனம், ஆயுதம், வாகனம் என்பவை துணைப்படை என்ற வகையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர புளொட் (PLOTE), ஈ.பி.ஆர்.எல்.எவ் (EPRLF) போன்ற குழுக்களும் தேசவிரோதச் செயற்பாடுககளில் சிறிலங்கா அரசால் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. மேலும் சிறிலங்கா அரசு மோகன்குழு, வரதன் குழு, நிதிகுழு, அவர்குழு இவர்குழு என்று பல்வேறுபட்ட துரோகக் குழுக்களை உருவாக்கி தமிழருக்கெதிரான நடவடிக்கைகளில் அவற்றை ஈடுபடுத்தி வந்தமை ஒன்றும் அறியாத விடயங்கள் அல்ல.

இத்தகைய குழுக்களைப் பயன்படுத்தி சிறிலங்கா பேரினவாத அரசுகள் தமிழ்மக்கள் மீது இழைத்த கொடுமைகள் மிகப் பயங்கரமானவை.

அவ்வகையில் சிறிலங்கா அரசு தன் புலனாய்வுத்துறையைக் கொண்டு கருணாகுழு என்ற ஒன்றை உருவாக்கி தற்போது நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருவதும்இ இந்தியாவில் இருந்து ENDLF தேசவிரோதக் குழுவை இறக்குமதி செய்திருப்பதும் அண்மைக்கால நிகழ்வுகள்.

சிறிலங்கா புலனாய்வுத்துறையால் தேசவிரோத ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி போராளிகள் மீதும் மக்கள் மீதும் படுகொலைத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு நடத்தப்படும் தாக்குதல்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே படைமுகாம்களுக்கு அருகிலேயே இடம்பெற்று வருவதும் தாக்குதல் நடத்துபவர்கள் தாக்கிவிட்டு இராணுவ முகாம்களுக்குள் ஓடி ஒளிந்துகொள்வதும் இரகசியமான விடயங்கள் அல்ல. சிறிலங்கா படைத்துறை மற்றும் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு என்பவற்றின் வழித்துணையோடு 40இற்கு மேற்பட்ட போராளிகள் பயணித்த பேரூந்து மீது வெலிகந்த பகுதியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டமை ஒன்றும் தற்செயலான சம்பவமல்ல.

இத்தகைய செயற்பாடுகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கேள்விக்குள்ளாக்கி நிற்கின்றன எனவும், இவை தொடருமானால் சிறிலங்கா அரசு மிக மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் எனவும் தொடர்ந்தும் பொறுமை காத்தபடி தமிழர் தரப்பு சுட்டிக்காட்டி வந்துள்ளது. மாறாக சிறிலங்கா அரசோ இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்துகொண்டு தமக்கும் இதற்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனக் கூறி முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைக்கும் வேலையைத் தொடர்ந்தும் செய்துவருகிறது.

சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள், அதற்கு தமிழர் தரப்பிடம் இருந்து வெளிப்படுத்தப்படும் உணர்வுகள், செயற்பாடுகள் இவற்றால் ஏற்படப்போகும் விரும்பத்தகாத விளைவுகள் என்பவற்றை கருத்தில் எடுத்த சர்வதேச சமூகம் அண்மையில் சிறிலங்கா அரசுக்கு அழுத்தமான எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இவ் எச்சரிக்கையில் தமிழர் தரப்பிற்கெதிரான நிழல் யுத்தத்தை நிறுத்த சிறிலங்கா அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அத்துடன் ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்களைக் களையப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைந்த தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றிடம் இருந்துவந்த வழமைக்கு மாறான எதிர்பாராத இந்த எச்சரிப்பு சிறிலங்கா அரசுக்கு பலத்ததோர் அடியாகும் என்பதில் ஐயமில்லை. இவ்விடயம் சிறிலங்கா அரசின் ஏமாற்று வித்தைகளையும் பொய்யுரைகளையும் வஞ்சகத் தனங்களையும் இனியும் சர்வதேச சமூகம் நம்பத் தயாரில்லை என்ற உறுதியான செய்தியொன்றை சிறிலங்காவிற்கு இடித்துரைத்துள்ளது.

**'சிறிலங்காவில், அரச படைகளாலும் அதனுடன் இயங்கும் கூலிப்படைகளாலும் அரச அங்கீகாரத்துடன் மக்கள் தொடர்ந்தும் கொன்று குவிக்கப்படுகின்றனர்.'**

- ஐ.நா மனித உரிமை உபகுழுவின் 51வது கூட்டத்தொடரில் சர்வதேச நம்பிக்கைகள் அமைப்பைச் சேர்ந்த - **திருமதி.டியற்றி மக்கேனல்**

**சிறிலங்காவில் இராணுவமும் துணைப்படைகளும் ஒருவகையான நிழல் யுத்தமொன்றை நடாத்துகின்றன.**

- மனித உரிமைகளுக்கான ஐ.நா உபகுழுவில் - **கரேன் பார்க்கர்** -

இந்த எச்சரிக்கைக்கு அவசர அவசரமாகப் பதிலளித்த சிறிலங்காவின் ஜனாதிபதி தங்களிடம் எந்தவித துணைப்படைக் குழுக்களோ அல்லது ஆயுதக் குழுக்களோ இல்லை எனவும் அவற்றுக்குத் தாம் ஆதரவு வழங்குவதில்லை எனக் கூறியமை ஒரு தேசத்தின் தலைமைக்குரிய அடிப்படை தார்மீகத் தகைமைகூட சிறிலங்கா அரசுத் தலைவர்களிடம் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது.

இந்நிலையில் அண்மையில் ஊடகமொன்றிற்கு செவ்வி வழங்கிய சிறிலங்கா 'சமாதான' செயலகப் பணிப்பாளர் கூறியிருந்த விடயம் கேலிக்கூத்தானது மட்டுமன்றி சமாதானம் தொடர்பான சிங்கள பேரினவாதத்தின் உண்மையான மனப்பாங்கையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. 'கருணா குழுவின் ஆயுதங்களைக் களைய அரசு ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது. ஆழமான காட்டுப் பகுதிக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்கத்திற்கு நெருக்கடியாக அமையும். கருணாகுழு என்பது ஒரு ஆயுதக் குழுவல்ல. போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன் அவ்வாறு இருக்கவில்லை.'

**- சுடரவன் -**

இங்கு திரு.ஜயந்த தனபால கூற்றுப்படி கொழும்பு கொட்டாவை பகுதி ஆழமான காட்டுப்பகுதியாகிறது. பொலநறுவை மாவட்ட வெலிக்கந்தை பகுதியின் எல்லைக் கிராமங்கள் அடர்ந்த காடுகளாகிவிட்டன. இது பறவாயில்லை. 'கருணாகுழு ஒரு ஆயுதக் குழுவல்ல' என்ற அவரின் கண்டுபிடிப்பும் அவற்கான அவரின் வியாக்கியானமும் அற்புதமானவை. சிறிலங்கா பேரினவாதிகளின் எண்ணப்பாடுகள் என்றும் மாறப்போவதில்லை என்பதற்கு இந்த 'சமாதான' பணிப்பாளரின் சமகாலக் கூற்று தக்கதொரு எடுத்துக்காட்டாகும்.

எது எவ்வாறு இருப்பினும் சிறிலங்கா அரசு ஆரம்பித்துவைத்த நிழல் யுத்தம் அது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளையே தந்து கொண்டிருப்பது வெளிப்படை.

சிறிலங்கா அதன் நிழல் யுத்தத்தை நிறுத்திக் கொள்ளாதவரை, ஒட்டுப்படைகளை மடியில் கட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்கும்வரை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் சமாதானம் சாத்தியப்படக் கூடியதொன்றல்ல என்பதே யதார்த்தமாகும். ●



www.eelamview.com



# சின்ன வெளிச்சமல்ல சூரியனே எமக்கானது

“அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
இச்சகத்திலோர்களெல்லாம்
எதிர்த்துநின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே”

என்னில் ஏறிப்போவெனக் கூறி
காலமெனும் நதி பெருகி வந்து
எம் காலடி கிடக்கிறது.
முற்றிச் சரிந்த வயல்
அறுவடைக்கு வாவெனச் சொல்லி
பரந்து கிடக்கிறது முன்னே.
காற்றும் நெல்தூத்தும் பதமாய்
வீசத் தொடங்கியுளது.
வலசை வரும் பறவைகள் கூட
உமக்கான காலமிதுவெனச் சொல்லி
எம் முற்றம் சுழன்றுபோகின்றன.
இனியும் திண்ணைக்குந்தில் இழிந்து
இருந்தோமெனில் காலம் பழிக்கும்.
இது அறுவடைக்கான காலமெனக் கருதி
கட்டிய கச்சை வரிந்து
வயலில் இறங்குவோம்.
கையில் கதிரருவாள் ஏந்திய பெண்களும்
இடுப்புச் சேலையிறுக்கி
இறங்குக வரம்பில்.
மினுங்கும் மின்மினிப் பூச்சிகளின்
சின்ன வெளிச்சத்தில் மயங்கியது போதும்.
இனிச் சூரியனே கையில் வேண்டும்.
சோதிப் பெருவெளிச்சம் வேண்டும்.
‘இறுதிப் போரைத் தொடங்குக’ என்று
ஆங்காங்கு எழும் குரல்களை ஒன்றாக்கி
ஆழிப்பேரலை இணக்கி
பகைவனின் வரம்புடைத்துப் புகுவோம்.
உலகெங்கும் உருண்ட விடுதலைத் தேர்களின்
அச்சாணி உடைத்தனர்.
மூசியிழுத்த குதிரைகளின் கால்கள் உடைத்தனர்.
சமாதானப் பேச்சென்ற தண்ணீர் காட்டி
தாகம் தணிப்பதாய் சொல்லி
சமரசச் சேற்றில் தள்ளி விழுத்தினர்.
யுத்தமற்ற உலகு செய்வதாய் ஒப்புச்சொல்லி
எத்தனை விடுதலை நாகங்களை
மகுடியூதி மயங்கச் செய்தனர்.
அத்தனையும் அடக்கினோமெனும் மமதையில்
எங்கள் ‘உயிர்தீயின்’ மீதும் இறங்கினர்.
முந்நூறு வருட முதுகுக்கூனல் தொலைத்து
முப்பது வருடமாய் நிமிர்ந்தோம்.
மீண்டும் எம்மைக் குனியச் செய்யவும்
முதுகில் குதிரையேறவுமே
மூன்று வருடமாய் நடக்கிறது
சமாதானமெனும் ‘சறுக்கீஸ்’ விளையாட்டு.
எண்ணை பூசிய கம்பத்தில் ஏறி
எங்களைக் கொடியேற்றட்டாம்.
மாயப்பொய்கை இறங்கி நீராடி
மலர்கள் பறித்து வரட்டாம்.
கேணயன் கையின் கேள்வரகுக் கூழுக்காக
கோமணத்தையும் அவிழ்த்தெறியட்டாம்.
இது எலிபிடிக்கும் ‘தர்மப்பொறி’
உள்ளே சுட்டுவைத்துள்ளனர் தேங்காய்ச் சொட்டு.
வாசத்தில் மதிமயங்கி
ஆசைகொண்டு உள்ளே போனால்
நாசம் வருமென நம்படா தமிழா.

நகரும் ஒவ்வொரு மணித்துளியும்
எம்மில் முதுமைபரத்துகிறது.
என்னதான் சொன்னாலும்
முதுமைமூச்சுத்திணறவே வைக்கும்.
தருவதை வாங்கிச் சாப்பிடச் சொல்லும்.
தூக்கிய தலைமுறையும்
சுடர்ந்தொளிரும் இளமையுமே
பயணம் முடிக்கப் பக்குவமானது.
ஈழத்தமிழருக்கான வாழும் உரிமையை
இந்தத் தலைமுறைதான் எடுத்தாக வேண்டும்.
உலகம் வந்தெமது ஊர்புகுந்து
அழகிய பொருட்களின் கடைவிரித்துளதால்
இளைய தலைமுறை எடுபடத் தொடங்கியது.
இதுதான் ஆபத்தின் ஆணிவேர்.
நேற்றைய நிகழ்வுகளை மறந்து
நிகழ்காலத்தின் தலைவருடலில்
பூக்கத் தொடங்கியுள்ளது புதிய தலைமுறை.
அவர்களைக் கூட்டி நடக்கத் தவறுவோமெனில்
ஊட்டி வளர்க்காத பாவியராவோம்.
கரைவந்திருந்து பாடும்
வண்ணக் குருவிகளின் மாயக்குரலில்
வசமிழந்து போகாமல்
தொடர்ந்து நடப்பதே எமக்கான பணி.
குனிவற்று பணியேற்றுக் கொள்வோம்.
எரிதழல் கொண்டுவா தம்பி
இருளகற்றி வெளிச்சம் செய்வோம்.
உயரும்
இல்லையேல் குருதியில் சுடரும்
எம் தேசியக்கொடி.
இந்நாள் வரை எம் உதடுகள் உச்சரித்த
‘தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்’
பொய்யில்லா வாசகமென்பதை
வையம் விரைவில் கணக்கில் வைக்கும்.
சாவுக் கணக்கின் வழிநடப்போம்.
சுதந்திர நெருப்பில் சுடரெடுத்து
எல்லோர் கைகளிலும் பொறிவைப்போம்.
மூண்டு பிரகாசமாகட்டும்.
ஈழத்தமிழரின் இன்னலகற்றவென
காலமருளிய கைவிளக்கின் ஒளியில்
பாதை தெளிவுறும்.
உலகக் கரைகளிலொதுங்கிய உறவுகள்
எட்டித் தொடுவர் எம்மை.
அருச்சுனனின் காண்டீப நாதம் போல
ஒன்றாகிய ஈழத்தமிழரின் சபதஒலி
உலக முகடுகள் உடைக்கும்.
எம் தலைவன் மூச்சுக் காற்றின் சுழிப்பில்
எம்மைமூடிய இருள் விதானம்
இடிந்து சரியும்.
நகரும் ஒவ்வொரு நொடியும் நமக்கானது.
விரையும் ஒவ்வொரு அடியும் நமக்கானது.
மாயத் துகிலுடுக்கா மனிதர்களாக
தீகொண்டு ஒளிரும் தமிழர்களாக
விடுதலைக்கு விலைகொடுக்கும்
விஸ்வரூபங்களாக
பகை முன்னே நிமிர்வோம்.
எந்தப் பலமெனினும்
எம்முன்னே சிறு துரும்பு
எந்த உலகெனினும்
எம் முன்னே சிறு எறும்பு.
தமிழரின் தேசியம் வேரோடும்
தலைவனின் காலம் போராடும்
புதியதோர் நாமம் நமதாகும் ■

உலைக்களம்

வியாசன்